பெப். 28 - . மார்ச் 06, 2010 Feb 28 - March 06, 2010 பக்கங்கள் - 28 25.00

# சுடர் ஒளி

THE SUDAROLI
வார மலர்
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA



# பகற்கனவு நிறைவேறுமா?

வெட்கம்,சூடு, சுரணை, கொள்கை என்பவற்றையெல்லாம் மூடை கட்டித் தூர எறிந்துவிட்டு, புதிய அரிதாரங்களை பூசிக்கொண்டு தேர்தல் நாடகத்தில் பங்கேற்க அரசியல் நடிகர்கள் முழுவீச்சோடு அரங்கிற்கு வந்தே விட்டார்கள். இனி என்ன? பட்டிதொட்டியெல்லாம் வசைபாடும் சொற்களின் அணிவகுப்புகள் அலங்கரிக்கத் தொடங்கும். சும்மா கிடந்த மதில்களில் எல்லாம் வர்ணப் பூச்சுக்களோடு பொய்வாக்குறுதிகளை ஏந்திக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகளின் சிரித்த படங்கள்- சந்திசிரிக்கும்



அளவுக்கு- குடியிருக்கத் தொடங்கும். விதவிதமான வர்ணப்பூச்சுக்களின் புள்ளடி அடையாளங்களும் இலக்கங்களும் சின்னங்களும் வீதியெங்கும் வரையப்படும். மக்களின் சொத்து, பொதுச்சொத்து என்ற வேறுபாடு எதுவுமில்லாமல் எல்லாமே தேர்தலுக்காக வீணடிக்கப்படும். தண்ணீராய் பணம் வாரி இறைக்கப்படும். சில வேளைகளில் தலைவர்களுக்காக தமக்குள் முரண்படும் தொண்டர்கள் ஆங்காங்கே அடிபட்டுச் சாகவும் கூடும். (தேர்தல் முடிந்த கையோடு இவர்கள் யாருக்காக அடிபட்டுச் செத்தார்களோ அதே தலைவர்கள் ஒன்றாக இணைவது வேறு கதை) இன்னும் ஒரு மாதத்துக்கு இந்தக் கூத்துக்களை அப்பாவிப் பொது மக்கள் சகித்துத் தான் ஆக வேண்டும்.

தேர்தலின் போது அரசியல்வாதி நடிகர்களின் பாத்திரங்களும் காட்சிகளும் வேறுபடக்கூடும். ஜனாதிபதித் தேர்தலில் ஒன்றாய் நின்றவர்கள் எல்லாம் இம்முறை கன்னை பிரிந்து ஒருவரைஒருவர் எதிர்த்து நிற்பர். ஜனாதிபதித் தேர்தலில் பிரிந்து நின்ற சிலர் இப்போது ஒன்றுபடவும் செய்வர். அரசியலில் மிகவும் பழக்கப்பட்டுப்போன வாடிக்கையான விடயமாக இது இருந்தாலும், தமிழ் மக்களைப்பொறுத்தவரையில் அவர்களது அரசியல் இலக்குகள் ஓரளவுக்காவது எட்டப்படுவதை இத்தகைய 'யாரி பிரிதல்' நடவடிக்கைகள் பிற்போடவே உதவப்போகின்றது. தமிழ் மக்களின் பேரம்பேசும் அரசியல் சக்தியாக எந்த வொரு அமைப்பும் இப்போது இல்லை. தமிழ்த்தேசிய கூட்டமைப்பானாலும் சரி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியானாலும் சரி, தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியானாலும் சரி இவையெல்லாமே ஒருவித அதிஷ்டத்தை நம்பிய தொங்கு பொறி அரசியல் பின்புலத்தையே கொண்டிருக்கின்றன. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்களின் ஒட்டு மொத்தக் கருத்தியலிலும் உண்டான 'மாற்றம் வேண்டும்' என்ற நிலைப்பாடே தமிழர் பிரதேசங்களில் பொன்சேகா அதிகளவான வாக்குகளைப் பெற பிரதான காரணம். இதை வைத்துக்கொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பலத்தால் தான் பொன்சேகாவுக்கு இத்தனை தூரம் சிறுபான்மையினரின் ஆதரவு கிடைத்தது என்று சொல்வது தர்க்க பூர்வமாக சரியாகாது. அப்படிப் பார்த்தால் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களிலும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு இல்லாத பிரதேசங்களிலும் பொன்சேகாவால் எப்படி வெல்ல முடிந்தது? ஆக மொத்தத்தில் தமிழர் பிரதேசத்தில் பொன்சேகா பெற்ற வெற்றியில் சிறுபங்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு உண்டே தவிர அந்த வெற்றிக்கு தானே முழுக் காரணம் என அக்கட்சி உரிமைகோர முடியாது. இதேவகையில் தான் தமிழ்மக்களின் உண்மையான அரசியல் பிரதிநிதிகள் தாம்தான் என கூறிக் கொண்டிருந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு யாழ். மாநகரசபைத் தேர்தலில் கிடைத்த மயிரிழை வெற்றியும், ஜனாதிபதித் தேர்தலில் தாம் ஆதரித்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமிழ்ப் பிரதேசங்களில் கிடைத்த சொற்பமான வாக்குகளும் அவர்களின் அந்தரத்தில் மிதக்கும் அரசியல் தனத்தை வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளது. வடக்கில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு கிடைத்த அதே அனுபவம் தான் கிழக்கில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும் ஏற்பட்டிருக்கின்றது. ஆக மொத்தத்தில் தம்முடைய அரசியலை கட்சிகள் தீர்மானிக்க முடியாது; தாமே தீர்மானிப்போம் என்கின்ற வகையிலான ஒரு செய்தியையே ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகளுக்கு மக்கள் வழங்கியிருந்தார்கள்.



இந்தச் செய்தியை தமிழ்க்கட்சிகள் சரியானபடி உள்வாங்கினால் மட்டுமே தம்முடைய அரசியல் இருப்பினை உறுதிசெய்துகொள்ள முடியும். அதற்கான மிகச் சரியான களமாக நாடாளுமன்றத் தேர்தல் இருக்கப்போகின்றது. வடக்குக் கிழக்கில் இம்முறை வழமையைவிடவும் பல்முனைப்புடன் கூடிய போட்டியை தேர்தல் களம் சந்திக்க இருக்கின்றது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தன்னுடைய நாடாளுமன்றத்தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவாலும் சில பின்னணிக் காரணிகளாலும் இரண்டாகப் பிளவுபட்டிருக்கின்றது. இது கூட்டமைப்பின் வாக்குவங்கிக்கு தாக்கத்தை உண்டு பண்ணவே செய்யும். ஆயினும் அதனை ஈடுசெய்யும் வகையில் வாக்குப்பலம் நிறைந்த சில புதிய முகங்கள் கூட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டிருக்கின்றனர். இதனால் மாபெரும் சரிவில் இருந்து கூட்டமைப்பு தப்பித்துக் கொண்டாலும் சென்றமுறையைக் காட்டிலும் குறைவான ஆசனங்களையே இம்முறை பெறமுடியும் என்பதே பலரின் கருத்து. கூட்டமைப்பில் இருந்து பிரிந்து தனித்தவில் வாசிக்கத் தொடங்கியிருக்கும் சிவாஜிலிங்கமும் ஸ்ரீகாந்தாவும் தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்ற பெயரில் ஓர் அமைப்பை ஆரம்பித்திருக்கிறார்கள். இக்கட்டுரையை நீங்கள் படித்துக்கொண்டிருக்கும் போது இந்த அமைப்பிலோ"அல்லது தமிழ்க்காங்கிரஸிலோ செ. கஜேந்திரனும், பத்மினி சிதம்பரநாதனும் வேட்பாளர்களாக இறக்கப்பட்டிருப்பார்கள். இவ்வாறு கூட்டமைப்பில் ஒன்றாய் இருந்தவர்கள் திசைக்கொன்றாய்ச் சிதறி எதிர் எதிர் முகாம்களில் நின்று மல்லுக்கட்டுவதால் தமிழ் மக்களின் வாக்குகள் நாலாபுறமும் சிதறப்போகின்றன.



இதுதவிர ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் இம்முறையும் வேறு வழியின்றி வெற்றிலையிலேயே போட்டியிடப் போகின்றது. மாநகரசபைத் தேர்தலில் அக்கட்சிக்கு அரும்பொட்டான வெற்றி கிடைத்தமைக்கு வெற்றிலையில் போட்டியிட்டமையே காரணம் என அக் கட்சியின் ஆதரவாளர்கள் பலரும் தெரிவித்திருந்தனர். வழக்கம் போல வீணைச் சின்னத்தில் ஈ.பி.டி.பி வாக்குகளைக் கோரியிருந்தால் இன்னும் அதிகப் படியான வெற்றியைப் பெற்றிருக்கலாம் என்பது அவர்களது

**-பிரமன்**

கருத்து. ஆனாலும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் பகுதிகளில் ஏற்பட்ட பெரும் பின்னடைவு அவர்களது பேரம் பேசும் சக்தியை வெகுவாகக் குறைத்து வெற்றிலையிலேயே போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர்களுடன் இணைந்தே ஈ.பி.டி.பி களமிறங்கியுள்ளது. அத்துடன் ஐக்கியதேசியக் கட்சியும் வட பகுதியில் ஆசனங்களைப் பெற வேண்டும் என்ற நோக்கோடு மகேஸ்வரனின் துணைவியார் மற்றும் முக்கிய வர்த்தகர்கள் சிலரோடு தேர்தல் களத்தில் ஆரோகணிக்கவுள்ளது. எப்படியும் ஐக்கியதேசியக் கட்சி குறைந்தது ஓர் ஆசனத்தையாவது கைப்பற்றும் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்நிலையில் வழமையை விடவும் தமிழர் பகுதிகளில் போட்டி பலமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் தமிழர்கள் தம்முடைய வாக்குப்பலத்தை ஒரே இடத்தில் மையப்படுத்த முடியாதநிலையே தோன்றப்போகின்றது. ஒவ்வொரு கட்சியும் ஆசனங்களைப் பெற வேண்டும், அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்பதையே மனதில் கொண்டுள்ளனவே தவிர மக்களின் பலத்தை ஓரணியில் வெளிப்படுத்த வேண்டும் என்ற பிரக்ஞையை சிறிதளவேனும் கொண்டிருக்கவில்லை.

ஆயுதப்போராட்டம் ஒன்றினை நடத்தி தோற்றுப் போன சமூகமாக இருக்கும் தமிழ் மக்கள் அரசியல் ரீதியான போராட்டத்திலாவது வென்றால் மட்டுமே தன்னுடைய இருப்பினை சம அந்தஸ்தோடு இந்த நாட்டில் தக்க வைத்துக்கொள்ள முடியும். ஆனால் அதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளில் தமிழ்க் கட்சிகள் ஈடுபடும் அறிகுறியே இல்லை. மேலும் மேலும் இக் கட்சிகள் சிதைவடைந்து கொண்டே செல்கின்றனவே தவிர ஐக்கியப்படுவதற்கு அவை தொடர்ந்தும் தயக்கம் காட்டியே வருகின்றன. முதலில் அரசியல் கட்சிகள் ஒன்றுபட வேண்டும். அதன்பின்னரே தமிழ் மக்களின் ஒருமித்த அரசியல் பலத்தை வெளிப்படுத்த முடியும். இந்தப் பகற்கனவைக் கற்பனை செய்யும் போது நன்றாகத்தான் இருக்கின்றது. ஆனால் அது நிறைவேறாது என்பதும் நிச்சயமானதொன்று தான்.

## அவலங்களைப் பகிர்ந்துகொள்வோம்

வன்னியில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அங்கிருந்த எமது மக்கள் அனுபவித்த அவலங்கள் சொல்லில் அடக்கமுடியாதவை. அந்தப் பேரவலங்களை எதிர்கொண்டு இப்போது அகதிமுகாம்களில் வாடும் எமது உறவுகள் தமது அந்த அனுபவங்களையும் அதனால் ஏற்பட்ட உணர்வுகளையும் ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான களத்தைத் திறந்து விடுகிறது உங்கள் 'சுடர் ஒளி'.

எழுதுங்கள்!

உங்கள் அவலங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்!!

உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:
'உயிர் வலிக்கும் கணங்கள்'
சுடர்ஒளி வாரமலர்,
இல. 85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# மஹிந்த ராஜபக்ஷவுக்கான வெற்றி வாய்ப்புக்கள்




தமக்குச் சாதகமான சூழலை உருவாக்கவே எந்த ஆட்சியாளரும் விரும்புவது இயல்பு. இதற்காக அவர்கள் பல தந்திரோபாயங்களையும் சூழ்ச்சிகளையும் செய்வார்கள். எதிர்த்தரப்புக்களை வெட்டிச் சரிப்பார்கள். உடைத்துச் சிதறடிப்பார்கள். காய்களை நகர்த்துவார்கள். ஆதரவை உருவாக்குவார்கள். இன்றைய அறிவு மயப்பட்ட நவீன உலகிலேயே- கணனித்தரவுகளிலேயே குழறுபடிகளைச் செய்யும் அரசியல் முறைமை வெகுபிரசித்தமாகியுள்ளது. இதற்கு அமெரிக்காவும் விதிவிலக்கல்ல. இந்தியாவும் தவறவில்லை. தேர்தல்களுக்குக் கண்காணிப்பாளர்கள் இன்று அவசியம் தேவை என்பது எதைக் காட்டுகின்றது? அந்த நாட்டில் ஜனநாயகம் இல்லை என்பதைத் தானே! மோசடிகள் நடக்கும் என்பதையல்லவா!

இந்தமாதிரி நிலைமை இன்று இலங்கையில் மேலும் வளர்ச்சியடைந்திருக்கிறது. இப்போது ஆட்சியில் இருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்குச் சார்பாகவே வியூகங்களை வகுப்பதிலும் எதிர்த்தரப்பை உடைத்து சிதறடிப்பதிலும் வல்லவர். குறிப்பாக எதிர்த்தரப்பைப் பலவீனப்படுத்துவதில் இப்போது அவர் மகா வல்லவர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது மஹிந்த ராஜபக்ஷ மிகக் குறைந்தளவு பெரும்பான்மையே பெற்றிருந்தார். ஒரு பலவீனமான நிலையிலேயே அவருடைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தது. ஆனால், பின்னர் அவர் தனக்கு முன்னே- எதிர்த்தரப்பிலிருந்த கட்சிகளிலிருந்து பல உறுப்பினர்களைக் கவர்ந்திழுத்தார். சிலரை ஏனைய கட்சிகளிலிருந்து உடைத்தெடுத்தார். இதன் விளைவாக எதிர்க் கட்சிகளே பலவீனமாகின. இதில் ஒருவாறு தப்பிப்பிழைத்திருந்தது த.தே.கூட்டமைப்பு மட்டும்தான்.

கடந்த நாடாளுமன்றத்தின் ஆட்சிக் காலத்தில் இருந்து இதுவரையான ஐந்தாண்டுக் காலத்தில் ஜே.வி.பியும் ஐ.தே.கவும் தம்மை மீள் நிலைப்படுத்தவும் இல்லை. புதிய வியூகங்களை வகுப்பதற்கான ஆயத்தங்களுடனும் இருக்கவில்லை. இது இந்த இரண்டு கட்சிகளினதும் இயலாமையைத் தெளிவாகவே காட்டுகின்றது. அதுமட்டுமல்ல கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சிகளின் சார்பில் ஓர் உருப்படியான வேட்பாளரை இவற்றால் நிறுத்தமுடியவில்லை. இறுதியில் சரத்துக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் எதிர்பாராமல் நடந்த முரண்பாடுகள்தான் இவர்களால் ஒரு வேட்பாளரைக் கண்டுபிடிக்க உதவியது.



விமல் வீரவன்ச

ஆனால், சரத்தின் கைது மீண்டும் இந்தக் கட்சிகளின் இயலாமையை வெளிக்கொண்டுவந்துள்ளது. இப்போது ஜே.வி.பி, சரத்தை தன் வசப்படுத்தியுள்ளது. விமல் வீரவன்சவை

**- அருள் மனோகரன்**

இழந்த பின்னர் அந்தக் கட்சிக்கு ஒரு சிறு ஆறுதல் இப்போது சரத் பொன்சேகாதான். சரத்தை ஜே.வி.பி தன்வசப் படுத்தியிருப்பதால் ஐ.தே.கவின் நிலைமை இன்னும் மோசமாகியுள்ளது. ரணிலின் நிலை இதில் இன்னும் மோசமானது. இதைவிட ஜே.வி.பி, ஐ.தே.க கூட்டும் ஒரு மாதத்தினுள்ளேயே முடிவுக்கு வந்துவிட்டது.

இவையெல்லாம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெற்றிவாய்ப்புக்களையே அதிகரிக்க செய்யும் விடயங்கள். ஒரு மாதத்தினுள்ளேயே கூட்டு உடைந்திருப்பதும் ஆளை ஆள் குற்றம் சாட்டுவதுமாக ஜே.வி.பியும், ஐ.தே.கவும் முரண்பட்டு இருப்பது மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிடைத்திருக்கும் பெரும் வாய்பாகும். அவர் சும்மா இருந்துகொண்டே வெற்றி பெறுவதற்கான சூழலை இந்த நிலைமைகள் உருவாக்குகின்றன. மக்களுக்கு எதிர்க் கட்சிகளின் மீது நம்பிக்கை குறையப் போகிறது. இது மஹிந்த ராஜபக்ஷவின் மீது மக்கள் நம்பிக்கை வைப்பதற்கான சூழலையே உருவாக்கியுள்ளது. அத்துடன் ராஜபக்ஷ குடும்பத்தின் மீது வைக்கப்பட்டு வரும் அத்தனை குற்றச்சாட்டுக்களையும் பொய்யாக்கி, அவர்களை விடுவிக்கவும் போகிறது.

என்னதான் அக முரண்பாடுகள் இருந்தாலும் பொது எதிரி என்று வரும்போது அதற்காக அவற்றை விட்டுக்கொடுத்து அந்தப்பொது எதிரியை தோற்கடிக்க வேண்டும் என்பார்கள். ஆனால், இங்கே நிலைமை வேறாக இருக்கிறது. பொது எதிரியைக் காப்பாற்றும் விதமாக தங்களின் அக முரண்பாடுகளைப் பெரிதுபடுத்திக் கொண்டிருக்கின்றன இந்தக் கட்சிகளும், இந்தத் தலைமைகளும்.



சரத் பொன்சேகா

இதைப்போல மனோ கணேசனுக்கும் ரணிலுக்கும் கடந்தவாரம் நிகழ்ந்த முறுகல், தமிழ் தேசியக்கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸூம் இணைந்து தேர்தலுக்கு முகம் கொடுப்பதென்ற திட்டமும் சத்தமின்றிக் கைவிடப்பட்டுவிட்டது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யானைச் சின்னத்தில் இணைந்து கொண்டது. த.தே.கூட்டமைப்போ உடைந்து சிதறி நான்கு அணிகளாகி விட்டது. இவ்வளவு காலமும் தாக்குப்பிடித்து வந்த கூட்டமைப்பு இப்போது சிதறிவிட்டது. இந்த நிலைமைக்கு அதன் தலைமை மீதே பகிரங்கமாக பல குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

ஆக மொத்தத்தில் த.தே.கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.க, ஜே.வி.பி ஆகிய இந்த நான்கு கட்சிகளின் தலைமைகளும் விட்ட மாபெரும் தவறுகள் மகிந்த ராஜபக்ஷவைப் பலப்படுத்தியிருக்கின்றன. மகிந்த ராஜபக்ஷவையும் அவருடைய சகோதரர்களையும் குற்றச்சாட்டுகளிலிருந்து காப்பாற்றியிருக்கின்றன.

இதில் கவனிக்க வேண்டிய இன்னொரு முக்கிய விடயமும் உண்டு. இந்தக் கட்சிகள் இப்படிச் சிதைந்தும் தடுமாறியும் கொண்டிருக்கையில் மறுபக்கத்தில் ஜனாதிபதி பல கட்சிகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழே கொண்டு வந்திருக்கின்றார். ஈ.பி.டி.பி போன்ற கட்சிகளும் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மபாவா) அணி போன்ற தமிழ்க்கட்சிகளும் வெற்றிலைச் சின்னத்தில் கேட்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

சுருக்கமாகச் சொன்னால், இப்போது இலங்கைத்தீவில் ஆளுமைமிக்க, விவேகம் நிறைந்த தன்னம்பிக்கையுடைய தலைவர்கள் எவரும் தமிழ், சிங்கள, முஸ்லிம் தரப்பில் இல்லை எனலாம். எனவேதான் மஹிந்த ராஜபக்ஷ தான் நினைத்ததையெல்லாம் செய்ய முடிகிறது. இந்த நிலைமை அவரை முற்று முழுதான ஓர் ஏகத்துவ நிலைக்கே கொண்டு செல்லும்.

இந்த நிலையில் - தெற்கில் இப்போது சிங்கள பொதுமக்கள் சிலர் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? ''பிராபகரன் உயிரோடு இருந்திருக்க வேண்டும். அவர் இல்லை என்பதுதான் இப்போது எல்லாவற்றுக்கும் பிரச்சினை''- என்று.

அதாவது, இப்படி அவர்களைச் சிந்திக்க வைப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷவும் காரணமாக இருக்கிறார். ஏனைய கட்சிகளும் காரணமாக இருக்கின்றன. இலங்கைத்தீவின் எதிர்காலம் எப்படி அமையப்போகின்றது என்பது மக்களின் கைகளில்தான் இருக்கிறது. அதாவது, புதிதாகச் சிந்திப்பவர்களின் கைகளில்!

சூழல் ஒரு புதிய சுவாசக்காற்றை விரும்புகிறது.

***

---

# பின் வாங்கும் சீனா!

கடந்த 18ஆம் திகதி அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தலாய்லாமாவைச் சந்தித்தது பற்றி சீனா தனது வழக்கமான அதிருப்தியை வெளியிட்டுள்ளது. எனினும் அமெரிக்காவின் நடவடிக்கையைப் பற்றிய தனது அதிருப்திக்கான சரியான காரணத்தை சீனா விளக்கவில்லை.

திபெத்திய ஆன்மீகத் தலைவரான தலாய்லாமாவுடன் அமெரிக்காவின் - முன்னைய தொடர்புகளை வரவேற்காத சீனா அதன் பிரதிபலிப்பாகவே இப்போது அதிருப்தியை வெளியிட்டுள்ளதாகவும் அமெரிக்காவுக்கும் திபெத்துக்கும் இடையிலான உறவு வலுப்படுவதை அது விரும்பவில்லையெனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.



கடந்த 19ஆம் திகதி சீன வெளியுறவு அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த கண்டன அறிக்கை இதற்கு முன்பும் அந்நாடு தெரிவித்த கண்டன அறிக்கையை ஒத்திருந்ததைக் காணக்ககூடியதாக இருந்தது என அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.



அமெரிக்கா சீனாவின் நிலைப்பாட்டை நன்கறிந்துள்ளதாகவும் சீனாவுக்கு எதிரான பிரிவினைவாத சக்திகளை அமெரிக்கா மறைமுகமாக ஊக்குவிப்பது மூலமும் ஆதரவளிப்பது மூலமும் திபெத் நாட்டுக்கு சுதந்திரம் கோரும் சக்திகளுக்கு தூபமிடுவதாகவும் சீனத்தரப்பு குற்றம் சாட்டுகின்றது.

சீனப் பிரதி வெளியுறவு அமைச்சர் குய் தியான்கால் சீனாவிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜொான் ஹண்ட்மேனை வரவழைத்து இவ்விஜயத்தைப் பற்றிய பின்னணியை விசாரித்துள்ளளார் என்று சீனாவின் அரச செய்தி ஊடகமான Xinhua செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் 2008ஆம் ஆண்டு பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் சார்கோஸி தலாய்லாமாவை சந்தித்ததன் காரணமாக சீன-ஐரோப்பிய உச்சி மாநாட்டை சீனா பகிஷ்கரித்ததுபோல இம்முறை இராஜதந்திர தண்டணைகள் எதையும் வெளிப்படையாக தெரிவிக்கவில்லை.

தலாய்லாமாவின் சந்திப்பு சீனாவுக்குப் பிடிக்க வில்லை என்பதன் பிரதிபலிப்பே சீனா வின் அதிருப்தி என சர்வதேச உறவு கண்காணிப்பாளர்கள் ஊகிக்கின்றனர்.

கடந்த வருடம் தலாய்லாமாவை சந்திப்பதை பராக் ஒபாமா தவிர்த்துக் கொண்டதை சீனா கவனிக்கத் தவறவில்லை என ரென்மின் பல்கலைகழக ஆய்வாளர் Cheng Xiaohe கருத்துத் தெரிவித்துள்ளார்.

''சீனாவை மேலும் ஆத்திரமூட்டாத வகையில் இந்த விஜயத்தை புத்திசாதுர்யமாக அமெரிக்க அதிபர் கையாண்டுள்ளார். இவ்விஜயத்தின்போது ஊடகங்களுக்கு அனுமதியளிக்கப்படவில்லை. ஒரேயொரு புகைப்படம் மட்டுமே வெள்ளை மாளிகையால் வெளியிடப்பட்டது. அமெரிக்க அதிபரும் இவ்விடயத்தில் சற்று பின்வாங்கியிருப்பது தெரியவருகின்றது''- என இந்த ஆய்வாளர் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தனது பதவிக் காலத்தில் தலாய்லாமாவை சந்தித்து பகிரங்கமாக தங்கப்பதக்கம் ஒன்றை அவருக்குப் பரிசளித்தார். எனினும் பராக் ஒபாமா இந்த சந்திப்பை வெள்ளை மாளிகையின் வரைபட அறையில் இரகசியமாக மேற்கொண்டார். இத்தகைய சந்திப்புக்களை பெய்ஜிங் தொடர்ந்தும் கண்டித்து வந்துள்ளது. தலாய்லாமா ஆபத்தான பிரிவினைவாதியெனவும் திபெத்துக்கு சுதந்திரம்பெற முழு மூச்சாக செயற்படுகிறார் எனவும் அது குற்றம் சாட்டுகின்றது.

Tsinghua பல்கலைக்கழகப் பேராசிரியரும் இப்பல்கலைகழகத்தின் சர்வதேசக் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளருமான Yan Xuetong அமெரிக்காவின் தற்போதைய நடவடிக்கைகளால் சீனா அமெரிக்காவுடனான தனது கொள்கைகளை மீளாய்வு செய்யவேண்டி நேரிடலாம் என ஊகம் தெரிவித்துள்ளார்.

தாய்வானுக்கு அமெரிக்கா விநியோகித்த ஆயுதங்களால் பசுபிக் பிராந்தியத்தில் கடந்த இரு மாதங்களாக இறுக்கம் அதிகரித்துள்ளது. இணையத்தள தணிக்கைகளும் வர்த்தக சச்சரவுகளும் அதிகரித்துள்ளன.

ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. கடந்த இரு தசாப்தங்களாக சீனா எடுத்த எந்த முயற்சியாலும் அமெரிக்கா தாய்வானுக்கு ஆயுதம் விற்பனை செய்வதையோ, அமெரிக்க அதிபர் தலாய்லாமாவை சந்திப்பதையோ தடுக்க முடியவில்லையெனவும் இதனால் ஏற்படும் இறுக்கம் மேலும் அதிகரிக்கலாமெனவும் பேராசிரியர் Yan கூறினார்.

-தமிழில் சுப்பர்

சுடர் ஒளி

பெப். 28-மார். 06, 2010

85, ஜெயந்தமல் விமாரச்சி மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன்: 0115728005 பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

## உலகத் தமிழர் பேரவை மாநாடு

விடுதலைப் புலிகள் இருக்கும் வரை இலங்கையில் எந்த ஓர் அரசியல் தீர்வுக்கும் சாத்தியப்படமாட்டாது. அவர்கள் தமிழீழத்தைத் தவிர எதற்குமே இணங்கி வரமாட்டார்கள். அவர்களின் பலத்தை ஒடுக்கிய பின்னர் தமிழ் மக்கள் இந்த நாட்டில் கௌரவமாக வாழக்கூடிய தீர்வைக் கொண்டு வருவோம் - என்று தான் பதவியில் இருந்த தென்னிலங்கை அரசுகள் கடந்த காலங்களில் வெளிநாடுகளிடம் தெரிவித்து வந்தன.

நோர்வேயின் அனுசரணையுடன் நடைபெற்ற சமாதானப் பேச்சுகள் குழம்பியதை கருத்தில் கொண்டு-அது எந்தத் தரப்பால் குழப்பப்பட்டது என்பதை ஆராயாமல்- இலங்கை அரசின் கருத்துக்களை பெரும் பாலான நாடுகள் ஏற்றுக் கொண்டிருந்தன. புலிகள் இயக்கத்தை பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளவும் இதுதான் காரணமாக இருந்தது.

தற்பொழுது புலிகள் இயக்கம் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டு விட்டது. அவர்கள் தோற்கடிக்கப்பட்டதோடு இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த சிந்தனையும் தென்னிலங்கையில் மறைந்து விட்டது. கிராம சபைகள் மட்டத்தில் தீர்வு காண்பது குறித்துப் பேசப்படுகிறது.

சர்வதேச நாடுகள் தற்பொழுது தான் விழித்துக் கொண்டிருக்கின்றன. தாம் ஏமாற்றப்பட்டு விட்டதை உணருகின்றன. இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று அமெரிக்காவும் பிரிட்டனும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் தற்பொழுது கோரிக்கை விடுத்து வருகின்றன.

பிரிட்டிஷ் அரசாங்கம் தற்பொழுது உலகத் தமிழர் பேரவை மாநாட்டை தனது நாடாளுமன்றக் கட்டடத்தில் நடக்க அனுமதித்ததுடன், அதன் வெளிவிவகார அமைச்சர் மில்லி பாண்ட் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்ற அனுமதித்ததை அடுத்து வெறும் வாய்ப் பேச்சில் காலம் கழிக்காது செயலில் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

புலிகள் இயக்கம் கடந்த ஆண்டு மே மாதம் அழிக்கப்பட்டு ஒரு வெற்றிடம் ஏற்பட்டபின்பு தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பாரிஸில் உலகத் தமிழர் பேரவை ஸ்தாபிக்கப்பட்டது. தற்பொழுது தனது மாநாட்டை அது வெற்றிகரமாக லண்டனில் நடத்தி உள்ளது.

பிரிட்டிஷ் அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை கடந்த காலங்களில் பயங்கரவாத இயக்கமாகவே பார்த்து வந்தது. வட அயர்லாந்தும் பிரச்சினையில் ஐரிஷ் தீவிரவாதிகள் நடத்திய குண்டு வெடிப்புக்கள் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாகப் பார்ப்பதற்கு பிரிட்டிஷ் அரசுகளுக்கு சூழ்நிலைகளை ஏற்படுத்தி இருந்தன.

ஆனால், கடந்த மே மாதம் வன்னியில் யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்திருந்த சமயம் யுத்தத்தில் பொதுமக்கள் கொல்லப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் இலங்கை வந்த மில்லி பாண்ட்டுக்கு பயங்கரவாதி பட்டம் சுமத்தப்பட்டது. தேடப்படும் பயங்கரவாதி என்ற பெயருடன் அவரது படம் தாங்கிய பெரிய போஸ்டர்கள் கொழும்பு நகரில் ஒட்டப்பட்டன. லண்டனில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் திரண்டு இலங்கையில் போரை நிறுத்தும்படி பேரணி நடத்தினர். இவை பிரிட்டனின் கண்களைத் திறந்து விட்டிருக்கலாம் என்பதில் சந்தேகம் இல்லை. மில்லி பாண்ட் மீது பயங்கரவாதப் பட்டம் சூட்டப்பட்ட பின்பு தான் இலங்கை அரசாங்கத்தின் நோக்கங்களை பிரிட்டன் புரிந்துகொண்டது.

ஆகவே, புலம் பெயர்ந்துவரும் தமிழ் மக்களின் குரல் ஓங்கி ஒலிப்பதற்கு பிரிட்டிஷ் அரசு தற்பொழுது வகுத்துள்ள பாதை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டிய நிர்பந்தத்தை இலங்கை அரசுக்கு ஏற்படுத்தி விட்டுள்ளது. ✱

# பார்க்க வேண்டியதும் அறியவேண்டியதும்

-ஜோசவ் தயாளன்-

யாழ்ப்பாணத்தைப் பார்பதற்கென்று தினமும் ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் வருகின்றனர். ஏ-9 வீதி திறக்கப்பட்டதையடுத்து யாழ்ப்பாணத்துக்கு வந்துக்கொண்டிருக்கும் ஏராளம் சமாச்சாரங்களில் இந்தத் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகளும் அடங்குவர். யாழ்நகரத்தில் இப்போது சிங்கள மக்களா தமிழ் மக்களா அதிகம் நிற்கின்றார்கள் என்றுகூட ஒரு கணம் சிந்திக்கத் தூண்டியது. இந்தத் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகளின்தொகை. அந்தளவுக்கு நகரத்தின் சில முக்கிய இடங்களில் இந்தச் சுற்றுலாப் பயணிகள் குவிந்திருக்கிறார்கள்.

இப்படி, இவர்கள் யாழ்பாணத்துக்கு வந்துசெல்வது நல்லது. இது அவர்களுக்கும் மகிழ்ச்சியைத்தரும். தமிழ் மக்களுக்கும் மகிழ்ச்சியைத்தரும். தமிழர்களும் முன்னரைவிட அதிகளவில் தென்னி



லங்கைக்கும் சென்றுவருகிறார்கள். ஆகவே, எல்லாமே நல்லபடி நடக்கின்றன. ஆனால், இந்த வெளித்தோற்றத்திற்குப் பின்னே பல உண்மைகளும் வேதனையான சங்கதிகளும் இருக்கின்றன. இதை நாட்டின் தலைமைப்பீடமும் சிங்கள மக்களும் பிறரும் அறிந்திருக்க வேண்டும்.

போர் நின்ற பின்னர் வன்செயலின் உயிரிழப்புக்கள் இப்போதில்லை. இது ஆறுதலளிக்கும் ஒரு முக்கிய விடயம் தான். ஆனால் போர் முடிவுக்கு வந்த பின்னரான சூழலை தமிழர்கள் அனுபவிக்கின்ற விதமும் சிங்களவர்கள் அனுபவிக்கின்ற விதங்களும் வேறு வேறானவை. தமிழ் மக்கள் இன்னமும் பொருளாதாரத் தடைக்காரணிகளுடன் தான் வாழ்கின்றனர். வலிவடக்கு, வடமாராட்சிகிழக்கு, வன்னிகிழக்கு, கொக்கிளாய் தொடக்கம் தென்னமரவாடி, கருநாட்டுக்கேணி, திரியாய் வரையுமான பகுதி என பல விவசாய நிலங்களும் இந்த பிரதேசங்களின் கடற்கரையும் படையினரின் தடைக்குட்பட்டிருக்கின்றன. இது இந்த பிரதேச மக்களின் தொழில், வருமானம் போன்றவற்றில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக தமிழ் மக்களின் கடற் பிரதேசத்தில் மூன்றில் இரண்டு பகுதிக்கும் மேலானது மக்களின் நடமாட்டத்துக்குத் தடுக்கப்பட்டேயிருக்கிறது.

எனவே, தமிழ் மக்களின் பொருளாதாரத் தடைக் காரணிகள் இன்னும் பாதகமான நிலையில் தான் இருக்கின்றன. அதைப் போல வன்னி மக்களின் மீள்குடியேற்றமும் மிக மோசமான நிலையில் தானுண்டு. முகாமிலிருக்கும் மக்களின் விடுதலை பற்றி உறுதியான-தெளிவான முடிவில்லை.

உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படவில்லை. அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை. வாக்குறுதிகளுக்கு மேல் வாக்குறுதிகள் தாராளமாக வழங்கப்படுகின்றன. தேர்தலுக்கு மேல் தேர்தல்கள் வருகின்றன. இப்படித்தான் சிங்கள மக்களும் யாழ்பாணத்துக்கு வருகிறார்கள்; எல்லாவற்றையும் பார்க்கிறார்கள்; தேவையான பொருட்களையெல்லாம் வாங்குகிறார்கள்; பிடித்தமான இடங்களில் நின்று படம் எடுக்கிறார்கள். சுற்றுலா முடிய மகிழ்ச்சியாகப் போகிறார்கள்.

சுற்றுலா என்றால் இப்படித்தானே இருக்கும், இதில் என்ன புதினம் என்று நீங்கள் கேட்டகக்கூடும். பிரச்சினை அதுவல்ல. இப்படி வருகின்ற சிங்கள மக்களுக்கு ஒரு தொகை பணத்தை அரசாங்கமே கொடுத்து அனுப்புகின்றது எனச் சிலர் சொல்கிறார்கள். படையினரின் குடும்பங்கள்தான் இப்படிப் பணத்தைப் பெற்றுக்கொண்டு அதிகமாக வருகின்றன என்று வேறு சிலர் கூறுகிறார்கள். இதில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்று தெரியவில்லை. ஆனால், இப்படித் தமிழ்மக்கள் சிந்திக்கும் ஒரு நிலைக்கு அரசாங்கத்தினால் தள்ளப்பட்டிருக்கின்றனர். தென்னிலங்கையில் இருந்து வருவோர் பல இடங்களுக்கு செல்கிறார்கள். தேவையான பொருட்களை எல்லாம் வாங்குகிறார்கள் என்றால் அதற்குரிய மாதிரி அவர்களுடைய மனநிலையும் இருக்கிறது. அவர்களின் கையில் காசும் இருக்கிறது. இதில் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால் இலங்கையில் இப்போது தமிழர்களை தவிர வேறு எவரும் அகதிகளாக இல்லை என்பது.

ஆக, தமிழர்கள் அகதிகளாகவே இருக்கிறார்கள். சிங்கள மக்களோ சுற்றுலாப் பயணிகளாக வருகின்றார்கள். இந்த நாட்டில் சிறுபான்மை என்றொரு இனமோ மக்கள் கூட்ட



மோ இல்லை என்கிறார் ஜனாதிபதி. ஒரே நாடு. ஒரே இனம் (ஒரே மக்கள்) என்கிறது படைத்தரப்பு.

யாழ்ப்பாணம் வருகின்ற சிங்கள மக்களுடன் அவர்களுடைய பங்குத் தந்தையர்களான பௌத்த பிக்குகளும் வருகின்றனர். அறம், அமைதி, சாந்தம், கருணை, அன்பு என்பவற்றில் பௌத்தம் உலக தத்துவங்களிலேயே முதன்மையானது. வடக்கே வருகின்ற பௌத்த துறவிகள் இதுவரையிலான நிஷ்டையைக் கலைத்து, கண்களை விழித்து, மனதை திறந்து கொண்டு வடக்கே வர வேண்டும். தங்களுடைய மக்களுக்கு அவர்கள், வடக்கின் உண்மை நிலையை இனியாவது நேரில் பார்த்துச் சொல்ல வேண்டும். வடபகுதி மக்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதையும் இவர்கள் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக வன்னிக்கு இவர்கள் செல்ல வேண்டும். வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள அகதி முகாம்களுக்குச் செல்ல வேண்டும். மீள்குடியேற்றப்பட்ட மக்களைச் சென்று பார்க்க வேண்டும். அவர்களுடன் கதைக்க வேண்டும். எப்படி அந்த மக்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிய வேண்டும். இந்த மக்களின் வாழ்வும் வாழ்விடங்களும் எப்படிச் சிதைக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஏனெனில், போர் முடிந்துவிட்டது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது என்று சொல்லிக்கொள்வதோ இதையிட்டு பெருமைப்படுவதோ முக்கியமல்ல. போருக்குப் பின்னர், விடுதலைக்காகவும் அரசியல் உரிமைக்காகவும் போராடிய நாட்டின் குடிமக்கள் எப்படி இருக்கிறார்கள், இவர்களை அரசாங்கம் இன்னும் எப்படி வைத்திருக்கிறது என்பதை நிச்சயம் சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த முப்பது ஆண்டுகளாக வடபகுதி எப்படி இருக்கிறது? வடக்கு மக்கள் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்? என்பதை இந்தச் சுற்றுலா மக்கள் நிச்சயம் பார்க்க வேண்டும். இதற்கான பார்வை முக்கியமானது. இந்தப் பார்வையைப் பெறவைப்பதற்கு நமது பொது அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் ஊடகங்களும் முயற்சிக்க வேண்டும். இதில் சிங்கள ஊடகங்களும் பங்கெடுப்பது அவசியம்.

ஐக்கிய இலங்கைக்குள் புரிந்துணர்வுடன் வாழ்வது, முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பது என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதை விடவும் தமிழ் மக்கள் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களுடைய பிரச்சினைகள் என்ன என்பதை சிங்கள மக்கள் முதலில் புரிந்துக்கொள்வது நல்லது. இதையே ஐக்கியம் பற்றிப் பேசுகின்ற ஊடகங்கள் செய்ய வேண்டும்.

பிரச்சினைகளுக்கு அப்பால், வேறொரு மாய உலகத்தைக் காண முயன்றால், விளைவுகள் மீண்டும் பாரதூரமானவையாக இருக்கும்.

யானை பார்த்த குருடர்களாக இந்தச் சுற்றுலாப்பயணிகள் இருக்ககூடாது. ✱

# பிரிட்டனின் அதிரடி!

**-எஸ். ஜனூஸ்**

இலங்கை அரசின் கடும் கண்டனங்களின் மத்தியில் பிரிட்டிஷ் நாடாளுமன்ற கட்டடத்தில் உலகத் தமிழர் பேரவை மாநாடு கடந்த புதன் கிழமை ஆரம்பமானது.

இலங்கை அரசின் கடும் எதிர்ப்பையும் மீறி இந்த மாநாட்டில் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லி பாண்ட் கலந்து கொண்டார்.



கோர்டன் பிரவுனை சந்திக்கும் பேரவை உறுப்பினர்கள்

அதே சமயம் பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுன் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதி ஒன்றில் மேற்படி உலகத் தமிழர் பேரவைப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினார்.

இந்த மாநாடு பற்றி கருத்துத் தெரிவித்த தமிழீழ ஆதரவாளர்கள் 'இந்த மாநாடு எழுச்சியின் முதல் கட்டம்' என்று தெரிவித்தனர். இந்த தொடக்க மாநாட்டை அடுத்து 'தமிழீழ விடுதலை நோக்கிய பயணம்' என்ற நிகழ்வு ஆரம்பித்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வு நான்கு தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.



பேரவை உறுப்பினர்களுடன் கோர்டன் பிரவுன்

வெளிவிவகார அமைச்சர் மில்லி பாண்ட் மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துகையில், தமிழ் மக்கள் அனைவரும் ஒரு குடையின் கீழ் ஒன்று பட்டு ஓர் அணியில் செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இன்றைய சூழலில் புலம் பெயர்ந்து வாழும் மக்கள் தங்களது கோரிக்கை களை சர்வதேச சமூகத்திடம் முன்வைக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

### இலங்கை கண்டனம்:

உலகத் தமிழர் பேரவைக் கூட்டத்தில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டேவிட் மிலிபாண்ட் கலந்து கொண்டதை இலங்கை அரசாங்கம் கண்டித்துள்ளது.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை முன்வைத்து செயற்பட்டு வருகின்ற உலகத் தமிழர் பேரவை, விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவு அமைப்பாக செயற்படுவதாக குற்றஞ்சாட்டியுள்ள இலங்கை அரசாங்கம் அதில் பிரிட்டனின் வெளியுறவு அமைச்சர் கலந்துகொண்டது இலங்கையின் இறைமையை குறைத்து மதிப்படும் செயலாக அமையும் என்று கவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கைக்கான பதில் பிரிட்டிஷ் தூதுவர் மார்க் கூடிங்கை அழைத்த இலங்கை வெளியுறவு அமைச்சர் ரோஹித போகொல்லாகம, தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

பெரும்பாலும் மேற்கு நாடுகளில் இயங்கும் விடுதலைப்புலிகளின் ஆதரவு அமைப்புக்களை ஒரு குடையின் கீழ் இணைத்து உலக தமிழர் பேரவை செயற்படுவதாக இலங்கை குற்றம் சாட்டுகிறது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தை உருவாக்குவதற்கான முதற்கட்ட பணிகளில் அந்த அமைப்பு செயற்படுவதாகவும் இலங்கை குற்றஞ்சாட்டியுள்ளது.

இது இலங்கையின் இறைமைக்கும், ஆட்புல ஒருமைப்பாட்டுக்கும் நேரடியாக அச்சுறுத்தல் விடுக்கும் ஒரு நகர்வு என்றும் இலங்கை கூறியுள்ளது.

ஆனால், இலங்கையின் எதிர்ப்பை மிலிபாண்ட் அலட்சியம் செய்து விட்டார். ஆரம்ப வைபவத்தில் அவர் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார்.

### அரசியல் தீர்வு

அங்கு உரையாற்றிய அவர், இலங்கைப் பிரச்சினைக்கு ஓர் அமைதியான, அரசியல் தீர்வுதான் ஒரே வழி என்று வலியுறுத்தினார்.

அந்த தீர்வு எப்படியானதாக இருக்க வேண்டும் என்பதை அனைத்து இலங்கை மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

உண்மையான தேசிய நல்லிணக்கத்தின் மூலம் ஓர் இறுதியான தீர்வை இலங்கை அடைய வேண்டும் என்பதே பிரிட்டனின் அவா என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த இலக்குக்காக செயற்படுகின்ற இலங்கையின் அனைத்து மக்களுடனும் - அவர்கள் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ எங்கு இருந்தாலும் - அவர்களுடன் பிரிட்டன் சேர்ந்து செயற்படும் என்றும் கூறினார்.

அத்துடன் இலங்கையின் இறுதிக் கட்டப் போரின் போது இருதரப்பாலும் மேற்கொள்ளப் பட்டதாக குற்றஞ் சாட்டப் படுகின்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றும் தனது உரையில் அவர் வலியுறுத்தினார்.



பேரவை உறுப்பினர் ஒருவருடன் மில்லி பாண்ட்

அத்துடன் இன்னமும் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் எஞ்சியுள்ள மக்கள் மீள் குடியேற்றப் பட்வதுடன், கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் விடுததலை செய்யப் பட்டு, மறுவாழ்வளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அதே சமயம் பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுணை, உலகத் தமிழர் பேரவை அமைப்பின் பிரதிநிதிகள் சந்தித்து உரையாற்றிய போது பல்வேறு விடயங்கள் பேசப்பட்டன. இந்தச் சந்திப்பு நாடாளுமனறக் கட்டடத் தொகுதி ஒன்றில் இடம் பெற்றது.

உலகத் தமிழர் பேரவை முன்னெடுக்கவுள்ள முகாம்களில் உள்ள மக்களை விடுவித்தல், போர்க்குற்ற விசாரணைக்கான செயற்பாடுகள், மக்களின் மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்து பிரதமருக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசை பற்றியும் வினயமாக எடுத்துரைக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த கோர்டன் பிறவுண், இலங்கை அரசுக்குக்கான தமது அழுத்தம் தொடர்ந்து இருந்து வருவதாகவும், அண்மையில் அங்கு ஜனாதிப்தி தேர்தல் நடைபெற்ற போதுகூட அரசின் ஜனநாயக விரோதப்போக்கைக் கண்டித்து கடிதம் எழுத்தியிருந்ததாகவும் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் மீள் குடியேற்றம் பற்றிய விடயத்தில் இலங்கை அரசு அலட்சியத் தன்மையைக் கடைப்பிடித்தால், ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி ஆராயப்படும் எனவும் அவர் கூறினார்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்த விடாது தடுத்து, அவுஸ்திரேலியாவில் நடத்துவதற்கு தான் ஏற்பாடு செய்திருப்பதைச் சுட்டிக்காட்டிய பிரதமர் கோர்டண் பிறவுன், தமது அரசு முடிந்தளவு மேலும் பல அழுத்தங்களை இலங்கை அரசுக்குக் கொடுக்கும் எனக் கூறினார்.

தமிழ் மக்களின் விருப்பு பற்றி தமிழீழத்தில் கருத்துக் கணிப்பு நடத்துவது பற்றி உலகத் தமிழர் பேரவையின் அங்கத்தவர்கள் சுட்டிக்காட்டினார், அதனை தமது அரசு மட்டும் தனித்து செய்துவிட முடியாது எனவும், ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்தே இதற்கான செயற்பாடுகளில் இறங்க வேண்டும் எனவும் கோர்டன் பிறவுண் கூறினார்.

பிரித்தானியப் பிரதமருடனான உலகத் தமிழர் பேரவையின் சந்திப்பு, பிரித்தானிய வெளிவிகார அமைச்சர் உட்பட பல அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பிணர்கள் உலகத் தமிழர் மாநாட்டில் கலந்து கொண்டமை போன்ற விடயங்கள் கொழும்பு அரச வட்டாரத்தில் பாரிய எரிச்சலைக் கிளப்பியுள்ளதுடன் அரச மட்டத்திலான கருத்து மோதல்களையும் தோற்றுவித்துள்ளது.

### பாரிஸில்

உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களை ஒன்றிணைத்து ஓர் அணியில் திரள வேண்டும் என்று தீர்மானித்து ஆகஸ்ட் 2009 இல் பிரான் ஸின் தலைநகர் பாரிஸில் உருவாக்கி யதே உல்கத் தமிழர் பேரவை.

அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், டென்மார்க், நோர்வே, சுவீடன், ஜேர்மனி, நெதர்லாந்து, சுவிஸ், இத்தாலி, மொறிசியஸ், மலேசியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய 15 நாடுகளின் தமிழ் அமைப்புக்களின் ( தமிழீழ மக்கள் பேரவை-பிரான்ஸ், ஐரோப்பியத் தமிழர் ஒன்றியம், பிரித்தானிய தமிழர் பேரவை, நோர்வே தமிழர் பேரவை, டென்மார்க் தமிழர் பேரவை, சுவீடன் தமிழர் பேரவை, இத்தாலி தமிழர் பேரவை, தமிழினப் படுகொலை கெதிரான அமைப்பு-மொறியஸ், நியூசிலாந்து தமிழ்ச் சங்கம், அவுஸ்திரேலியன் தமிழர் காங்கிரஸ், கனடா தமிழர் காங்கிரஸ் அமெரிக்க தமிழர்களின் அரசியல் செயல் அவை, வெலிங்டன் தமிழர் அமைப்பு, சுவிஸ் தமிழர் அமைப்பு, ஜேர்மனி தமிழர் அமைப்பு, பெல்ஜியம் தமிழர் அமைப்பு, நெதர்லாந்து தமிழர் அமைப்பு, அவுஸ்திரேலியர் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு ) பிரதிநிதிகளும் உலகத் தமிழர் பேரவையின் உருவாக் கத்திற்கு அடிக்கற்களாக இருந்து ஓர் அணியாக தமது வேலைத்திட்டங்களை ஒருங்கிணைத்து சமகால அரசியல் சூழலுக்கு அமைய தமிழீழத்தை நோக்கிய பயணத்தில் ஒன்றிணைந்து செயற்பட தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

(24ஆம் பக்கம் பார்க்க)



அடுத்த ஆண்டு மே மாதம் தமிழக சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் வென்று ஆட்சியை பிடிக்க வேண்டிய பெரும் நிர்ப்பந்தம் ஜெயலலிதாவுக்கு இருப்பது யாவரும் அறிந்ததே. கடந்த ஆண்டு லோக்சபா தேர்தலில் பா.ம.க, ம.தி.மு.க, இரு கம்யூனிஸ்ட்கள் என

கம்யூனிஸ்ட் கட்சியில் கூட பொதுச் செயலாளர் தா. பாண்டியன் மட்டுமே வழமைபோல் ஜெயலலிதாவின் அதிரடியாக விளங்கி வருகிறார். கட்சியின் ஏனைய எம்.எல்.ஏக்கள் தி.மு.க மீது அனுதாபம் கொண்டவர்களே. ஆக ம.தி.மு.க மட்டுமே 'ஜெ' யின் கூட்டணியிலுள்ள ஒரே ஒரு ஸ்திரமான கட்சியாகும். நடந்துமுடிந்த லோக்சபா தேர்தலில் மெகா

நிமிஷத்து நிமிஷம் தோழமைக் கட்சியினரை உதறும் போக்கு உள்ளவர் தான் மம்தாவும். கலைஞரை கைகழுவிவிட்டு மம்தா வையும் 'ஜெ'யையும் நம்ப சோனியா காந்தி ஒன்றும் படுமுட்டாளல்ல. ஆனாலும் ஜெயலலிதாவும் அ.தி.மு.க ஆதரவு பத்திரிகைகளும் சோனியா காந்தியும் காங்கிரஸையும் கைவிடுவதாக இல்லை. காங்கிரஸுடன் கூட்டணி வைக்கப் போகிறோம் என குழப்பியடிக்கும் அறிக்கைகளை அ.தி.மு.க வட்டாரம் திட்டமிட்டு ஊடகங்களில் பரப்பிவிடத் தொடங்கியுள்ளது. வேறு வழியின்றி காங்கிரஸ் கட்சி இதை மறுத்து அறிக்கை விடவும் நேர்ந்தது. தி.மு.க இந்தக் கூத்துகளை எல்லாம் மௌனமாக வேடிக்கை பார்த்தபடி உள்ளது.

இதற்கிடையில் ஜெயலலிதா வாழ்வா சாவா போராட்டத்தில் வேறுவழியின்றி

என்பதும் கண்கூடு. 2006 இல் கடைசியாக முதல்வராக இருந்தபோது ஒரு பேட்டியில் ''தமிழ் நாட்டின் வளர்ச்சிக்காக என்னைப் போல் எந்த முன்னாள் முதல் வரும் கடுமையாக உழைக்கவில்லை'' என்று கூறியிந்தார். அப்படியானால் எம்.ஜி.ஆர் அண்ணா இருவரையும் விட தான் சிறந்தவர் என்பதா அதன் பொருள் என கேட்கப்பட்டது. 1973இல் எம்.ஜி.ஆர் புதுக்கட்சி தொடங்கியபோது அரசியல், சினிமா இரண்டையும் செய்ய என்ன கடின உழைப்பை செய்தார் என்பதை உலகமே அறியும். அவ்வாறு அ.தி.மு.க.வை அவர் ஸ்தாபித்திராவிடின் கலைஞரின் ஏகசக்ராதிபத்தியத்தில் தமிழகம் என்ன பாடு பட்டிருக்கும் என்பதும் ஊகிக்கத்தக்கதே. அத்தகைய எம்.ஜி.ஆரை விட தான் சிறந்தவர் என்று மார்தட்டுமே ஜெய லலிதா எப்படி இந்த சோதனையை சாத

# ஜெயலலிதா புதிய ஆவேசம்!

மெகா கூட்டணி அமைத்துமே தி.மு.க கூட்டணியிடம் ஜெயலலிதாவின் அ.தி.மு.க அடிமேல் அடி வாங்கியது. தி.மு.க அணியை எதைத்தான் செய்வது என்று முழி பிதுங்கும் நிலையே இன்றைய ஜெயலலிதாவின் நிலை. அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடிக்காவிடின் அதற்கடுத்த முறை தேர்தல் வரும்போது ஜெயலலிதாவின் வயது 68 ஆகிவிடும். இப்போதே ஓடியாடி உழைக்கும் வலிமை அவரிடம் முதுமை காரணமாக குறைந்து வருகிறது. கருணாநிதி 86 வயதிலும் தளராது அரசியல் செய்வது போல் ஜெயலலிதாவோ எம்.ஜி.ஆரோ செய்ய முடியாது. அதாவது கலைஞர் 88 வயதில் பெறும் ஓய்வை ஜெயலலிதா 72 வயதிலேயே பெற நேரிடலாம். மேலும் கருணாநிதிக்கு ஒத்தாசையாக மைந்தர்கள் உள்ளது போல் ஓடியாடி அம்மாவுக்காக உழைக்க ரத்த சொந்தமும்

கூட்டணி அமைத்துக் கூட தி.மு.க-காங்கிரஸ் கூட்டணியை வீழ்த்த இயலவில்லை. அதன் பிறகு கூட்டணியிலிருந்து பா.ம.கவும் கம்யூனிஸ்ட்களும் விலகிய பின் எப்படி அதைச் சாதிக்க முடியும் என்ற பெரும் பயம் 'ஜெ'யை வாட்டுவது வாஸ்தவமே.

இதிலிருந்து மீள ஒரேவழி காங்கிரஸை வளைத்துப் பிடிப்பதே என்பது சகலருக்கும் தெரிந்த விடயமாகும். ராகுல் காந்தியின் புதிய வசீகரத்தை வைத்து வாக்குகளை சுருட்டலாம் என்பது ஜெயலலிதாவின் எண்ணம். ஆனால், அ.தி.மு.க- காங்கிரஸ் கூட்டணியை நிறுவுதல் என்பது 'ஜெ'க்கு இலேசான காரியமல்ல. தி.மு.கவின் 17 எம்.பிக்களின் ஆதரவு மத்தியிலுள்ள காங்கிரஸுக்கு மிக அவசியமாகும். அவ்வாறே மாநிலத்தில் தி.மு.க ஆட்சி நிலைத்திருக்க காங்கிரஸின் 35 எம்.எல்.ஏக்களின் தயவு தேவைப்படுகிறது. இவ்வாறு பரஸ்பரம் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலையில் அக்கூட்டணியை உடைப்பது

வீதிப் போராட்டங்களில் இறங்கத் தொடங்கியுள்ளார். கடந்த வாரம் விழுப் புரத்தில்கரும்பு விவசாயிகளில் பிரச்சினையை முன்வைத்து ஆர்ப்பாட்டமும் பொதுக் கூட்டமும் அவர் தலைமையில் இடம் பெற்றன. இதில் கலந் கொ ட மக்கள்



# எம்.எல்.ஏக்களை வளைத்து தி.மு.க பதிலடி!

யாருமில்லை, அவர் யாரையும் நம்புவது மில்லை சசிகலாவைத்தவிர. ஆக அடுத்த ஆண்டு தேர்தலில் வென்றே ஆக வேண்டி உள்ளது. இந்தத் தேர்தல் ஜெயலலிதாவைப் பொறுத்தவரைவாழ்வா, சாவா பிரச்சினை ஆகும். எனவே பல்வேறு வியூகங்களை வகுக்க அவர் முயன்றுவருவது நியாயமே. முதல் முயற்சியாக காங்கிரஸ்-தி.மு.க கூட்டணிக்குள் இயன்றவரை சலசலப்பை ஏற்படுத்த முயன்றார். தேர்தல் ஆணையர் சாவ்லாவை பணம் கொடுத்து வாங்கி அவர் ஊடாக சோனியா காந்தியுடன் சந்திப்பை ஏற்படுத்திக் கொண்டார். எனினும் அவர் எதிர்பார்த்த நிலைக்கு சோனியா காந்தி இறங்கவில்லை. மாறாக சாவ்லாவை தண்டிக்கும் முயற்சியில் சோனியா இறங்கிவிட்டார். ஆக அம்மாவின் முயற்சி புஸ்வாணமாகிவிட்டது. பா.ம.க வையும் கூட்டணியிலிருந்து வெளியேற்றி விட்டாயிற்று. கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டில் மாக்ஸிஸ்ட் கட்சி தி.மு.க வுக்கு மிகவும் நெருங்கிய கட்சியாகும். இப்போதைக்கு அ.தி.மு.க கூட்டணியில் அக்கட்சி இருந்தாலும் தேர்தல் நேரம் தி.மு.க பக்கம் சாயக்கூடும். இந்திய

எஸ். சுரேந்திரஜித்

இலகுவானதல்ல. மேலும் அடுத்த ஆண்டு தமிழக சட்டசபை தேர்தலுடன் மேற்கு வங்க மாநில தேர்தலும் நடைபெறவுள்ளது. அதில் தனக்கு அதிக இடங்களை தரும்படி ரயில்வே மந்திரி மம்தா பனார்ஜி தோழமைக்கட்சியான காங்கிரஸை வற்புறுத்தக் கூடும்.

இணங்காவிடில் மம்தா பனார்ஜி மன்மோகன் அரசிலிருந்து விலகவும் சாத்தியமுள்ளது. அவ்வாறு விலகினால் மம்தாவின் கட்சியிலுள்ள 19 எம்.பிக்களின் ஆதரவை மன்மோகன் அரசு இழக்கும். இச்சந்தர்ப்பத்தில் ஆட்சியைத் தக்க வைக்க 20 எம்.பிக்களை புதிதாக தேட வேண்டிய தேவை உண்டாகலாம். இப்படியிருக்கும்போது தி.மு.கவின் 17 எம்.பிக்களை இழப்பது காங்கிரஸுக்கு இயலாத காரியமாகும். மம்தாவை விடவும் கலைஞர் நம்பகமான கூட்டணி என்பதை சோனியா காந்தி நன்கு அறிவார். எனவே மம்தாவுடன் நேரத்தைச் செலவிடுவதை விட்டுவிட்டு தி.மு.கவுடனான கூட்டணியை பலப்படுத்துவதே சோனியாவின் இன்றைய நோக்கம். 'ஜெ' போலவே மம்தாவும் மணமுடிக்காத ''முதுகன்னி'' அரசியல்வாதியாவார். அவர் போலவே

கூட்டம் கணிசமான பெருந்திரளாகும். இது ஜெ'க்கும் கட்சியினர்க்கும் புது உத்வேகம் தந்துள்ளது. எதிர்பார்த்த தைவிடவும் பெரிய சனக்கூட்டம் திரண்டது தி.மு.க தரப்பையும் மிரட்சியடைய வைத்தது. இதிலிருந்து தெளிவாகும் ஒரு 'உண்மை என்ன வெனில் எதிர்க்கட்சி என்னதான் நலிவுற்று இருந்தாலும் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு வசீகரம் மிக்க தலைவ ராக இருப்பின் சாதிக்கமுடியும் என்பதே. இந்த அம்சம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சோனியாவின் விஷயத்திலும் பிரதிபலித்தது. 8 வருடம் சோனியா காந்தி எதிரணியில் இருந்து துன்புற்றா லும் காங்கிரஸ் கட்சி என்னதான் நலிவுற்று இருந்தாலும் கடைசியில் வாஜ்பாய் அரசை வீழ்த்த சோனியா காந்தியின் வசீகரம் உதவியது உண் மையே. அதே பாணியில் தி.மு.கவை வீழ்த்த ஜெ'வின் தனிப்பட்ட மக்கள் செல்வாக்கு நிச்சயமாக உதவும். ஆனால், சோனியா காந்திபோல் தளம்பாது கூட்டணியினரை மதித்து நடந்து அந்தக்கடைசி வெற்றிக்கனியை 'ஜெ'யால் பறிக்கமுடியாது என்பது தான் உண்மை. அவரது தனிப்பட்ட மனநிலைக் குழப்பமும் மனநோயும் இந்தச் சாதனையை எட்டவிடாது

னையாக்க முடியும் எனகேட்கப்படலாம்.

இதற்கிடையில் ஜெயலலிதா புதிய ஆவேசத்துடன் புறப்பட பதிலடியாக அவரது எம்.எல்.ஏக்களை ஒருவர் பின் ஒருவராக தி.மு.க இழுத்து வருகிறது. கடந்தவாரம் கோவில்பட்டி அ.தி.மு.க எம்.எல்.ஏயை அழகிரி பிடித்துவர ஏட்டிக்கு போட்டியாக ஸ்டாலின் தரப்பு ஜெயம் கொண்டார் எம்.எல்.ஏயை தி.மு.க. அணியில் சேர்த்துள்ளது. பிள்ளைபிடிகாரன் போல் 'எம்.எல்.ஏ பிடிக்கும்' இப்படலம் பலமாதங்களாக தொடர்ந்து நடந்தாலும் இப்போது முழுவேகத்தில் இடம் பெறத் தொடங்கி யுள்ளது. அடுத்த ஆண்டு தேர்தலில் அ.தி.மு.க வெல்லமுடியாது என்ற பிரேமையை ஏற்படுத்தி அ.தி.மு. கவினரை தனது அணியில் சேர்க்க தி.மு.க தீவிரம் காட்டுவது தெளிவாகத் தெரியும் உண்மையாகும். இதனால் சில தென்மாவட்டங்களில் அ.தி.மு.கவில் பேர் சொல்லும்படி தலைவர்களே இல் லை என்றாகிவிட்டது. கன்னியா குமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் அ.தி.மு.க கூடாரமே கிட்டத்தட்ட காலி யாகிவிட்டது எனலாம். தென்மாவட்டங் களில் அழகிரி யின் மந்திரம் நன்கு வேலை செய்வதுகண்டு அவரது தி.மு.க வினர் கூட விறைத்துப் போயுள்ளனர்.



# உயிர் வலிக்கும் கணங்கள்....!!

**வ**ன்னியில் வாழ்ந்த மக்கள் அனைவரும் அரை மணிநேரம் கூட தூங்க முடியாமல் அல்லல் பட்டு அவதிப்பட்டு, அகதியாக, அநாதையாக அலைந்து கொண்டிருந்த காலம்.

புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, ஆனந்தபுரம் பகுதியில் இருந்து மக்கள் விமானத்தாக்குதலுக்கும், ஏறிகணை வீச்சுக்கும் முகம் கொடுக்க முடியாமல் பாதுகாப்பு வலையம் என அறிவிக்கப்பட்ட மாத்தளன், வலைஞர் மடம் பகுதிக்கு வாகனங்களிலும் சைக்கிள்களிலும் கால் நடையாகவும் சென்று கொண்டிருந்தனர். வெள்ளம் அலைமோதிய நேரம் தான் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மாலை மூன்று மணியிருக்கும். நான் மோட்டார் சைக்கிளில் ஆனந்தபுரம் பகுதியில் சிறு வீதி ஒன்றில் சென்று கொண்டிருந்தேன். அப்போது சுமார் 22 வயது மதிக்கத்தக்க அக்கா ஒருவர் பச்சை நிறச் சட்டையில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். நான் அந்த அக்காவின் அருகாமையில் சென்றபோது ''அண்ணா கிபீர் வருகுது கவனம்'' என்று என்னிடம் கூறினார். எனக்கு கிபீர் சத்தம் எதுவும் அப்போது கேட்கவில்லை. அதனால் அவர் சொன்னதை பெரிதாக எடுக்கவில்லை. சற்றுத் தூரம் சென்றதும் என் மனம் கேட்கவில்லை. எதற்கும் நின்று பார்ப்போம் என நினைத்து மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் குறைத்து பின்னால் திரும்பிப் பார்தேன். அந்த அக்கா தூரத்தில் வந்து கொண்டிருந்தார்.

எதற்கும் நின்று பார்ப்போம் என நினைத்து மரம் ஒன்றின் கீழ் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு நின்றபோது தூரத்தே விமானச் சத்தம் கேட்பது போல் இருந்தது. நான் நின்ற மரத்தின் கீழே பதுங்கி குழி ஒன்று இருந்தது. அதற்குள் புகுந்து கொண்டேன். புகுந்ததும் விமானத்தின் ஒலி என் காதைக்கிழித்தது போல் இருந்தது. பின்பு தாக்குதல் சத்தம் கேட்டது. நான் நின்ற இடம் புகையால் மூடியது. சிறிது நேரம் அப்படியே இருந்து விட்டேன். இருந்து விட்டு வெளியே வந்தபோது நான் இருந்த பதுங்கு குழிக்கு முன்பாக முழங்காலுடன் துண்டாடப்பட்டு ஒரு கால் கிடந்தது. அந்த கால் சிதைந்து போய்க்கிடந்தது. நான் விறைத்துப் போய் வீதியைப் பார்த்தேன்.எனக்கு கிபீர் வருவதாக சொன்ன அக்கா நான் இருந்த இடத்தில் இருந்து சுமார் இருபது மீற்றர் தூரத்தில் ஒரு கால் இல்லாமல் தலையில் பெரிய காயத்துடன் கிடந்தார்.

## கிபீர் வருகுது என்று சொன்ன அக்காவின் கால் பதுங்குகுழிக்குள் வந்து வீழ்ந்தது!



எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஓடிச்சென்று அருகே பார்த்தால் அக்கா இறந்து கிடந்தார், எனது மோட்டார் சைக்கிளில் சாறம் ஒன்று வைத்திருந்தேன். அதனை எடுத்து அந்த அக்காவின் உடலை மூடிவிட்டு உடலை வீதிக்கரையில் தூக்கி வைத்தேன். மக்கள் குவிந்து விட்டார்கள். ஆனால், எவருமே அந்த அக்காவின் உறவினர்கள் இல்லை. உரிமை கோர எவரும் இல்லை.

பின்பு எவ்வளவோ நேரத்தின் பின் ஒருவர் சடலத்தைப் பார்த்துவிட்டு தன்னுடைய உறவினர் தான் என்றார். இவரின் பெற்றோர் மாத்தளன் சென்று விட்டார்கள் எனக் கூறினார், பின்பு அவ்வீதியால் வந்த வாகனம் ஒன்றில் சடலம் ஏற்றி அவ் உறவினரையும் சேர்த்து அனுப்பி வைத்தேன்.

பின்பு நான் எனது மோட்டார் சைக்கிளைப் பார்த்தால் இரண்டு சக்கரங்களும் காற்றின்றி இருந்தன. என்ன செய்வது அதனை உருட்டிக் கொண்டே சென்றேன்.

இப்படியாகத்தான் அங்கு வாழ்ந்து கொண்டிருந்த அனைத்து மக்களின் நிலைமை இருந்தது. எப்போது என்ன நடக்கும்? அடுத்த கனம் எங்கிருப்போம்? என எவருக்கும் தெரியாத நிலைமை

சந்தோசமான வாழ்வு கிடைக்கும் என்று நம்பி அனைத்துச் சொத்துக்களையும் இழந்து உறவுகளையும் இழந்து அரசாங்கத்தை நம்பி இங்கு வந்தால் கூண்டில் அடைப்பட்ட கிளிபோல் வாழும் நிலைமை ஏற்பட்டுள்ளது, முற்கம்பி வேலிக்குள்.

**ப. ஆரோக்கியராஜ் (திலீபன்)**

அந்த இறுதி நாட்களில்
வன்னியில் நேர்ந்த
அவலங்கள்

# மனித இறைச்சியை தின்றன நாய்கள்!

## மாத்தளன் மண்ணில் இப்படியும் நடந்தது

அன்று அதிகாலை, 2009 ஏப்பிரல் 11 ஆம் திகதி, கொடூமான ஷெல்வீச்சுகளின் அதிர்வாலும் துப்பாக்கி வேட்டுக்களின் ஓசையினாலும் எம் தமிழினத்தின் இரத்தம் குடித்தவாறு அன்றைய பொழுது விருப்பமில்லாதவாறு விடிந்தது. பச்சை புல்மோட்டைப் பகுதி முழுவதும் எம்.ஐ.24 ரக ஹொலிக்கொப்டர் தாக்குதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டனர். பலர் காயம் அடைந்தனர். இந்த தாக்குதலில் எனது நண்பன் சுரேஸ் காலையும் ஒரு இடது கையையும் இழந்தான். உயிருக்கு போராடிக்கொண்டிருக்கும் நிலையில் மருத்துவமனையில் அவன் அனுமதிக்கப்பட்டான். அவனுக்கு உடனடியாக Oபிளஸ் இரத்தம் தேவை என்று ஒலி பெருக்கி மூலம் மாத்தளன் கப்பல் ரோட் முழுவதும் அறிவிக்கப்பட்டது. இச் செய்தியைக் கேட்ட நான் தமிழன் தான் தமிழனைக் காப்பாற்ற வேண்டும் என்ற வெறியோடு வெயில் மழையையும் பொருட்படுத் தாது ஓடிச்சென்று இரத்தம் வழங்கினேன்.

மருத்துவமனைக்கு அருகில் இருந்த அன்ரி வீட்டுக்கு தேநீர் குடிக்கப்போகும் போது தான் இரணைப்பாலைப் பக்கம் இருந்து வந்த ஷெல் ஒன்று எனது அன்ரி வீட்டுக்குள் வீழ்ந்து வெடித்தது. அடுத்த கணம் எனது அன்ரியும், கணவரும், 4 பிள்ளைகளும் ஒரு 5 மாதக்குழந்தையும், நடக்கமுடியாத அன்ரியின் அம்மாவும் சிதறி சின்னாபின்னமாகக் கிடந்தார்கள். முற்றம் முழுவதும் மனித இறைச்சித் துண்டங்களும் எலும்புகளும் தான். என்றாலும் அவற்றை எடுத்துப் புதைக்கக் கூட முடியாதவாறு ஷெல்கள் வீழ்ந்து கொண்டிருந்தன. அதற்குள் அங்கு நின்ற சில நாய்கள் மனித இறைச்சித் துண்டங்களை தின்று கொண்டிருந்தன. இதனைப் பார்த்து நான் அழுதேவிட்டேன். மனதுக்குள் எரிமலையாய் வெடித்தவாறு அந்த இடத்தை விட்டு விரைந்து சென்றேன்.

**பிரபா.**

# குறி வைக்கப்படும் தனுனா திலகரத்ன...!



யுத்தம் முடிந்து, ஜனாதிபதிக்கும் முன்னாள் தளபதிக்கும் மோதல் வெடித்து, அரசியல் களத்தில் மறுபடி ராஜபக்ஷ விசுவரூபம் எடுத்தவுடனே...
அடுத்தடுத்து அசுரப் பாய்ச்சல்கள்தான்!

''ஜனாதிபதி குடும்பத்தைக் கொல்ல முயன்றது, ராணுவ ரகசியங்களை வெளியிட்டது'' உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுக்களில். பொன்சேகாவை கைது செய்த ராணுவ பொலீஸார், அடுத்தகட்டமாக அவருடைய மருமகனான தனுனா திலகரத்னவை எப்படியாவது கைது செய்து இலங்கைக்குக் கொண்டு வருவதில் தீவிரம் காட்டி வருகின்றனர்!

ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்டு, 18 லட்சம் வாக்குகள் குறைவாகப் பெற்று தோல்வியைத் தழுவிய பொன் சேகாவை, கொழும்பின் கடற்படை தலைமையகத்தில் சிறை வைத்துள்ளனர். ''இலங்கை அரசியல் வரலாற்றில் இதுமாதிரியான பழிவாங்கும் நடவடிக்கை இதற்கு முன் இருந்ததில்லை'' என்ற கோஷத்துடன் அவரை விடுவிக்கக் கோரி நாள்தோறும் ஆர்ப்பாட்டம், போராட்டம் என களத்தில் இறங்கியுள்ளன எதிர்க்கட்சிகள்.

இலங்கைப் பத்திரிகையாளர்கள் சிலருடன் விகடன் செய்தியாளர்கள் தொடர்பு கொண்ட போது. ''தேர்தலில் பொன்சேகா தோற்றால், உடனே சிறையில் தள்ள, முன்கூட்டியே திட்டமிட்டிருந்தது அதிபர் தரப்பு. அதற்காக, முடிவுகள் வெளியான தினத்தன்றே ராணுவ பொலீஸின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ஜெகத் விஜயசிறி தலைமையில் நரஹேன்பிட்டியில் உள்ள ராணுவ பொலீஸ் தலைமையகத்தில் ஒத்திகையும் நடந்தது. அதில் இருந்த 100 ராணுவ பொலீஸாருக்கும் எதற்காக, யாரை கைது செய்ய இந்த ஒத்திகை என்பதே தெரியாது! மூன்று நாட்களுக்கு பிறகு இந்த குழுவினர் பொன்சேகாவின் இருப்பிடத்துக்கு வந்தனர். அங்கு மேஜர் சுமீத் மானவடுகே தலைமையில் 200 ராணுவத்தினர் இந்த குழுவுடன் இணைந்துதான் கைது நடவடிக்கை நடந்தது!

அரசியல் ரீதியிலான காரணங்களைக் காட்டி கைது செய்யத்தான் முதலில் திட்டமிட்டனர். அப்படி செய்யும் பட்சத்தில், 'மியான்மரில் ஆங் சாங் சூகி அரசியல் காரணங்களுக்குக் கைதானபோது, உலக நாடுகளில் கடுமையான கண்டனங்கள் எழுந்தன!' என அரசியல் ஆலோசகர்கள் விளக்க... அதன் பிறகுதான் ராணுவரீதியாக ஏற்கெனவே போட்டு வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்தனர்! ஜனாதிபதி தரப்பு எதிர்பார்த்தபடியே, அவர் கைதுக்கு இந்தியா கவலை வெளி யிட்டது, அமெரிக்கா கண்டனம் தெரி வித்தது. ஆனால், எந்த நாடுமே விடுதலை செய்யவேண்டும் என வலியுறுத்தவில்லை. ஏனெனில், ராணுவ ரகசியங்களை வெளியிடும் ராணுவத் தளபதிக்கு எல்லா நாடுகளிலுமே இம்மாதிரியான

– மு.தாமரைக்கண்ணன்

நடைமுறைகள் உண்டு!

உலக நாடுகளிடமிருந்து கடுமையான கண்டனம் வராததில், எதிர்க்கட்சிகளுக்கு ஏமாற்றம்தான். இருந்தாலும் அதிகார பீடங்களாக இருக்கும் பௌத்த குருமார்களான தேரர்களை வைத்து பொன்சேகாவை விடுதலை செய்ய வலியுறுத்த வைத்தன எதிர்க்கட்சிகள். நாட்டில் பேராபத்தை ஏற்படுத்தும் விபரீதங்கள் நடந்தால், நாட்டிலுள்ள மொத்த தேரர்களும் ஒன்றுகூடி, சங்க சம்மேளனத்தை கூட்டுவது வழக்கம். இதில் தேரர்கள் எடுக்கும் முடிவுக்கு பெரும்பாலும் ஆட்சி பீடங்கள் கட்டுப்படும். அதன்படி, தற்போது முக்கிய விகாரையான மல்வத்தை பீடாதிபதி மகாநாயக்க தேரர் தலைமையில் சம்மேளனத்தை கூட்ட முடிவெடுக்கப் பட.... ஆடிப்போனது ராஜபக்ஷ தரப்பு! உடனே தேரர்களை சமாதானப்படுத்த முயன்றது. அது முடியாமல் போகவும், தேரர்களுக்குள் குழப்பத்தை உண்டு பண்ணி, சங்க சம்மேளனம் நடப்பதற்கே தடைபோட்டது!

இதனால் குழம்பிப்போன எதிர்க் கட்சிகள், பொன் சேகாவை விடுவிக்க நாடு முழுவதும் 10 லட்சம் கையெழுத்துகளை வேட்டையாட முடிவெடுத்துள்ளது பிந்திய நிலவரம்...'' என்றனர்.

இதற்கிடையில், தேர்தலில் முறைகேடுகள் நடந்திருப்பதால் ராஜபக்ஷவின் வெற்றி செல்லாது என அறிவிக்க வேண்டும் என நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை சிறையிலிருந்தபடியே தாக்கல் செய்தார் பொன்சேகா. ஜனாதிபதி ராஜபக்ஷ, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க உள்ளிட்ட 26 பேருக்கு சம்மன் அனுப்பியிருக்கிறது நீதிமன்றம்.

இன்னொரு பக்கம், பொன் சேகாவின் மருமகனின் கைதுக்குத் தீவிர ஏற்பாடுகள் நடக்கின்றன. அதுபற்றி ராணுவ பொலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கையில் ''பொன்சேகாவுக்கு அபர்ணா, அப்சரா என இரு மகள்கள்! மூத்த மகள் அபர்ணாவின் கணவர்தான் தனுனா திலகரத்ன. அமெரிக்காவின் ஒக்கலஹாமாவில் மனைவியுடன் வசித்த திலகரத்ன, ஐ-கார்ப் இன்டர்நேஷனல் மற்றும் பிரிட்டிஷ் போர்னியோ டிஃபென்ஸ் ஆகிய இரு நிறுவனங்களை நடத்துகிறார். இவற்றின் சார்பில் இலங்கை ராணுவத்துக்கும் ஆயுத தளவாடங்களை விற்பனை செய்திருக்கிறார். அதில் ஊழல் நடந்திருப்பதாக, தனுனா திலகரத்னவின் மீது சந்தேகப் பார்வையை பதித்த ராணுவம், மொத்தப் பூர்வீகத்தையும் தோண்டியது.

திலகரத்னவின் அப்பாவும் ராணுவத்தில் இருந்தவர்தான். பெரிதாக வேறெந்தத் தொழில்களும் இல்லாத நிலையில், அவரது அம்மாவின் பெயரில் கொழும்பில் மிக ஆடம்பரமான ஒரு மாடி வீடு, கோல் பேஸ் ஹோட்டலில் மிகப்பெரிய பியூட்டி சலூன் ஒன்றும் இருக்கிறது. அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலும் இந்த சலூனின் கிளை உள்ளது. நீர் கொழும்பில் ஒரு பீச் ஹோட்டல் ஒன்றும் திலகரத்னவின் பெயரில் உள்ளது. ஹொலிடே இன் ஹோட்டலில் மிகப்பெரிய நைட் கிளப் ஒன்றையும் நடத்துகிறார். இதற்கெல்லாம் எங்கிருந்து, எப்படி பணம் வந்தது என்று கேட்டு, கேள்வி எழுப்ப, அவர் தலைமறைவானார்.

அவரது தாயாரான அசோகா திலகரத்னவை கைது செய்து, கல்கிசை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது பொலீஸ். நீதியன்ற அனுமதியுடன் அசோகா திலகரத்னவின் வங்கிக் கணக்கை சோதித்ததில், கணக்கில் வராத ஏழரை கோடி ரூபாய் அவரது வங்கி லொக்கரில் இருந்தது. அந்தப் பணம் எப்படி வந்தது என்று அவரால் கணக்கு சொல்ல முடியவில்லை. அதனால், 'ராணுவ ஆயுதக் கொள்முதல் ஊழலில்தான் இந்தப் பணம் வந்தது' என, கொழும்பு கோட்டை நீதிமன்ற நீதிவான் லங்கா ஜயரத்னவிடம் ஆதாரங்களையும் சமர்ப்பித்தோம். அவரும் தனுனா திலகரத்னவை கைது செய்ய ஆணையிட்டார். அவர் தப்பி அமெரிக்கா போயிருப்பார் என சந்தேகிக்கிறோம். அமெரிக்காவுக்கு சிறப்பு புலனாய்வு பிரிவு பொலீஸார் செல்வார்கள்... அவர் தப்ப முடியாது!'' என்றனர.



தனுனா திலகரத்ன...!



ஆதரவாளர்களுடன் அனோமா...

இதற்கிடையில், நாள்தோறும் ஒரு மணி நேரம் ராணுவ பொலீஸ் அனுமதியின் பேரில் பொன்சேகாவை சந்திக்கும் அவரது மனைவி அனோமா, ''எனது கணவர் மன உறுதியுடன் ஆரோக்கியமாக உள்ளார். கைதின் மூலம் அவரை அரசியலிலிருந்து விரட்ட நினைத்தால், கனவிலும் நடக்காது!'' என ஊடகங்களுக்கு முழங்குகிறார்.

அனோமாவின் நடவடிக்கை களைக் கூர்ந்து நோக்கும் அரசியல் விமர்சகர்கள், ''அனோமா முன்னிலைப்படுத்தப்பட்டுக் களமிறங்கினால், நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே. கட்சி வெற்றிபெற அதிக வாய்ப்புள்ளது!'' என ஆரூடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்!

*நன்றி : விகடன்*

# அடி... உதை.. நடிகைகள்

பிரபல நடிகைகளான பிரியங்கா சோப்ரா, இஷா கோபிகர் மற்றும் சில நடிகைகள் கராத்தே போன்ற தற்காப்புக் கலைகளைக் கற்று வருகின்றனர். குறிப்பாக கேரளாவின் பாரம்பரிய தற்காப்புக் கலையான களரிச் சண்டை, டேக்வாண்டோ மற்றும் கிக் பாக்ஸிங் ஆகிய தற்காப்புக் கலைகளை கற்றுக் கொடுக்கும் பயிற்சி நிலையங்கள் மும்பையில் அதிகரித்து வருகின்றன. பிரபல நடிகை இஷா கோபிகர், நடிகர் குணால் கபூர் மற்றும் பிரபல ஜிம் பயிற்சியாளர் டீனே பாண்டே ஆகியோர் தங்களது பயிற்சி அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொள்கின்றனர்.

கடந்த எட்டு வருடங்களாக டேக்வாண்டோ என்ற தற்காப்புக் கலையைக் கற்றுவரும் இஷா கோபிகர், இதில் 'கறுப்பு பெல்ட்' வாங்கியவர். தனது உடல் அழகாக மட்டுமின்றி ஆரோக்கியமாகவும் மாறியது இந்த கலையை கற்ற பிறகுதான் என்கிறார் இஷா.





தற்போது அமெரிக்காவிலும் புகழ் பெற்று வரும் கிக் பாக்ஸிங் பயிற்சி பற்றிய தனது அனுபவத்தை பிரபல ஜிம் பயிற்சியாளரான டீனே பாண்டே கூறும்போது,

''இந்தியாவில் கிக் பாக்ஸிங் கற்றுக் கொடுப்பவர்கள் அதிகமாக இல்லை. நான் கடந்த பத்து வருடங்களாக கிக் பாக்ஸிங் கற்றுக் கொடுக்கிறேன். மற்ற கலைகளை விட, உடற்பயிற்சியை விட கிக்பாக்ஸிங் என்பது மிகவும் வித்தியாசமானது. இதில் எல்லாப் பயிற்சிகளும் கடினமானவை. இந்தக் கலை யை நீங்கள் முழுமையாக கற்றுக் கொண்டால் போதும்... மற்ற கலைகள் அனைத்தையும் எளிதாக கற்று விட முடியும். அத்தனையும் சிரத்தையான, மிகவும் கடுமையான பயிற்சிகள். அடிக்கடி காயங்கள் ஏற்படும், ரத்தம் வரும். ஆனால் உங்களுடைய உடல் முழுவதும் மிகவும் உறுதியாகவும், எதையும் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவமும் உண்டாகும்.

களரிச் சண்டையைக் கற்றுவரும் நடிகர் குணால் கபூர் கூறும்போது,

''முதலில் நான் தாய்ச்சி எனப்படும் தாய்லாந்து சண்டையைத் தான் சில மாதங்கள் கற்று வந்தேன். இடையில் ஒரு படத்தில் வந்த கேரக்டருக்காக கேரளாவில் புகழ் பெற்ற களரிச் சண்டையின் அடிப்படை விஷயங்களை தெரிந்து கொள்ள சில மாதங்கள் பயிற்சி பெற்றேன். ஆனால் களரிச் சண்டையின் சிறப்பு என்னை மிகவும் கவர்ந்து விட்டது. அதனால் தொடர்ந்து கற்று வருகிறேன். இந்தக் கலை மிகவும் அழகானது என்றே சொல்லலாம். உடலை எளிதாக வளைக்கலாம், சில நேரங்களில் இதன் பயிற்சிகள் நடனக் கலை போன்று அமைந்திருக்கும். இதில் கம்பு மற்றும் கத்திகளை வைத்துக் கொண்டு நாம் போடும் சண்டை அலாதியானது. இவை அனைத்தும் எனக்கு மிகவும் பிடிக்கும்'' - என்றார்.



சினிமாவில் நடிப்பதற்கு முன் அசின் ஓவியர் டி.கலாதரனின் மாணவி. சில ஓவியக் கண்காட்சிகளும் நடத்திஇருக்கிறார். சமீபத்தில் அசினைச் சந்தித்த கலாதரன், மீண்டும் ஓவியம், வரையச் சொல்லி இருக்கிறார்.

# ஓவியமே ஓவியம்



# யுவராஜ் - கிம் ஷர்மா

யுவராஜ் - கிம் ஷர்மா மீண்டும் இணைந்தது தான் ஸ்டேட்டஸ் ஆகியிருக்கிறது. இருவராலும் பிரிவைத் தாங்கிக்கொள்ள முடியவில்லையாம்.

# இங்கே சாப்பிட பயிற்சி எடுக்க வேண்டும்

விண்வெளி தொழில் நுட்பத்தில் மனிதனின் அடுத்த சாதனை விண்வெளி ஹோட்டல்! பார்சிலோனாவைச் சேர்ந்த 'தி கேலக்டிக் ஷூட் ஸ்பேஸ் ரிசார்ட்' என்ற நிறுவனம் விண்வெளியில் 450 கி.மீ உயரத்தில் ஹோட்டல் கட்டும் முயற்சியில் இருக்கிறது. 2012 ஆம் வருடம் ரிப்பன் வெட்டி இந்த ஹோட்டலைத் திறந்துவைக்க இருக்கிறார்கள். பூமியில் இருந்து கிளம்பினால், ஒன்றரை நாளில் இந்த ஹோட்டலை அடையலாம். ஒரு நிபந்தனை, அங்கே செல்வதற்கு சுமார் ஆறு மாத காலம் பயிற்சி பெறவேண்டும். ஏழு மீட்டர் நீளமும், நான்கு மீட்டர் அகலமும் கொண்ட கண்ணாடி அறையில் தங்கலாம். இந்த ஹோட்டலில் தங்கி இருந்தால், ஒரு நாளைக்கு 15 முறை சூரிய உதயம் காணலாம். அங்கே மூன்று இரவுகள் தங்குவதற்கு ஒருவருக்கு 19 கோடியே 80 லட்ச ரூபாய் (இந்திய ரூபா) கட்டணம். ஒரு பயணத்துக்கு குறைந்தது நான்கு சுற்றுலா பயணிகளும், இரண்டு பைலட்களும் மட்டுமே இருக்க முடியும். இப்போதுவரை ஹோட்டலில் தங்க 200 பேர் ரிசர்வ் செய்திருக்கிறார்கள். ஒன்று மட்டும் நிச்சயம்.. அங்கே கொடுக்கிற காபியில் நிச்சயம் ஈ மிதக்காது!






# இயற்கையான வர்ணங்கள்

ஒரு வண்ணத்துப் பூச்சியை கையில் பிடிக்கிறீர்கள். அதை அப்படியே படம் வரைய ஆசை. அதன் இறகில் உங்களிடம் இல்லாத புது வண்ணம் இருக்கிறது. அதற்கு எங்கே போவது?

கொரியாவின் பேனா டிசைனர் ஜின்சுன் பார் என்பவர் கண்டுபிடித்து இருக்கும் இந்த புதிய பேனா உங்கள் பிரச்சினையை நொடியில் தீர்த்து விடும். எந்த நிறமாக இருந்தாலும் அதை ஸ்கேன் செய்து, அந்த கலர் மையை உடனே தயாரிக்கும்.



பேனாவை வைத்து வரைய ஆரம்பிக்க வேண்டியதுதான்!

வண்ணங்கள் கொட்டிக்கிடக்கும் துலிப் மலரோ, ஜப்பானில் வருடத்துக்கு ஒரு முறையே பூக்கும் சகுரா மர இலையோ, எந்த வித்தியாசமான வண்ணத்தையும் நொடியில் தயாரித்து விடும் இந்த பேனா. ஆப்பிளை வரைய வேண்டும் என்றால் சிவப்பு வண்ணத்தைத் தண்ணீரில் கலந்து ஆப்பிளின் நிறம் வரும் வரை மல்லுக்கட்ட வேண்டியது இல்லை. ஒரு ஸ்கேனில் வேலை முடிந்துவிடும். ஆப்பிள் ஓவியம் ரெடி!



# கொம்புத் தேன்

''மாலா ஆபீசுக்கு நாலைந்து நாள் திடீரேன்று வரவில்லையே... அப்படி என்ன தலைபோற விஷயம்? உன்னைக் காணாமல் நான் எப்படி துடிதுடித்துப் போனேன். தெரியுமா?'' முகேஷ் குடைந்தான்.

''மனசே... சரியில்லை. அதுதான் லீவு போட்டேன். வயசும் விலை வாசிப்போல எறிக்கொண்டு போகுது. வயசுக்கு வந்த தங்கச்சி கூடவே வயதான அப்பா, அம்மா. என் சம்பளத்தை வச்சுத் தான் குடும்பமே ஓடுது. 'சலிப்பு' தான் காரணம்!''

''நான் உன்னை விரும்பிறது உனக்கு நல்லாத் தெரியும். அப்படியிருந்தும் என் நினைப்பு உனக்கு வரவில்லையா?''

''வந்துதான் என்ன செய்ய முடியும். இப்போது உள்ள ஆண்கள் ஆசைவார்த்தை பேசுவாங்க... தன் கதை முடிஞ்சதும் கம்பியை நீட்டுவாங்க. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா?''



''நான் அப்படி இல்லை மாலா'' - முகேஷ் பணிந்தான்.

''உண்மையிலே நீங்கள் என்னை விரும்புகிறீங்கள் என்றால் எங்க அப்பா, அம்மாவிடம் வந்து இன்று மாலை முறையாகப் பெண் கேளுங்க. நாம் மனதார கல்யாணம் செய்யலாம். சந்தோஷமாக வாழலாம்.''

''யோசிச்சு சொல்லுறேன் மாலா''

''நீங்கள் சரியான ஆம்பளை இல்லை. யோசிக்கிறேன் என்பீர்கள். உங்கள் அப்பா, அம்மாவிடம் கேட்டுவிட்டுச் சொல்கிறேன் என்பீர்கள். இது நடக்கிற காரியமா? நீங்கள் யோசிக்கவும் வேண்டாம். முடிவு எடுக்கவும் வேண்டாம். நான் சுயமாய் முடிவெடுக்கிற முழுமையான ஆண்பிள்ளையைத் தேடுகிறேன். நீங்கள் போகலாம்....'' செய்வதறியாது தடுமாறிக் கொண்டு நின்றான் முகேஷ் *



# அவள் வருவாளா?

சிறுகதை

-ச. முருகானந்தன்

தீர்க்கமான ஒரு முடிவு எடுக்க வேண்டிய நிலையில் நிலை கொள்ளாமல் தவித்தாள் சியாமளா. இல்வாழ்க்கை என்பது முடிவேயில்லாத அடிமை வாழ்வாய் தொடர்ந்தால் யார் தான் பொறுத்துக் கொள்வார்கள்? அதிலும் சிறந்த குணவியல்பும், அன்பும், பணிவும், விட்டுக் கொடுப்புமாக கடந்த மூன்று வருடங்கள் தனது அபிலாசைகள் எல்லாவற்றையும் புறம் தள்ளிவிட்டு குடும்பத்திற்காக தியாக வாழ்வு வாழ்ந்தும் கிடைத்தது அவப்பெயர் தானே?

கலியாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என சான்றோர் கூறியதை அறிந்திருந்தும் இளமையின் வெறும் உணர்வுகளுக்கு வடிகாலாக, வெறும் வெளித் தோற்றத்திலும், பகட்டிலும் ஏமாந்து விட்டதை இப்போது காலம் கடந்து தான் உணர்கிறாள் சியாமளா. ரவியின் வசீகரமான தோற்றமும், கலகலப்பும், மோட்டார் சைக்கிள் ஓடும் லாவகமும், அவனது காதலான அணுகு முறைகளும் அவனைப் பற்றி ஆழமாக அறிந்து கொள்ள இடம் தராமல் காதல் வலையில் சிக்க வைத்து விட்டன. அவனது காதலை ஒரு ராஜகுமாரனின் வரவாகவே எண்ணிப் பூரித்தாள். கை நிறையச் சம்பளம் எடுக்கும் மருந்து விற்பனை நிறுவன பிரதிநிதியான அவன், பேசும் அழகான ஆங்கிலமும், கச்சிதமான உடை அலங்காரமும் கூட அவளை ஈர்த்ததில் வியப்பில்லை.

அவர்களது காதல் பெற்றோரின் எதிர்ப்பு என பல தடைகள் தாண்டியதுடன், கொழுத்த சீதனமும் கொடுத்துத் தான் திருமணம் நிறைவேறியது. காதலித்தவனை விட்டு விலக முடியாத தவிப்பு ஒரு புறம், அப்படி விலகி வேறிடத்தில் மணம் முடித்தாலும் அதனால் ஏற்படக் கூடிய சிக்கல் இன்னொருபுறம்! அளவுக்கு அதிகமான சீதனப் பணம், புதிய வீடு, நகைநட்டு என அவர்கள் போட்ட பட்டியல் அவளது குடும்ப நிலைக்கு சற்று அதிகம் தான். இன்னொரு தங்கை பருவ வயதில் இருக்கும் போது அனைத்து சொத்துக்களையும் சியாமளாவுக்கே எழுதி, மேலும் சீதனப் பணத்தின் பற்றாக் குறைக்கு கடனும் வாங்கி அவளது பெற்றோர் நொடிந்து போயினர். கலியாண பேச்சுக் காலத்தில் முதுகெலும்பு இல்லாதவனாக ரவி பெற்றோரின் சொல்லுக்கு எல்லாம் ஆடினானேயன்றி, காதலித்த பெண்ணிடம் சீதனம் வாங்குவது முறையல்ல என்று கூறவேயில்லை.

சியாமளாவுக்கு இது ஏமாற்றத்தை அளித்தாலும் கூட திருமணத்தின் பின்னர் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்தாள். ஆனால் அவள் நினைத்தது தப்பாகிப் போன போது அவள் உடைந்து போனாள். அவனது குடிப்பழக்கமும், டாம்பீக வாழ்வும், சிக்கனமற்ற வாழ்வு முறையும் திருமணத்துக்குப் பின்னரே தெரிய வந்தது. அத்தோடு முசுறு ஆகவும், சந்தேகப் பிராணியாகவும் இருந்தமை அவள் சற்றும் எதிர்பாராத ஒன்று. அம்மாவினதும், அக்காவினதும் கீறிய கோட்டுக்குள்ளாகவே அவன் திருமணத்தின் பின்னரும் இயங்கிக் கொண்டிருந்தமை சியாமளாவுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதாக அமைந்து விட்டது.

திருமணமாகி ஒரு வருடத்திற்குள்ளாகவே பார்த்த வேலையையும் தொலைத்து விட்டு வந்து நின்ற போது சியாமளா நொடிந்து போனாள். அவள் வற்புறுத்திக் கேட்ட போது "முதலாளிக்கு அடிமையாக வேலை செய்ய முடியாது" என்று ரவி பதிலளித்தான். ஆனாலும், அவன் மருந்துகளைக் கையாடியே வேலையை இழந்தான் என்பது தெரியவந்த போது அவன் மீது சியாமளாவுக்கு கோபம் ஏற்பட்டது. எனினும் வெறுக்க முடியவில்லை.

ஒரு சம்பளத்தில் வாழ்வதே சிரமம் இந்த நிலையில் அவனது வீட்டார் அடிக்கடி பணம் கேட்டு நச்சரித்தனர். அத்துடன் குடிப்பழக்கத்திற்கும் அவளது வருவாயே செலவாகிக் கொண்டிருந்தது. சியாமளா கை நிறையச் சம்பளம் எடுத்தாலும் அதை அவனிடமே கொடுக்க வேண்டும் என்பது எழுதாத சட்டமாக இருந்தது. இதனால் திட்டமிட்டு வரவுக்கு ஏற்றபடி செல்வு செய்யவும் அவளுக்கு வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. ஒவ்வொரு மாதமும் பற்றாக் குறையும் கடனும் தான்.

இது தான் இப்படி என்றால், அவளைத் திருமணம் செய்த பலன் தான் அவனுக்கு வேலை போய் விட்டதற்கான காரணம் என சியாமளாவின் மனதை, மாமியாரும், மைத்துனிகளும் போட்டுடைத்த போது சியாமளாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என கண்ணகி போல் பேதையாக வாழ அவள் மனம் இடங் கொடுக்க வில்லை. அவள் எந்த ஆணோடும் கதைக்கக் கூடாது. அப்படிக் கதைத்தால் அவள் மீது சந்தேகச் சேற்றை அள்ளி வீசுவான். சீதை போல் தீக்குளித்து தனது கற்பை நிரூபிக்க வேண்டிய அவசியம் அவளுக்கில்லை. அவளைப் பற்றி அவளது மனசாட்சிக்கு தெரியும். எனினும் அவள் வலுவாக மனமுடைந்து போனாள்.

இன்று நடந்த சம்பவம் அவளை மிகவும் பாதித்து விட்டது. அவள் அலுவலகத்தால் வந்த களையோடு அவனுக்கான தேநீரைத் தயாரித்துக் கொடுத்தாள். வீட்டில் பால்மா இல்லாததால் வெறும் தேநீர் தான். ரவி கோபத்துடன் தேநீர்க் கோப்பையை அவள் மீது வீசினான். சியாமளா திகைத்துப் போய் விட்டாள். கண்கள் பெருக்கெடுக்க நெஞ்சு உறைந்து போய் சிலையாய் நின்றாள். அவள் மீது தேநீரை வீசியதும் அல்லாமல் ஆக்கிரோசமாக அவளை கெட்ட வார்த்தைகளால் ஏச ஆரம்பித்தான். நெஞ்சிலே தேக்கி வைத்திருந்த வேதனைகள் அனைத்தும் மனதைக் கொந்தளிக்க வைத்திட அவள் தன் மௌனத்தைக் கலைத்தாள்

"பால் மா இல்லை வாங்க காசும் இல்லை. கடைக்காரனும் இனி கடன் தர முடியாது என்று சொல்லி விட்டான். நான் என்ன செய்வது?" அழுகையினூடே அவள் கூறுகையில் அவன் "பொத்தடி வாயை.." என்று அவளை ஏசினான். அவள் குமுறி அழுதாள்.

"நான் ஏன் வாய் பொத்த வேணும்?... உழைத்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நீங்கள் வீட்டில் சும்மா இருக்கிறதுமில்லாமல் குடிச்சு அழிக்கிறியள். குடிக்கிற காசில பால்மா வாங்கியிருக்கலாம் தானே?"

இவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்த போது அங்கு வந்த அவனது அம்மாவும் அக்காவும் அவளை ஏசினர். "ஒரு ஆம்பிளை என்ற மதிப்பில்லாமல் வாய் காட்டுறாய் என்ன? ஒரு நாள் பார்த்து நாங்கள் அவனை ஏசியிருக்க மாட்டம். உனக்கு இவ்வளவு திமிரோ?" மாமியாரின் குதர்க்கமான தலையீட்டில் அவள் பொருமி வெடித்தாள்.

"அது சரி.. நீங்கள் சரியாக கண்டிச்சு வளர்த்திருந்தால் இந்தக் கூத்து ஆடுவாரா? ஆம்பிளை ஆம்பிளையாக நடந்தால் யார்தான் மதிக்க மாட்டினம்?" சியாமளாவின் பதில் மாமியாரையும் மைத்துனியையும் பாதிக்கவே அவர்களும் ரவியோடு சேர்ந்து அவளைத் திட்ட ஆரம்பித்தனர். ரவி அவள் கன்னத்தில் அறைந்தான்,

சியாமளா சினத்துடன் கத்தினாள். "இது எனக்கும் என் புருஷனுக்குமிடையிலான பிரச்சினை. ஒருத்தரும் தலையிடத் தேவையில்லை".

"உனக்கு எப்ப புருஷனாக வந்தவன்? நான் பெத்து வளர்த்து ஆளாக்கினவன். எனக்கில்லாத உரிமை உனக்கு எங்கேடி வந்தது?... எத்தினையோ இடத்திலை பெரிய பெரிய சீதனத்தோட பேசி வந்ததை விட்டுட்டு, காதலிச்சிட்டான் என்று குறைஞ்ச சீதனத்தோட செய்து வைச்சது தான் பிழை..." மாமியாரின் வார்த்தையில் அவள் தவிடு பொடியாகிப் போனாள். இருப்பது எல்லாவற்றையும் கொடுத்து விட்டு இன்று தங்கைக்கும் திருமணம் செய்து வைக்க முடியாமல் தவிக்கும்போது இப்படி ஒரு குற்றச்சாட்டு என்றால் எப்படித் தாங்கிக் கொள்வது. அவள் அழுதபடி அறைக்குள் சென்று படுத்தாள். மாமியாரும் மைத்துனியும் ஓயவில்லை. அவளைப் பற்றி அபாண்டமாகப் பேசியபடி நீண்ட நேரம் அவனுக்கு உருவேற்றினர்.

மறுநாள் கணவன் எழும்ப முன்னரே கடிதம் ஒன்றை எழுதி வைத்து விட்டு அவள் பெற்றோரிடம் போய்விட்டாள். போராடிக் களைத்துத்தான் இறுதியில் இந்த முடிவை எடுத்தாள் சியாமளா.

மறுநாள் தேநீர் தரவும் யாருமில்லாததால் ரவி தாமதமாகவே எழும்பினான். வீடு வெறிச்சோடிப் போயிருப்பதைக் கண்டு எழுந்து சியாமளாவைத் தேடினான்.. அவளது கடிதம் தன்னில் பட்டதும் படபடப்புடன் வாசித்தான்.

அவள் போய்விட்டாள் என்பது முதலில் சினத்தை ஏற்படுத்தினாலும், மெல்ல மெல்ல மனதில் கவலை படிய ஆரம்பித்தது. தாயாருக்கு தகவலை தொலைபேசி மூலம் தெரிவித்தான். தாயும், சகோதரியும் விழுந்தடித்துக் கொண்டு வந்தனர். அவள் வீட்டை விட்டுப் போய் விட்டதாக வசை பாடினர். முதற் தடவையாக ஏனோ ரவியின் மனதில் சினம் ஏற்பட்டது.

"சியாமளா போயிட்டாள்.. இப்ப என்ன உன் கூட இருந்து சமைச்சுத் தாறன்.." அம்மா அவனுக்கு ஆறுதல் கூறினாள். அக்காவோ ஆத்திரத்துடன் கூறினாள், "இவள் பார்க்கும் படி நீ இன்னொரு கலியாணம் கட்டவேணும். ஒரு அவசரத்துக்கு நகையை அடவு வைக்கத் தராத அவளெல்லாம் ஒரு பொம்பிளையோ?"


அன்று முழுவதும் ரவி குழம்பிப் போயிருந்தான். "ரவி.. சமையலுக்கு சமான் வாங்க வேணும். காசு வைச்சிருக்கிறியே?" அம்மா கேட்டதும் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கையில் பணம் இல்லை. இப்போது அவனுக்கு உறைத்தது. சியாமளா காசில்லாமல் தினம் தினம் எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பாள்.. காசு இருந்திருந்தால் பால் டீ தந்திருப்பாள் தானே? ம்... நான் அவசரப்பட்டிட்டன்.

"காசில்லையே மகன்..? பாப்பம் ... இருக்கிறதில் ஏதாவது சமாளிப்பம்.." அம்மா ஏதோ சாப்பாடு செய்ய அடுக்களைக்குச் சென்று விட்டாள். அவன் கவலையோடு அமர்ந்திருக்கையில் அடுத்த வீட்டிலிருக்கும் குமார் வந்தான். "என்ன ரவி, ஒரு மாதிரி இருக்கிறாய்?" குமாரின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவன் யோசனையில் ஆழ்ந்திருந்தான். சியாமளாவின் அன்பும், அர்பணிப்பான செயற்பாடுகள் எல்லாம் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தன. மனதில் இனம்புரியாத ஒருவகை உணர்வில் உடலைச் சிலிர்த்துக் கொண்டான்.

உள்வீட்டுப் பிரச்சினைகளை ஏன் பிறரிடம் கதைப்பான் என மௌனம் காத்த ரவியை நோக்கிப் புன்னகைத்த குமார், "ரவி.. வீட்டில நடந்ததெல்லாம் எனக்குத் தெரியும், கணவன் மனைவிக்கு இடையில் சண்டை வாறது சகஜம். ஆனால், அதில மற்றவை தலையிட்டால் வீண் குழப்பம் தான். கலியாணத்துக்கு முன்னர் பெற்றவைக்குத் தான் முதலிடம். ஆனால், கலியாணத்துக்குப் பின்னர் மனைவிக்குத் தான் முதல் இடம். ஆனால், தாயோடு பகிர்ந்து கொள்ள முடியாத பல விடயங்களை மனைவியோட தான் மனம் விட்டுப் பகிர்ந்து கொள்ள முடியும். நீ போய் உன்னுடைய மனைவியைக் கூட்டி வாறது தான் நல்லது.. நான் உங்கட குடும்பப் பிரச்சினையில் தலையிடுகிறதா நினைக்காதே.. அதோட உனக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி.. நான் வேலை செய்கிற நிறுவனத்தில ஒரு வெற்றிடம் வருகுது. அதில உன்னைப் போடுறதுக்கு கதைச்சனான்... திங்கட்கிழமை நேரடிப் பரீட்சைக்கு வரச் சொல்லியிருக்கினம் அது தான் சொல்லுவமென்டு வந்தனான்".

நண்பன் குமாரின் வார்த்தைகள் அவனைச் சிந்திக்க வைத்தது.

அன்றைய பொழுது சியாமளாவின் பிரிவு அவனது மனதை மிகவும் பாதித்தது. அவள் அருகே இருந்தால் ஓடி ஓடி அவனது தேவைகளை எல்லாம் கவனிப்பாள். இன்று அவளில்லாமல் வீடே வெறிச்சோடிப் போயிருந்தது.



அடுத்த நாளும் சமையலுக்கு சாமான்கள் எதுவும் வீட்டில் இருக்கவில்லை. அம்மா புறுபுறுத்துக் கொண்டிருந்தாள். "வீட்டில சமைக்கிறதுக்கு தோதாக ஒரு சாமானும் இல்லை... என்னத்தைச் சமைக்கிறது? ... நான் மகள் வீட்டுக்குப் போறன்.. சாப்பிட அங்கே வா தம்பி.." அம்மா சொல்லிவிட்டு வெளிக்கிட்டா. ரவியின் மனம் துணுக்குற்றது.

'உண்மை தான்.. வீட்டில சாமான்கள் இல்லாமல் எப்படி சமைக்கிறது? இதைத் தானே சியாமளாவும் சொன்னாள்... அதற்குத் தானே எல்லோரும் மல்லுக் கட்டுக் கொண்டு கிளம்பினோம். பாவம் அவள்தான் என்ன செய்வாள்? அவளது வருமானத்தில் தானே குடும்பம் நடக்குது? ம்.. நான் தான் பொறுப்பில்லாமல் இருந்திட்டன்.. சம பங்காளியாக இணைந்து வாழவேண்டிய மனைவியை அதிகாரத்துடன் கை நீட்டி அடிச்சிட்டன்... பாவம் சியாமளா' - ரவியின் மனது தன் தவறுகளுக்காய் வருந்தியது.

சியாமளாவைக் காதலித்தது, அவளது காதலுக்காக அவள் பின்னே சுற்றித் திரிந்தது, அவளது இறுகிய மனதை தளரவைத்தது, பின்னே காதல் வானில் இருவரும் சிட்டுக்குருவிகளாகப் பறந்த வேளையில் எதிர்கால வாழ்வைப் பற்றி பலவித கற்பனைக் கோட்டைகளைக் கட்டியது - இவை யாவும் ஒவ்வொன்றாக அவன் மனதில் வசந்தமாய் வீசி, அதே சமயம் இப்போதைய பிரிவு, துயர் கொள்ள வைத்தது. 'சீ நான் எவ்வளவு சின்னத் தனமாக நடந்து விட்டேன். இத்தனை கஷ்டங்களுக்கு மத்தியிலும் குடிப்பதற்கும் செலவு செய்து விட்டேனே..' ரவியின் மனது உருகியது. பிரிவில்தான் காதல் புரியுமோ?

ஒரு முடிவுக்கு வந்தவனாக சியாமளாவை அழைத்து வரப் புறப்பட்ட ரவியின் மனது இப்போது தெளிவாக இருந்தது. *

## சர்வதேச மகளிர் தினம்

# விழித்தெழு பெண்ணே!



எம். சாந்தி

உலகம் முழுவதும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகின்றது. இன்றைய தினம் மட்டுமே பெண்களை மகிமைப் படுத்தவும், போற்றவும், ஊடகங்கள் மூலம் பெருமைப்படுத்தவும் செய்கின்றனர்.

திறமைகளை தனக்குள்ளே பூட்டி வைத்து தன் குடும்பத் தவர்களின் நலனிலே அக்கறை கொண்டு அவர்களுக்காகவே வாழ்ந்து வாழ்க்கையை முடித்துக் கொண்ட பெண் இனம், காலத்தின் மாற்றத்தால் முன்னேற்றம் கண்டு இன்று விண்வெளி வரை சென்று வரும் துணிவினைப் பெற்றுள்ளனர் பெண்கள். கல்வி, கலை, கலாச்சாரத்தில் மட்டுமன்றி பல்வேறு துறைகளிலும் பெண்கள் தங்கள் பங்கினை ஆற்றுகின்றனர்.

அடுப்பங்கரையே வாழ்வில் பிரதானம் என்ற காலம் மாறி அகப்பை பிடித்த கைகள் இன்று ஆயுதம் தாங்கி நாட்டைக் காக்கும் இராணுவத்துறையிலும், காவல்துறையிலும் பணியாற்றுகின்றனர். வீட்டின் தலைவியாக இருந்தது மாத்திரமின்றி மக்களால் பிரதிநிதித்துவப்படுத்தி நாட்டின் தலைவியாகவும் தேர்வாகி நாட்டையே ஆட்சி செய்யுமளவிற்கு தமது நிர்வாக திறமையை வெளிப்படுத்துகின்றனர் பெண்கள்.

இவ்வாறு பல்வேறுதுறைகளிலும் பெண்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி காணும் போதிலும், உலகில் ஏதோ ஒரு இடத்தில் நாளுக்கு நாள் பெண்கள் வன்முறைக்கும், துஷ்பிரயோகங்களுக்கும் அடக்கு முறைகளுக்கும், இழிவான வார்த்தைத் தாக்கங்களுக்கும் முகம் கொடுத்த வண்ணமும் உள்ளனர்.

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு பின்னும் ஒரு பெண்ணிருப்பாள் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் பெண்ணின் பின்னால் இருந்து அவளுக்கு ஊக்கமும் உற்சாகமும் கொடுக்க எத்தனை ஆண்கள் உள்ளனர் என்பது சந்தேகமே? பல பெண்களை முன்னேற்றுவதாக பறைசாட்டும் ஆண் கூட தன் மனைவியின் திறமைகளை மதிக்காமல் வீட்டில் பூட்டி வைக்கும் சமுதாயம் தான் இது.

பெண்ணாக துணிந்து வெளியேறி முன்னேறவிட்டால் அவளுடைய திறமைகள் வெளிவருவது அரிதே. ஓர் ஆண் கற்ற கல்வி அவனுடைய திறமைக்கு மாத்திரமே. ஒரு பெண் கற்ற கல்வி அவள் குடும்பம், சமுதாயம் என விரிவுபடுகிறது.

பெண்களை முன்னேற்றுகின்றோம் என்று அவர்களை இழிவுபடுத்தும் செயல்களும் எம் மத்தியில் நடைபெறுகிறது. குறிப்பாக தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் விளம்பரங்களில் ஆண்கள் பயன்படுத்தும் முகச்சவரம், அவர்கள் அணியும் ஆடைகள் போன்றவற்றை அறிமுகப்படுத்தும் விளம்பரங்களுக்கு கூட பெண்களை அறைகுறை ஆடையில் உலாவரச் செய்வார்கள். இது அவசியம் தானா?

பெண்ணை ஒரு போகப் பொருளாகப் பார்க்கும் காலம் சென்று அவளையும் தனக்கு சமனான ஒருவராக மதிக்கும் சமுதாயம் மலர வேண்டும்.

நம் நாட்டில் கணவனை இழந்த பல விதவைப் பெண்கள் தம்முடைய குடும்பத்தை வறுமையோடு போராடி வாழ வைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆண் துணை இல்லாமல் அவளுடைய தன்னம்பிக்கையிலும், தைரியத்தினாலும் தமது பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குகின்றனர்.

பெண் துணிவோடு துணையின்றி இந்த சமூகத்தில் வாழ்ந்தாலும் அவளுக்கு விரைவில் அவப்பெயரை ஏற்படுத்தி விடுகிறது இந்த சமூகம். பெண்ணுக்கு ஒரு புறம் ஆண் எதிரியாக இருந்தாலும் மற்றுமொரு புறம் பெண்ணுக்கு எதிரி பெண்தான். ஆணின் எண்ணம் தன்னுடைய இடத்திற்கு சரிசமமாக அவள் வருகிறாளே என்பது மட்டும் தான். ஆனால் பெண்ணோ அவள் வளரவே கூடாது என்று எண்ணும் பொறாமை குணம் படைத்தவர்களாகத் தான் இருக்கிறாள்.

அண்மையில் ஒரு பெண்மணியை சந்தித்தேன். அவர் 1985 களில் அரச வானொலியில் தனது ஆக்கங்களை அனுப்பி பிரபல்யம் பெற்றிருந்த ஒரு பெண்மணி. அவரின் அறிமுகம் கிடைத்தவுடன் எனது முதல் கேள்வி ஏன் உங்களுடைய ஆக்கங்கள் இப்போது எந்த ஊடகங்களிலும் காணோம் என்பது தான். அதற்கு அவர் கொடுத்த விளக்கம், நான் பாடசாலை நாட்களில் தான் என்னுடைய ஆக்கங்களை எழுதி வந்தேன். என்னுடைய வகுப்பாசிரியரின் ஊக்கம் தான் என்னை வளர்த்தது. ஆனால் பாடசாலை படிப்பு முடிந்துவீட்டில் நான் இருந்த போது பல ஆக்கங்களை எழுதி என் தந்தையிடம் தபாலிட கொடுப்பேன் அத்தனையும் குப்பைத் தொட்டியில் தான் விழுந்தது.

என் தாயாருக்கு நான் இவ்வாறு பிரபல்யம் அடைவது பிடிக்கவில்லை. நான் இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவள், எனக்கு மூன்று பெண்கள் சகோதரிகள். அவர்களிடம் இல்லாத திறமையும் துணிவும் எனக்கு மட்டும் ஏன் என்ற கேள்வியோடு என்னை அடக்கினார்கள். எனக்கு 16 வயதிலேயே திருமணம் நடந்து விட்டது. ஆனால் இன்று உங்களைப் போன்ற பெண்களைக் காணும் போது மகிழ்ச்சியாக உள்ளது. பெண்களுடைய திறமைகளை வெளிப்படுத்த அவர்கள் துணிந்தால் மட்டுமே முடியும் என்பதை அறிந்து கொண்டேன். நாம் வாழும் காலம் சிறிதாயினும் அதில் எம்மால் முடிந்த நல்ல பயனுள்ள விடயங்களை பகிர்ந்து விட்டுச் செல்லவேண்டும் என்றார் அந்தப் பெண்மணி.

உண்மைதான், போராட்டமான வாழ்க்கையில் என்றுமே போராடிக் கொண்டிருப்பவள் பெண்தானே. இதுபோல் எத்தனை உள்ளக் குமுறல்கள் உறங்கிக் கொண்டிருக்கின்றன.

## மலையகப் பறவைகள்

மலையகப் பறவைகள்
கூண்டுக்குள்
அடைக்கப்பட்ட - மனித
அகதிக் குருவிகளா....?
மலையக உறவுகள்

தேயிலைச் செடியின்
கொழுந்துகளோடு-- சேர்ந்தெழுந்து
ஒடிந்து போகின்றது
வருங்கால வசந்தப் பூக்களும்....
அடக்கு முறையும்.....
அனியாயமும்... ஆட்சி
நடாத்துகின்றன
இந்த அழகான கிராமத்தில்....

நாளைக்கு என்று...
சேர்த்து வைப்பதற்க்கு
மிச்சம் இருப்பது
வியர்வைத் துளிகள்தான்.
அரசியலில் மாற்றம்
வந்தால் என்ன...?
ஆன்மீகத்தில் மாற்றம்
வந்தால் என்ன...?
ஊதியத்தில் உயர்வு இல்லையே...

முதுகினிலே தொங்கும் - கூடைக்குள்
கொழுந்துகளை பறித்துப்
போடும் முன்னரே....
நிரம்பி வழிகின்றது
கனவுகள்.

பனியோடும் - குளிரோடும்
படுத்து தூங்கினாலும்... காலையில்
காரணமில்லாமல் கசிகின்றதே
கண்ணீர்த் துளிகள்.

கொழுந்துகளைப் பறிக்கவே
குனிந்தாலும் - இவர்கள்
வாழ்க்கையில்....
நிமிர்ந்து நிற்கவேண்டும்.

வி. முகிலன்
நெடுந்தீவு - 13

## மனங்களில் நிலைத்திருக்கும் சாதனைப் பெண்மணிகள்

கருணை உள்ளம் அன்னை திரேசா. இந்தியாவில் கல்கத்தாவில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சேவை செய்தே தன்னுடைய வாழ்நாளை கழித்துள்ளார். 26.08. 1910 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தனது 87 ஆவது வயதில் (05.09.1997) இவ்வுலகை விட்டுச் சென்றார்.





உலகின் முதலாவது பெண் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க. 17.04.1916 ஆம் ஆண்டு பிறந்த இவர் மூன்று தடவைகள் பிரதமராக இருந்துள்ளார். 2000 ஆம் ஆண்டு தனது 84 ஆவது வயதில் இறந்தார்.

விண்வெளி வீராங்கனை கல்பனா சவ்வுலா. உலகின் முதல் பெண் விண்வெளி ஆராய்ச்சியாளர். 17.03.1962 ஆம் ஆண்டு இந்தியாவில் பிறந்தார். இவர் 31 நாள், 14 மணித்தியாலங்கள், 54 நிமிடங்கள் விண்வெளியில் இருந்திருக்கிறார். 2003 ஆம் ஆண்டு விண்வெளியில் ஏற்பட்ட விபத்தில் தனது 40 ஆவது வயதில் உயிரிழந்தார்.



## கனவுகள்

ஒரு இரவா? இரு இரவா?
உறங்கும் நேரமெல்லாம்
என் உறக்கத்தில் வருகின்ற
பல கனவுகள்.....!

இருட்டட்டும் இரவுகள்
விளிக்கட்டும் எனது விழிகள்
வர்ணசாலையில் வருகின்ற
என் வசந்த கனவுகள்

மலர்களையும் தென்றலையும்
என் தோழிகளாகவும்
சப்தமிடும் பறவைகளின் ரீங்கார இசை
எனக்கு இனிமையாகவும் விளிக்கிறது

சாதனைகள் சில பரிசுகளோ பல
...நகிறது ஆனந்த கண்ணீர் என்
தாயின் விழியிலிருந்து
கரகோச இசைகள் எனது வெற்றியை
தொடர செய்கிறது......

எனது கனவுகள் நிஜத்தின்
நிழல்களாக தெரிகிறது
இன்று மௌனமாக மயக்கத்தில்
இருக்கும் என் கனவுகள்
என்றோ உயிர்பெறும் என்ற நம்பிக்கை
என்னுள் ஒளி பெற்று ஒளிர........

எஸ். பிரசாந்தி
ஹோல்புறுக் பறா்
அக்கரப்பத்தன.

நமது அன்பின் தன்மைக்கு ஏற்பவே செயல்கள் இருக்கும் நம் செயல்களுக்கு ஏற்பவே வாழ்க்கை இருக்கும்

# கடந்த வாழ்க்கையை திரும்பிப் பார்க்க வேண்டும்!

நம் எல்லோருக்கும் வாழ்க்கைப் பின்னணி என்ற ஒரு பின் புலம் இருக்கிறது. இதிலே நாம் தீர்மானித்ததும் தீர்மானிக்காததுமான பல விடயங்கள் நடந்தேறியிருக்கின்றன.

அதென்ன நாம் தீர்மானித்த விடயங்கள்? நம்மால் தீர்மானிக்க முடியாமல் போன விடயங்கள் என்றொரு கேள்வி நமக்குள் வரலாம்!




உதாரணமாக நாம் எங்கே பிறக்கப் போகிறோம், யார் யாருக்குப் பிள்ளையாய் பிறக்கப்போகிறோம், நம்முடைய பெற்றோர் எப்படிப் பட்டவர்களாக இருக்க வேண்டும், எந்த மதத்தில் எந்த ஊரில், எந்த மொழியில் எமது ஜனனம் இருக்கும் என்பதெல்லாம் நாம் தீர்மானித்து எடுத்த முடிவல்ல.

ஏதோ இவையெல்லாம் நமது தீர்மானமாக இல்லாவிட்டாலும் கூட நாம் பிறந்து வளர்ந்து இப்பொழுது இந்த நிலையை அடைந்து விட்டோம்.

கடந்த காலம் என்பது இப்பொழுது நமது கட்டுப்பாட்டில் இல்லை. அது நம்மை விட்டு மறைந்து விட்டது. என்றாலும்; நிகழ்காலமும் எதிர்காலமும் இன்னமும் நமது கட்டுப்பாட்டில் தானே இருக்கிறது. இது நமக்குப் பெரும் ஆறுதலைத் தருகிறதல்லவா!

அப்படியானால் இருக்கும் காலத்தை எப்படி நாம் ஒரு உச்சப் பயனைப் பெறுவதற்காக ஒழுங்கமைத்து வெற்றி பெற லாம் என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

கடந்த காலம் சிறிது கூட எனது கட்டுப் பாட்டில் இல்லாத போதும், அதன் தாக்கம் இன்னமும் நமக்குள் பெரும் தாக்கத்தைச் செலுத்தி எம்மை அலைக்கழிக்கலாம்.

இந்த விடயத்தில் நாம் விரைந்து செயலாற்ற வேண்டும். விவேகத்தோடு சிந்தித்து கடந்த கால கசப்பான அனுபவங்களைச் சாதகமானதாக மாற்றியமைக்க வேண்டும்.

உதாரணமாக, நாம் பரம்பரை ஏழை ஒருவரின் வயிற்றில் அல்லது தாழ்வாக மதிக்கப் படும் சாதி அமைப்புள்ள சமுதாய அமைப்பில் பிறந்து விட்டோம் என்பதற்காக சதாகாலமும் இதுதான் என் தலைவிதி என்றெண்ணி நொந்து நொந்து சாக வேண்டும் என்ற அவசியமில்லை.

சமுதாயத்தில் ஒரு குறை மதிப்புள்ள அல்லது ஒதுக்கி வைக்கப் பட்டுள்ள அல்லது இன்னும் சொல்லப் போனால் அந்தஸ்துக் குறைவாக அளவிடப்படும் ஒரு சமுதாய அமைப்பில் நமது இளமைப் பருவம் அமைந்து விட்டது என்பதற்காக இப்பொழுது நாம் இருக்கும் நிகழ்காலத்தையும், இன்னமும் நம்மை எதிர் நோக்கியுள்ள எதிர்காலத்தையும் இழந்து விடக்கூடாது.

கடந்த காலத்தின் கசப்பான அழுத்தங்கள் எதிர்காலத்தின் நம் இலக்குகளை நோக்கிச் செல்வதற்கு தடையாக இருப்பதை ஒரு போதும் நாம் அனுமதிக்க முடியாது.

எனவே எமது பின்னணி எமது எந்த வகையில் எமது எதிர்கால இலக்குகளை நோக்கி இழுத்துச் செல்வதற்குத் தடையாக இருக்கிறது என்பது பற்றி நாம் அலசி ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

எமது சிறந்த எதிர்கால இலக்கிகளை நோக்கி விரைவாகவும் விவேகமாகவும் செல்வதற்கு நாம் இப்பொழுதே திட்டமிட வேண்டும்.

இலக்குகளை நோக்கிச் சென்று கடந்த காலப் பாதிப்பின் அழுத்தங்களை எவ்வாறு முறியடிக்கலாம் என்பது பற்றி அடுத்த வாரம் காண்போம்!

உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும் குடும்பப் பிரச்சினைகள், சந்தேகங்கள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர்
ஏ.எச்.ஏ.ஹுஸைன்.
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
'உளநல ஆலோசனை'
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்தமல்லி மாராச்சி
மாவத்தை, கொழும்பு - 14.
ஈமெயில் :
abdulhussein525@gmail.com

# தனிமை வாட்டுகிறது இருக்கும் காலத்தை கழிப்பது எப்படி?



**கேள்வி:** எனக்கு வயது 58, பெண். அரசாங்க உத்தியோகம் பார்த்து விட்டு இப்போது ஓய்வூதியம் பெறுகிறேன். ஆண் மக்கள் மூன்று பேர். அவர்கள் திருமணம் முடித்துச் சென்று விட்டார்கள். இப்பொழுது என்னைத் தனிமை வாட்டுகிறது. இருக்கும் காலத்தை நான் எப்படிக் கழிக்கலாம்?

**பதில்:** ஆங்கிலத்தில் RETIRED என்று ஓய்வு பெறும் நிலையைச் சொல்லுவார்கள். இது மீண்டும் களைப்படைந்த நிலையைக் குறிக்கும். வாழ்க்கையோட்டம் முழுவதும் உழைத்துக் களைத்தவர்கள் ஓய்வு பெற வேண்டும் என்பதற்காகவே இந்த ஓய்வுச் சலுகை வழங்கப் படுகிறது.

இது எம் திருநாட்டிலுள்ள சிறப்பு ஏற்பாடும் ஒரு வரப்பிரசாதமும் ஆகும்.

எனவே இந்த சலுகையைப் பயன்படுத்தி இன்னமும் உடலுக்கும் உள்ளத்திற்கும் திருப்தியளிக்கக் கூடிய பல காரியங்களை ஆற்றலாம்.

பொதுவாக உடலும், மனமும் சோர்ந்து போகக் கால கட்டம்தான் இந்த ஓய்வூதியக்காலம். எனவே அதனைச் சிறந்த முறையில் பயன் படுத்தினால் மன நெருக்கீடுகளிலிருந்து தப்பிக் கொள்ளலாம்.

பொதுப் பணியாற்றுவது, தான் தர்மப் பணிகளில் ஈடுபடுவது, வணக்க வழிபாடுகளைச் செய்வது, புத்தகங் களை எழுதுவது, ஆய்வுகளை மேற் கொள்வது, கடந்த கால உங்களது அனுபவங்கள் எதிர்கால சந்ததிக்கும் பயன்படும் வண்ணம் அவற்றை ஆக்க பூர்வ வரலாறாகப் பகிர்ந்து கொள்வது என்று எதையாவது செய்யலாமே.

இவைகளோடு சேர்த்து வீட்டுத் தோட்டம், மற்றும் இருந்த இடத்திலிருந்தே வருமானம் ஈட்டக் கூடிய சிறிய கைப்பணிகள் போன்றவற்றையும் செய்யலாம். பேரப் பிள்ளைகள் இருந்தால் அவர்களுக்கும் உதவலாம். பொருத்தமானதை யோசித்துப் பாருங்கள்.

**கேள்வி:** எமது இளமைக் காலத்தில் குடும்பத்தில் மிக அன்பும் ஆதரவும், இரக்கமும், குதூகலமும், நெருக்கமும் இருந்தது. ஆனால், பின்னாட்களில் இவை எல்லாம் தலைகீழாக மாறி குடும்பத்திற்குள் பிளவு ஏற்பட்டு விட்டது. சகோதரர்கள் சொத்துக்களுக்காகச் சண்டை போட்டுக் கொண்டு இப்பொழுது ஆளாள் முகம் பார்ப்பதே இல்லை. எமது சகோதரர்களான ஆண்களும் பெண்களும் இப்படித்தான் இருக்கிறார்கள். இது மன வேதனையைத் தருகிறதே!

**பதில்:** இது நிச்சயம் மன வேதனையை மட்டுமல்ல,எத்தனையோ ஈடுசெய்ய முடியாத இழப்புக்களையும் தரும்.

ஒரே தாய் வயிற்றில் பிறந்து, ஒன்றாகவே பாராட்டிச் சீராட்டி வளர்க்கப்பட்டு, இறுக்கமான பாசப்பிணைப்புக்களாக இருந்தவர்கள் பின்னால்களில் இவ்வாறு சிதைந்து சின்னாபின்னப்பட்டுப் போகிறார்கள்.

முன்னர் குடும்பத்தில் நிலவிய அன்புக்கும், பாசத்திற்கும் அர்த்தமில்லாமல் போய் விடுகிறது. ஆளாளுக்கு அடிதடியில் இறங்கி இரத்தக் களரியை ஏற்படுத்தி விடுகிறார்கள். அவர்கள் இரத்த உறவுகள் என்பதை விட குறைந்த பட்சம் மனிதாபிமானத்தைக் கூடப் பார்ப்பதில்லை பாலூட்டி வளர்த்த தாயையே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விசாரிக்குமளவுக்கு நிலைமை மாறி விட்டிருக்கிறது.

இதுவெல்லாம் சொத்துப் பங்கீட்டில் ஏற்படுகிறது இன்னும் சில வேறு புரிந்துணர்வின்மையினால் உருவாகிறது.

ஆனால், தூய்மையான அன்பும், அரவணைப்பும்,பாசமும், பரிவும் இருந்தால் இவையெல்லாம் ஏற்பட வாய்ப்பே இல்லை. இப்பொழுது இவற்றுக்கெல்லாம் விலைபேசப் படுகிறது.

ஆனாலும், கூரிய வன்மையான கத்திமுனையை மென்மையான பஞ்சைக் கொண்டு தடுத்து காய மேற்படாமல் பாதுகாக்கலாமல்லவா! இதுதான் வன்முறைக்கும் மென்முறைக்குமுள்ள வேறுபாடு இது மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம்.

***

பலரின் வேண்டுகோளுக் கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக்கப்படும் வாசகர்களால் அனுப்பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப்பிடப்படவில்லை.

# முகம் பளபளக்க...



அழகாக இருக்க வேண்டும்; முகம் பளபளக்க வேண்டும் என்ற ஆசை இல்லாத பெண்களே இருக்க முடியாது. இதை தவறு என்றும் கூற முடியாது. இதற்காக அதிகம் கஷ்டப் படவும் தேவை இல்லை. எளிய முறைகள் மூலமே மாசுமருவற்று முகம் பளபளக்க செய்ய முடியும்.

★ முட்டையின் வெள்ளைக்கருவை அவ்வப் போது முகத்துக்கு தேய்த்து முகம் கழுவி வந்தால் போதும், கொள்ளை அழகாக முகம் காட்சி அளிக்கும்.

★ முகத்தில் ஏதாவது தழும்புகள் நீண்ட காலமாக மாறாமல் இருக்கின்றனவா? அவரை இலையை சாறு பிழிந்து தடவி வந்தால் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து விடும். நுங்கின் உள்ளே இருக்கும் நீருடன் சிறிது எலுமிச்சை சாறை கலந்து முகத்தில் பூசினால் வேர்க்குரு எட்டிப் பார்க்காது. மாயமாக மறைந்து விடும்.



★ முகத்தில் பருக்கள் தோன்றினால் ஜாதிக்காயை சிறிதளவு குழைத்து தினமும் பருக்கள் மீது தடவி வந்தால் இருந்த இடம் தெரியாமல் போய் விடும்.

★ இள வயதில் சிலருக்கு நரை தோன்றலாம். இதற்காக கவலைப்பட வேண்டாம். சீகைக்காய், பாசிப்பயறு, பச்சரிசி, சிறிது கறிவேப்பிலை, மருதாணி இலை ஆகியவற்றை காய வைத்து அரைத்து தலைக்கு தேய்த்து குளித்து வாருங்கள். அப்புறம் பாருங்கள்... நரை மறைந்து விடும்.

★ வேப்பிலையையும், மஞ்சளையும் அரைத்து, தலைக்கு தேய்த்து குளித்தால் பொடுகு வராது. இருந்தாலும் மறைந்து விடும்.

★ செம்பருத்தி பூவை நன்றாக காய வைத்து தேங்காய் எண்ணெயில் போட்டு வைத்து தலைக்கு தேய்த்தால் கூந்தல் செழிப்பாக வளரும்.

★ துளசி இலையை அரைத்து தலையில் தடவி குளித்து, பிறகு ஷாம்பு போட்டு குளித்தால் பேன்கள் வராது.

★ தலைமுடி உதிர்கிறதா? முட்டையின் வெள்ளைக் கருவை எடுத்து தலையில் தேய்த்து 10 நிமிடம் கழித்து சீயக்காய் போட்டு குளியுங்கள். தலைமுடி உதிர்வது நின்று விடும்.

★ மேனி பளபளப்பாக இல்லை என்றால் சோறு வடித்த கஞ்சியை தினசரி ஒரு டம்ளர் குடிப்பதுடன் குளிக்கும் போது அந்தக் கஞ்சியை உடலில் தேய்த்து குளிக்க வேண்டும். உடல் பளபளப்பாகி விடும்.

★ எலுமிச்சை சாறை கைகளில் பூசி உலர்ந்தவுடன் கை கழுவி வந்தால் கைகள் அழகாக காட்சி அளிக்கும்.


★ இவை தவிர காய்கறிகளை உணவில் நிறைய சேர்த்துக் கொள்ளவேண்டும்.

# சகோதரிகளின் பார்வைக்கு...

பெண்

தொகுப்பு: சாந்தி

## ஏமாற்றி இன்பம் காணும் குணம் கொண்ட நண்பன்!



1999 ஆம் ஆண்டு இலங்கையின் பிரபல்யமான வானொலி சேவை ஒன்றின் மூலம் எனக்கு பேனா நட்புக் கிடைத்தது. பல நட்புள்ளங்களின் உறவு கிடைத்தாலும் ஒரு நண்பரது உறவு மட்டும் பல வருடங்களாக நீடித்தது. காரணம் அப்போது எனக்குள் புதைந்து கிடந்த வேதனைகளுக்கும் ஏக்கங்களுக்கும் ஆறுதல் தருவதாகவும் அமைதி தருவதாகவும் அந்த நண்பரது மடல்கள் அமைந்திருந்தன. எங்களது நட்பு 2003ஆம் ஆண்டுவரை எந்தத் தடைகளுமின்றி தொடர்ந்தது. ஆனாலும் எனக்குள் ஒரு பயம் இருந்தது. இந்த நட்பு காதலாக மாறிவிடுமோ? என்று, நாங்கள் இருவரும் மதங்களால் வேறுபட்டவர் கள். எங்கள் மதங்களில் அதீத ஈடுபாடு கொண்டவர்கள். பயமெல்லாம் என் நண்பர் என்னை மதம் மாற்றி விடுவாரோ என்று. அதனால் நானாகவே என் தொடர்பை நிறுத்திக் கொண்டேன்.

பின்னர் எனக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. ஆசிரிய பயிற்சிக் கலா சாலையில் 2வருடங்கள் கடந்தன. அங்கிருக்கும் போதும் என் எழுத்தாக்கங்கள் சில பத்திரிகைகளில் வெளிவந்தன. இவற்றை அவதானித்த என் நண்பர், எனக்கு ஆசிரிய நியமணம் கிடைத்து விட்டது என்பதை அறிந்து கொண்டார். கலாசாலையின் பயிற்சிக் காலம் முடிந்து 2006ஆம் ஆண்டு வீடு திரும்பிய பின்பு என் தொலைபேசிக்கு ஒரு புதிய இலக்கத்தில் இருந்து அழைப்பு வந்தது. அது என் நண்பர், எனக்கு ஒரு பக்கம் பயமாகவும் இன்னுமொரு புறம் சந்தோசமாகவும் இருந்தது. இத்தனை வருடங்களான பின்பும் இவர் மறந்துவிட வில்லையே என்று ஆச்சரியமடைந்தேன்.

மீண்டும் எங்கள் நட்பு புனிதமாகவே தொடர்ந்தது. புதுப்பிக்கப்பட்ட எமது நட்பு மீண்டும் தொலைபேசி மூலமே வளரத் தொடங்கியது. ஒரு நாள் வழமை போல தொலைபேசியில் பேசுகையில் என் நண்பர் கூறினார், கடந்த 8 வருடங்களாக உமது நினைவுகளைச் சுமந்த வண்ணமே நான் வாழ்கிறேன் என்று. அப்போதுகூட நான் அதைக் காதலாக ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வாறு சில மாதங்களாக பரஸ்பர உணர்வுகளை பகிர்ந்து கொண்டோம்.

என் மீது அதிக ஆதரவும், அன்பும், அக்கறையும் உடையவராக என் நண்பர் காணப்பட்டார். என் மதம், குடும்பத்தவர்கள் என்பவற்றோடு என் நண்பரை இழந்துவிடத் துணிவின்றி இருவரும் தொலைபேசியிலேயே கதைத்து வந்தோம். இந்நிலையில் ஒரு நாள் நண்பர் கதைத்துக் கொண்டிருக்கையில் ஓர் அதிர்ச்சியான விடயத்தை கூறினார். உங்கள் தொடர்பு இல்லாத நேரத்தில் எனக்கு ஒரு திடீர் விபத்து ஏற்பட்டதைப் போல என் திருமணம் நடந்துவிட்டது. இப்போது எனக்கு 3 குழந்தைகள் இருக்கிறார்கள். ஆனாலும் உங்களைத் தான் நான் என் மனைவியாக நினைத்துக் கொண்டு வாழ்கின்றேன். என்னையும் என் காதலையும் நம்புங்கள் எனக் கேட்டு அழுதார். அதுமென்றித் தன் மனைவியிடமும் அனுமதி பெற்ற பின்பே என்னைத்தாம் மணம் செய்யத் துணிந்ததாகவும் கூறினார். தனது மனைவியிடம் என்னை கதைக்கும் படியும் கூறினார். அதிர்ச்சியில் இருந்து மீளாத நான் அப்பெண்ணுடன் கதைத்த பின்புதான் உணர்ந்து கொண்டேன் அந்தப் பெண்ணும் என்னைப் போல் ஒரு பேதைதான் என்று. அவரும் தன் கணவருக்காகவே என்னை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் தனது வாழ்க்கையை எனக்காக தியாகம் செய்து விட்டு அவரது மனைவியாக வாழ்ந்துவிட்டுப் போவதா கக் கூறி என்னிடம் வாக்குறுதியும் அளித்தார்.

எந்த நிலையிலும் தங்களோடு துணையாக என்னை இருக்கும்படியும் கேட்டுக் கொண்டார். நானும் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்கள் இருவரும் எனக்குக் கிடைத்த வரப்பிரசாதங்கள் என்று ஏற்றுக் கொண்டு இருவரோடும் ஐக்கியமானேன். நாட்கள் செல்லச் செல்ல என் நண்பரைவிட என் சகோதரிமீது எனக்கு அன்பும் இரக்கமும் பன்மடங்கானது. எந்த சூழ்நிலையிலும் இவர்களது இல்லற வாழ்வில் நான் ஒரு தடைக் கல்லாக மாறிவிடக் கூடாது என நான் எனக்குள்ளே உறுதிமொழியும் எடுத்து கொண்டேன். அவ்வாறிருக்கையில் அவரது அலுவலகத்தில் பணிபுரிவதற்காக எனது உறவுக்கார இளம் பெண் ஒருவரை அவரே சிபாரிசு செய்து எடுத்தார். இவற்றையெல்லாம் அவதானித்த எனக்கு என் நண்பர் ஒரு நாணயமானவர், பரோபகாரி, நேர்மையானவர் என்ற அசட்டு நம்பிக்கைதான் ஏற்பட்டது. ஆனால், காலப் போக்கில் தான் அவருடைய உண்மையான சுயரூபம் தெரிய ஆரம்பித்தது. என் உறவுக்கார பெண்ணும், என் நண்பரும் தொழில் நிமித்தம் வெளியூர்களுக்கு செல்வதாக வீட்டார்களிடம் கூறிவிட்டு பல தவறுகளை செய்ய ஆரம்பித்து விட்டனர். சமூகத்திற்கு தன்னை நல்லவர் போல் காட்டிக் கொள்ளும் அவருக்கு அடுத்தவரை ஏமாற்றுவது குறிப்பாக பெண்களை ஏமாற்றுவது கைவந்த கலை என்பதை உணர்ந்து கொண்டேன். அதற்கு சளைக்காதவள் தான் என் உறவுக்கார பெண்ணும்.

பணத்துக்காகவும், இவரது வசதி வாய்ப்புகளுக்காகவும் தனது வேலை வாய்ப்புக்காகவும் இவரோடு சிலகாலம் உறவாடிவிட்டு மெதுவாகக் கழன்று விடுவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஏனெனில் அவள் ஏற்கனவே காதல் என்ற பெயரில் ஒரு வாலிபனை ஏமாற்றி பணம் பெற்றவள். நிச்சயமாக அவளால் இவரிடம் திருப்தி அடைய முடியாது.அவர் மனைவி இவற்றை யெல்லாம் அறிந்தும் தன் கணவன் ஏன் இவ்வாறு நடக்கிறார் என்று புரியாமல் தவிக்கிறார்.

எத்தனை பெண்கள் வாழ்வில் வந்தாலும் கட்டிய மனைவிதான் கடைசிவரை பக்கத்தில் இருப்பாள் பணிவிடை செய்வாள் இதை காலம் கடந்தே பல ஆண்கள் உணருகின்றார் கள். அந்த வரிசையில் தான் இவரும் இருக்கிறார். இவ்வாறு தான் என் சகோதரிக்கு நான் ஆறுதல் கூறுகிறேன்.

என் சகோதரியின் வாழ்க்கை வளம் பெறுவதற்காக என்னால் முடிந்தளவு முயற்சி செய்து கொண்டுதான் இருப்பேன். இதுவே என் நண்பர் எனக்குச் செய்த உதவிகளுக்கான நன்றிக் கடனும் என் சகோதரிக்கு நான் செய்யும் உதவியுமாகும்.

ஆனாலும் சகோதரிகளே! வழிமாறி தடுமாறும் கணவன்மார்களுடன் வாழ்க்கையை நடத்துவதே ஒரு சவாலான விடயம் தான். எனக்கு தெளிவு பிறந்து விட்டது. ஆனால், அவரை நம்பி ஏமாந்து வாழ்க்கையையும் கொடுத்து மூன்று பிள்ளைகளுக்கும் தாயாகி உள்ள எனது சகோதரிக்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?

*பெயர் குறிப்பிடாத வாசகி*
*மூதூர்*

**சகோதரிகளே!**

பெண் பகுதியில் பிரசுரமாகும்
**சகோதரிகளின் பார்வைக்கு**
நீங்களும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பலாம்.
இச்சமூகத்தில் சகோதரிகள் மட்டத்தில் நீங்கள் காணும் குறைநிறைகளை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.
நீங்கள் பகிர்ந்துகொள்ளும் விடயங்கள் ஒவ்வொன்றும் ஆக்கபூர்வமானவையாகவும் இருக்க வேண்டும்.

**வந்து சேர வேண்டிய எமது முகவரி:**
சகோதரிகளின் பார்வைக்கு
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு 14.

# '3 இடியட்ஸ்' ரீமேக்கில் விஜய்!

ஹிந்தி '3 இடியட்ஸ்' படத்தின் ரீமேக்கில், அமீர்கான் வேடத்தில் விஜய் நடிக்கவுள்ளார். '3 இடியட்ஸ்' படத்தைத் தமிழில் ரீமேக் செய்வதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன.

ரீமேக் உரிமையை ஜெமினி பிலிம்சர்க்கியூட் நிறுவனம் பெரும் தொகை கொடுத்து வாங்கியிருக்கிறது.

இப்படத்தில் நடிக்க முன்னணி தமிழ் ஹீரோக்கள் பலர் ஆர்வம் காட்டுகிறார்கள். பாலாவின் 'அவன் இவன்' படத்தில் விஷால், ஆர்யா என இரு கதாநாயகர்கள் சேர்ந்து நடிக்கின்றனர்.

அதுபோல் '3 இடியட்ஸ்' ரீமேக்கிலும் மூன்று கதாநாயகர்களில் ஒருவராக நடிப்பதற்குப் பலர் விரும்புகிறார்கள்.

அமீர்கான் வேடத்தில் விஜய் நடிப்பார் என்ற தகவல் வெளியாகியுள்ளது. மற்ற இரு ஹீரோக்கள் மற்றும் கதாநாயகிகள் பரிசீலனையில் உள்ளனர். இப்படத்தை விஷ்ணுவர்த்தன் இயக்குவார் என்று கூறப்படுகிறது.



## பாடகர் ஆகிறார் பரத்!

'தம்பிக்கு இந்த ஊரு' படத்தின் மூலம் பாடகராக அறிமுகமாகிறார் பரத்.இது குறித்து அவர் கூறியவை வருமாறு:-

''எனக்குப் பாடகராகணும் என்கிற ஆசையெல்லாம் கிடையாது. 'தம்பிக்கு இந்த ஊரு' படத்தில் ஒரு பாட்டு-இடையிடையே வசனம் பேசிக் கொண்டே பாடணும். வசனம் மட்டும் நான் பேச, பாட்டை வேறொருத்தர் பாடுறதா இருந்தது. நீங்களே பாடினா நல்லா இருக்கும் என்று இசையமைப்பாளர் தரண் சொன்னார், சரி என்று நானும் பாடிட்டேன். எல்லாரும் நல்லா இருக்கு என்று சொல்கிறார்கள். 'கூத்தாடு மச்சி... கை கால வச்சி'ன்னு பாட்டு தொடங்கு கிறது'' - என்றார் பரத்.



படம்-நானே என்னுள் இல்லை

## என்ன கொடுமை?

அழகு சாதனப் பொருட்களுக் கான கடை திறந்த காமெடி கவர்ச்சி நடிகை படம் தயாரிக் கிறார். இதில் ஹீரோவாக நடிக் கிறார் ஜி நடிகர். இதனால் நடிகை கொடுக்கும் பாட்டிகளில் 'ஜி'யைத் தவறா மல் பார்க்க முடிகி றது. இருவரும் கட்டியணைத்து போட்டோவுக்கு போஸும் கொடுக் கின்றனர். மற்ற வர்கள் வயிறு எரிய, 'ஜி'யின் குடும்பமோ, பையனுக்கு கல்யாணம் பார்க்கிற நேரத்தில்இப்ப டிக் கண்டபடி திரியுறானே என்று கவ லையில் இருக் கிறது. என்ன கொடுமை இது 'ஜி'?

## மீண்டும் அசின்!

*தமிழில் முன்னணி நடிகையாக இருந்த அசின், கடைசியாக நடித்த படம் தசாவதாரம்' 2007இல் ரிலீசானது. அதற்கு முன் 'எம். குமரன் சன் ஆப் மகாலட்சுமி', 'கஜினி', 'வரலாறு', 'போக்கிரி', 'சிவகாசி' உட்பட ஏராளமான படங்களில் நடித்தார்.*

*2008இல் கஜினியை ஹிந்தியில் ரீமேக் செய்தனர். அதில் அமீர்கான் ஜோடியாக நடித்து ஹிந்தித் திரையுலகில் நுழைந்தார். அப்படம் வெற்றியடைந்ததால் அசின் முன்னணி நடிகையாக உயர்ந்தார். 'லண்டன் டிரீம்ஸ்' படத்தில் சல்மான்கான் ஜோடியாக நடித்தார். தமிழ், தெலுங்குப் பட வாய்ப்புகளை உதறினார். ஆனால் 'லண்டன் டிரீம்ஸ்' வெற்றி பெறாததால் அசினின் மார்க்கெட் கவிழ்ந்தது.*

*தற்போது மீண்டும் தமிழ்ப் படங்களுக்கு வருகிறார்.*

*மலையாளத்தில் ஹிட்டான 'பொடி கார்ட்' படம் விஜய் நடிக்க தமிழில் ரீமேக் ஆகவுள்ளது. இதைசித்திக் இயக்குகிறார். இதில் கதாநாயகியாக அசின் நடிக்கிறார். மார்ச்சில் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது. சூர்யாவை வைத்து ஏ.ஆர். முருகதாஸ் இயக்கும் படத்துக்கும் அசினை ஒப்பந்தம் செய்வதற்கான பேச்சுகள் நடக்கின்றன. விஜயை வைத்து ஜெயம் ராஜா இயக்கும் படத்தில் நடிக்கவும் அசினிடம் பேசி வருகின்றனர். சிம்புவும் அசினைச் சந்தித்து தனது 'வாலிபன்' படத்தில் நடிக்க அழைத்துள்ளாராம். தமிழில் மொத்தம் 4 புதுப்படங்கள் அசினுக்குக் கிடைத்துள்ளன.*

*அப்படின்னா தமிழில் மீண்டும் பிஸி நடிகையாகப் போகிறார் போல...!*

தொகுப்பு-
எஸ்.ஜெயம்



கயல் அகர்வால்

## கவர்ச்சியில் கலக்கும் பிரியாமணி!

## எஸ்கேப் ஆன தேவா - நயன்!

பிரபுதேவா நயன்தாராவின் காதலைக் கண்டு ஊரே ஆனந்தப்படுகிறது. ஆனால், அதை உருப்படியாகக் கொண்டாட முடியாமல் தவிக்கிறது ஜோடி. சமீபத்தில் கலைஞரின் பாராட்டு விழாவில் அசத்தலாக ஆடி, ஊர் பேசும் பேச்சுக்கு உறுமி மேளம் அடித்தார்கள். ஒப்புதல் வாக்கு மூலமும் கொடுத்தார்கள். இந்நிலையில் பெங்களூருக்கு கன்னடப் படத்தின் போட்டோ செலக்சனுக்காக போயிருந்த நயன்தாரா, கூடவே பிரபுதேவாவையும் அழைத்துப் போயிருந்தார். திரும்பி வரும்போது சென்னை விமான நிலையத்தில் சிக்கிக்கொண்டது இந்த ஜோடி.

வேறொரு வி.ஐ.பிக்காகக் காத்திருந்த செய்தியாளர்கள், இவர்கள் கை கோர்த்தபடி வருவதைக் கண்டதும் உஷாரானார்கள். கமராவை அந்தப் பக்கம் திருப்பலாம் என்றிருந்தால்...? ஜோடி எஸ்கேப். அங்கிருந்து தப்பி பன்னாட்டு விமானத் தளம் வழியாக வெளியேறிவிட்டார்களாம். ஏமாந்து போன செய்தியாளர்கள், இப்படி எல்லாருக்கும் பயந்து ஓடுறதுக்குப் பதிலாக, ஒரு முடிவுக்கு வந்து - அதை முறையாக அறிவிச்சுத் தொலையலாமே என்கிறார்கள். அதுவும் சரிதான்!

MINI INFOTEL JAFFNA

# யாழ்ப்பாணத்தில் தகவல் தொழில்நுட்பம் கண்காட்சி & தொழில் சந்தை

26-28 பெப்ரவரி 2010

சுடர் ஒளி THE SUDAROLI

சிறப்பு மலர்

# யாழ். நகரில் 'மினி இன்போடெல்'

இலங்கைத் தகவல் தொழில்நுட்ப சம்மேளனம் (FITIS) யாழ்.நகரில் 'மினி இன்போடெல்' (Mini INFOTEL) கண்காட்சி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளதை பெரு மகிழ்வுடன் அறியத்தருகின்றது.

'தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் மீள் விழிப்புணர்வு' என்ற கருப்பொருளின் கீழ் 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26, 27, 28 ஆம் திகதிகளில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ள இந்தக் கண்காட்சி, வட மாகாணத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) அறிவை மேம்படுத்தும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாபெரும் கண்காட்சிக்கு வரையறுக்கப்பட்ட ரிகோ தனியார் நிறுவனம் (TIGO PVT LTD) பிரதான அனுசரணையாளர்களாக முன்வந்தமை பெருமைக்குரிய விடயமாகும்.

அண்மையில் இலங்கைத் தகவல் தொழில்நுட்ப சம்மேளனம் (FITIS) ICT முகவர் நிலையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது இந்தக் கண்காட்சி பற்றிய ஒழுங்குகள் அறிவிக்கப்பட்டன.

இலங்கைத் தகவல் தொழில்நுட்ப சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தமித் ஹெட்டிஹேவ யாழ் நகரில் நடத்தவுள்ள இந்த மினிக் கண்காட்சி பற்றி பின்வருமாறு விவரித்தார்:-

மூன்று நாட்களுக்கு நடக்கவுள்ள இந்த மினிக் கண்காட்சிக்கு மேலதிகமாக தகவல் தொழில்நுட்பத்தைப் (ICT) பற்றிய தொழில்சார் வழிகாட்டுதலுடன் நவீனமானதும் நிர்வாகத் திறனுடையதுமான எதிர்காலத்தை வடக்கில் வாழும் இளைய சமுதாயத்தினர் பெற்றுக்கொள்வதற்கான ஆக்கபூர்வமான பயிற்சிகள் மேற்கொள்ளப்படும். ICT இன் தொழில்சார் வ்ழிகாட்டிச் செயற்றிட்டம் இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் (ICTA) மற்றும் கல்வியமைச்சின் கூட்டு ஆதரவில் முன்னெடுக்கப்படும்.

புனர்வாழ்வளிக்கப்படவுள்ள முன்னாள் போராளிகளின் ஆக்கபூர்வத் திறமைகளையும் எதிர்பார்ப்புகளையும் ஏற்றுக்கொள்ளவும், அவர்களது சக்தியை மேலும் வலுப்படுத்தும் வழிவகைகளை வழங்குவதன் மூலம் அவர்கள் சமுதாய நீரோட்டத்தில் கலந்துகொள்வதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தித் தருவதற்கும் (FITIS) நிறுவனம் முனைந்துநிற்கின்றது. இந்த முயற்சியில் இந்திய இசிபான் ஆலோசக நிறுவனமும் (Ichiban Consultants of India) தனது முழுமையான பங்களிப்பைச் செலுத்தவுள்ளது.

இதன் அடிப்படையில் தகவல் தொழில்நுட்ப



அறிவை வடமாகாண இளைஞர், யுவதிகளின் மத்தியில் விருத்திசெய்ய FITIS 15 நாட்கள் பயிற்சித் திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 15 நாட்களுக்கு தெல்லிப்பளை, செட்டிக்குளம்,பம்பேமடு பிரதேசங்களிலும் கைதடியிலும் உள்ள இளைஞர்கள் புனர்வாழ்வு மையங்களில் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படவுள்ளன.

(14 C பக்கம் பார்க்க)

Sun microsystems பரீட்சை வவுச்சர்

இலங்கையில்

குறைந்த விலையில் USD 150 (UK&USA-USD300)

SUN Microவினால் பதிப்பிக்கப்பட்ட இலவச பயிற்சிப்புத்தகங்கள்

இலவச SUN Micro T-Shirt

பரீட்சையில் சித்தி பெறுவோர் ICTAவினால் வழங்கப்படும் USD 60.00வை பெற்றுக் கொள்ளலாம்

(30-06-2010 வரை மட்டுமே)



விரைவில் யாழ்ப்பாணத்தில்.....

பின்வரும் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது

Microsoft Certified Network Engineering
(MCITP/MCSE)
&
My SQL and PHP

Sun Partner Advantage

PROMETRIC

MySQL

PEARSON VUE

Microsoft GOLD CERTIFIED Partner

Learnig Solutions

மேலதிக விபரங்களுக்கு

Manurene-0777-631691

Jenitha-0773-553356

NET ASSIST INTERNATIONAL

No 25,Mile Post Avenue, Colombo03,
T-112375345/112370271,
F-112372934,
E-training@netassist.com.lk

MINI INFOTEL JAFFNA

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் ஓர் உதயம்

# இன்போட்டல்

# தகவல் தொழில்நுட்ப (IT) கண்காட்சி & தொழில் சந்தை

## 26 - 28 பெப்ரவரி 2010

## வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

கண்காட்சியில் பங்குகொள்ளும் அனைவருக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன.

1ம் பரிசு - ரூபா 15,000 மற்றும் Sports Bicycle courtesy of Tigo


2ம் பரிசு - ரூபா 10,000

3ம் பரிசு - ரூபா 7,500

கண்காட்சியில் பங்குகொள்ளும் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் அதிர்ஸ்டசாலிக்கு கணனி வழங்கப்படும்.

Tigo mobile FREE SIM பதிவுசெய்யும் முதல் 150 பேருக்கு இலவச ***branded T-Shirt*** வழங்கப்படும்.

முதல் மூன்று பரிசில்களைப் பெறுபவர்களுக்கு ***Champion Trophy*** மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.



# மாபெரும் சைக்கிள் மரதன் போட்டி

26 பெப்ரவரி 2010

தொடர்பு : சத்தியன் - 077 4598026

ருபன் - 021 2226826

Concept

ORGANIZED BY FITIS

PINNACLE SPONSOR tigo

SPONSOR intel

SPONSOR Microsoft

SUPPORTED BY ICTA ideas actioned

ELECTRONIC MEDIA SPONSOR சக்தி FM சக்தி TV

PRINT MEDIA SPONSOR உதயன்

# யாழ். நகரில்

(14A பக்கத் தொடர்ச்சி)

இந்தத் திட்டத்தின் பிரதானமானதும் உற்சாகமூட்டும் நிகழ்வாகவும் சைக்கிள் ஓட்டப்போட்டி ஒன்றும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

FITIS நிறுவனத்தின் நிர்வாகக் குழு சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களை மேம்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாண வாசிகசாலையில் யாழ்ப்பாண வர்த்தக ஆலோசனைக் குழுவின் தீர்மானத்துக்கு இசைவாக தனது முன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சைக்கிள் ஓட்டப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் சத்யன் (077-4598026) அல்லது ரூபன் (021-2226826) ஆகியோருடன் தொடர்புகொண்டு தமது விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

TIGO நிறுவனம் எமது பிரதான அனுசரணையாளராக முன்வந்ததையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம்.

'உதயன்' மற்றும் 'சுடர் ஒளி' பத்திரிகைகள் எமது பத்திரிகைத் துறை அனுசரணையாளர்களாக பொறுப்பேற்றுக்கொண்டமையுடன்

'சக்தி' தொலைக்காட்சியும் 'சக்தி' பண்பலையும் எமது இலத்திரனியல் விளம்பரத்துக்கு முன்வந்துள்ளன.

ICTA எப்போதும் எமது இலக்குகளையும் எதிர்பார்ப்புகளையும் ஆதரித்து வந்ததுடன் அந்த நிறுவனம் எமது யாழ் நகரக் கண்காட்சிக்கும் அதே ஆதரவை வழங்கிவந்ததையிட்டு நாம் புளகாங்கிதம் அடைகின்றோம்.

இந்த ஆதரவின் மூலம் வடபகுதி இளம் தலைமுறையினர் நல்லதொரு எதிர்காலத்தை அமைத்துக்கொள்வர் என்ற திடமான நம்பிக்கை எமக்குண்டு.

வடக்கில் நடக்கும் இந்த அற்புதமான கண்காட்சிக்கு பூரண அனுசரணை வழங்கியதற்கு தாம் பெருமைப்படுகிறார் எனவும், இலங்கைத் தகவல் தொடர்பாடல் வரலாற்றில் பெருமைப்படத்தக்க முத்திரையொன்றைப் பதித்ததற்கு மகிழ்ச்சியடைகிறார் எனவும், ICTA, FITIS ஆகிய நிறுவனங்கள் மூலம் வடக்கில் வாழும் இளைய சமுதாயத்தினரின் எதிர்காலம் தம்மால் நிச்சயிக்கப்பட்டுள்ளது எனவும் திரு.ஹெட்டிஹேவா மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் செல்லிடத் தொலைபேசித்துறையின் முன்னோடியும் முன்னணி நிறுவனமுமான TIGO வின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் துமிந்த ரத்னாயக்க கருத்துத் தெரிவிக்கையில் -

''இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் (ICT) மிகவும் முக்கியத்துவம் பெறும் இந்த மினி Infotel நிகழ்வுக்கு எமது அனுசரணையை வழங்குவதில் நாம் பெருமைப்படுகின்றோம். இதன் மூலம் வடக்கில் வாழும் இளைய சமுதாயத்தின் மத்தியில் இத்துறை பற்றிய சிறந்ததொரு விழிப்புணர்வு ஏற்படும். இன்போடெல்லின் சைக்கிள் ஓட்டப்போட்டி இந்நிகழ்வில் உற்சாகத்தையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.'' - என்றார்.


SDS COMPUTER SERVICES
For all your ICT Solutions.

328,Hospital Road,Jaffna.

Tel : 021-2228418
Hotline: 0777 874705




* SALES - Computers, Peripherals, Network (Lan / Wan), PABX System, Point Of Sales (POS), CCTV, Mobile Phones, Structured Cabling, Print-rite Imaging Products - Ink Cartridges,Laser Toners,Copier Toners, Re-fill Kits, Ink jet Papers, Fax Transfer Film Ribbons, Continous Ink Supply System (CISS), RibbonsBulk Ink / Bulk Toner. Verbatim - CD R, CD RW, DVD +/-R, DVD+/-RW, USB PEN DRIVES MO Media, FLOPPY DISKETTES, COMPACT FLASH MEMORY, SECURE DIGITAL MEMORY, 8cm DVD R & DVD RW for camcorders,.

*REPAIRS & MAINTENANCE - Computers, Peripherals,Network, Electronic Equipment,Service & Maintenance Agreements.

*SOFTWARE SOLUTIONS - Finance & POS.

*WEB DESIGNING - All types of Web Designing



We represent Universities & Colleges in
UK
USA
CANADA
AUSTRALIA
CYPRUS
CHINA
SINGAPORE
MALAYSIA
INDIA

EDUCATION @ ABROAD
We are official representative of leading universities and colleges in abroad

STUDY IN UK
- Admission @ A-rated Colleges
- Basic Qualification O/L.
-No Need IELTS
- Low Fees
- Lawyer's Guidanc

Apply Now for Mar/April 2010 Intake

100% Success Rate

STUDY IN INDIA



ADMISSION NOW OPEN FOR MBBS & DENTAL

One of popular destination for higher stuides amongst foreign students
&
- Low cost for education

WE ALSO HANDLE
▸ Visit, Dependent, Settlement,Migration & Appeal to any country

All our immigration works are handled by lawyers

Certificate/Diploma/ Undergraduate/Postgraduate Courses in
-Accounting -Advertising -Biology
- Business Management -Engineering
- Fashion Design - Fine Arts - IT
- Health and Social Care - Law
- Marketing - MBA - MBBS
- Nursing (General/Dental)
- Pharmacy Technician - Psychology
- Toursim and Hospitality Management

For further details contact us:

PARANAN ASSOCIATES (PVT) LTD
No. 403, 1/1, Galle Road, Wellawatte, Colombo 06.
Tel: 2551241, 2551641 Mob: 0777370292
Email: info@paranan.com
Web: www.paranan.com.

RIGHT CHOICE TOWARD SUCCESS
UNIVERSAL
COLLEGE OF EDUCATION (PVT) LTD
No. 16, Alexandra Road, Colombo 06
Tel: 2589988, 7203343

IIHE : University of Wales – The Pioneering collaboration for quality higher education opportunities in Sri Lanka, since 1996.

The collaboration between Imperial Institute of Higher Education (IIHE) & University of Wales takes pride in being the oldest & most experienced Higher Education providers in Sri Lanka, since 1996. No other private institute in Sri Lanka can boast of such an achievement & accomplishment to date. This proves the fact that IIHE has been able to maintain the quality standards expectations of the University of Wales.

On the verge of re-locating to a 26,000 Sq.Ft. campus facility with all modern amenities, IIHE is forging ahead in this highly competitive industry, producing top class visionaries & leaders to the corporate sector in Sri Lanka & international organizations.

The superiority of a university is calculated mainly through the kind of student it churns out than the kind it takes in. A student, who enters through the door of the Imperial Institute of Higher Education (IIHE), is sure to become the best in his field and reach the realms of success in his career. IIHE becomes the pathway to success for students, providing them with a validated internal degree awarded by the University of Wales, UK. A validated university degree paves the way for better yields in employment opening new doors of opportunities. Yet how does one choose a validated University degree? A validated University Degree can only be offered by an established tertiary education provider who has demonstrated continued success and academic excellence, long standing partnership with a reputed university and churned out the cream of talent into the industry both locally and internationally. The Imperial Institute of Higher Education satisfies these unique and distinct characteristics and hence becomes the pioneering path way to success for all students. A degree from IIHE, awarded by University of Wales UK, presents successful Graduates with global opportunities and is an investment which makes you reap the fruits of it immediately.

Importance of 'Validated' Degree programmes:

A 'validated' degree means that it is the identical & legitimate programme offered by the principal authority. The programmes are subjected to the same quality assurance procedures & standards laid down by the principal authority.

A validated Degree programme from IIHE awarded by the University of Wales, enables its students to become first class choice in the industry. It capacitates students to build upon their academic qualification and potential through progressive development of knowledge, skills and understanding; study in fields of interest thus allowing them to broaden and deepen their educational experience and fore-mostly benefit from a curriculum designed to enhance skills and supply them with exposure to tackle the issue of the real business world.

Hence the structure of teaching, assessing and evaluating of students and the deliverance of the programme locally is maintained identical in accordance with the University of Wales, in order to ensure that students choosing this programme remain in-tact and benefit from it. Thus the Graduate of IIHE receives the same certificate as of UoW and qualifies as an internal student from the University of Wales, UK.

It is compulsory for Degrees awarded locally by foreign universities to be accredited through the relevant accreditation bodies associated with. All validated programmes are subject to rigorous quality assurance to ensure that the qualifications as required by the Quality Assurance Agency (QAA) of UK are met with. Hence a panel consisting of representatives of Wales and external Examiners visit IIHE twice a year to assure equal academic and infrastructural standards are maintained.

Continued success and Academical Excellence:

The Imperial Institute of Higher Education established with the over arching objective of providing quality educational opportunities to prospective students, offers Undergraduate and Post Graduate programmes validated by the University of Wales, UK, prided as one of the leading and esteemed Universities in the UK, since its inception in 1996. Driven with the mission – to excel in academic and professional development through provision of quality tertiary higher education, particularly VALIDATED programmes, IIHE has established its name as the Benchmark for tertiary higher education in Sri Lanka. Holding a record relationship with the University of Wales and stepping in to a successful 14 years. Imperial Institute of Higher Education is one of the three institutes that hail as the pioneers in paving the path to private tertiary education in Sri Lanka.

Upheld in the education sector for its stature and credibility IIHE is hailed as a credible corporate entity associated with the University of Wales, UK. IIHE excels and takes pride in churning high caliber and proficient professionals to the industry at large since 1996 in Sri Lanka. The authenticity of the Institute and its associated University of Wales ensures that each exhibit and instill in their Graduates values up held by each in their sphere hence enabling the students to shine among the rest in the industry.

Churning 'industry versatile' Graduates:


Committed to moulding the best 'industry versatile'; Graduate, the unique characteristics of IIHE validated Degree, ensures that Graduates become fully geared to meet the challenges of the real business world. The programmes aids them to stand tall in all sectors of professionalism, contributed mainly by their adaptation to their environment, strategic focus and more futuristic thinking and analysis, complimented by their practical knowledge instilled at each stage of the programme, providing its students a versatility of skills.

In simple terms IIHE, teaches students to deal with real practices in the corporate world, how to manage human resources; prepare a marketing plan, a business plan and other practical aspects. A Graduate of IIHE when employed won't feel any difference between their education and work place; rather they simply apply what they had learnt. Thus the classroom simulations at IIHE match with the industry expectations. Hence a Graduate of IIHE is empowered to the deal with real life business challenges.



***"IIHE has been committed to offer only the BEST in class education opportunities, facilities & programmes to discerning Sri Lankan students throughout the last 14 years. Since we have realized the growing needs of our students & parents the Board & the Management of IIHE has decided to forge ahead with this massive investment, of developing a state-of-the-art campus facility".***

***Dr. Thilaka Weerakoon***
CEO/Academic Director



# IDM Affiliated University College



## Celebrating 6th Year of Operation in Jaffna

## MINI INFOTEL - JAFFNA

An Opportunity to Meet Professionals, & Plan Your Future

*On February 26th, 27th, 28th Our Professional Career Counselors from Colombo will be here in Jaffna*

## If You are a School Leaver after O/L or A/L

*Pre School to Post Graduate Studies*

**Pre School to Post Graduate Studies** — **Nurturing Future Sri Lankans**

*For present School Children & Immediate School Leavers, to develop essential skills to embark on higher Studies in ICT, Management & Language Studies.*

**IDM Affiliated University College** — **Great Learning - Great Beginning**

*Students after O/L, A/L can Join & Start their Higher Studies at our Colleges in the fields of ICT, Management, Education, Engineering & Language, "Delivering Internationally Recognized Qualifications Locally".*

**IDM Affiliated University College - Campus** — **Bridging Dreams & Realities**

*Continue your Higher Education @ our Campus Network for your Degree, Top-Up Degree, Postgraduate Diploma, Masters or Doctorate Qualification. The Programmes are offered through Universities in the UK, Australia & Canada.*

## If You are a Job Seeker, An Employee or An Employer...

*Interactive/ Corporate Training Division for Knowledge & Skills Development*

**IDM Corporate Training** — **Advantage - Corporate Success**

*During the past 25+ years, with our track record IDM has trained thousands. Whether you are a Job Seeker, an Employee or an Employer, we provide the latest Education & Training programmes to update/ upgrade the Knowledge & Skills of the participants. The programmes lead the students to internationally recognized certifications.*

## If You are Interested in Studying Abroad...

*Making Study Abroad Affordable*

**IDM Education Services** — **Truly An International Sri Lankan**

*Are you interested in studying abroad? We will assist you in selecting the best University/ College in UK, Australia. Meet our consultants from Colombo to plan your Higher Studies.*

## If You are an Investor...

*Investment Opportunity*

**IDM Group of Companies** — **Inspire Dreams for Magnificence**

*28 + years in the industry with its network of more than 54 branches, we are expanding. There are opportunities for Investors to join IDM, to become a part of our Group & to be a part of the Largest Network in Sri Lanka. Meet us, to dis-*

IDM

Affiliated University College

City Campus #3 – North & East Regional Office
IDM Affiliated University College
#16, 42nd Lane, Wellawatte, Colombo 06
Tel : +94 11 2 361 801 Fax : +94 11 2 361 807
www.idmcc3.lk | info@idmcc3.lk

**IDM Affiliated University College – Jaffna**
#216, Navalar Road, Jaffna
Tel 021 2 229 901

**IDM Affiliated University College Chavakachcheri**
#5 1/1, Kandy Road, Chavakachcheri
Tel 021 7 200 600

# 2010 மைக்ரோசாப்ட் சந்திக்க இருக்கும் சவால்கள்

தொழில்நுட்ப வளர்ச்சியில் ஈடுபட்டு வர்த்தகத்தை மேற்கொண்டு இயங்கும் எந்த ஒரு நிறுவனமும், தொடர்ந்து சிக்கல்களையும் சவால்களையும் சந்தித்துக் கொண்டுதான் இருக்கும்.

இந்த வகையில் உலகின் முன்னணி நிறுவனமான மைக்ரோசாப்ட் சவால்களைச் சந்தித்த வண்ணம் உள்ளது அனைவரும் அறிந்ததே.

2009 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்தே தன் கட்டமைப்பில் பல சிக்கல்களை மைக்ரோசாப்ட் சந்தித்தது இதன் பல பரிவுகளில் அலுவலர்கள் வெளியே அனுப்பப்பட்டனர். இதன் காலாண்டு வருமானம் முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் மிகவும் குறைவாக இருந்ததாக அறிவிக்கப்பட்டது.

இருந்தாலும் ஆண்டின் இறுதியில் விண்டோஸ் 7 கை கொடுக்க, மைக்ரோசாப்ட் தலை நிமிர்ந்தது. சிஸ்டம் பொது மக்களுக்கு வெளியாவதற்கு முன் வெளியிட்ட சோதனைத் தொகுப்புகளே இதன் இமேஜை நிமிர்த்தின. அக்டோபரில் விண்டோஸ் 7 வெளியானபோது மைக்ரோசாப்ட் உறுதியான தளத்தில் இருந்தது.

இதன் சர்ச் இஞ்சின் பங் மிக அருமையான இலக்குகளை முன்வைத்து மற்றவற்றிலிருந்து மாறுபட்ட இயக்கத்தைக் கொடுத்து வெற்றி பெற்றது. இதன் வழி விளம்பர வருமானமும் இதற்குக் கை கொடுத்தது. இதன் கிளவுட் கம்ப்யூட்டிங் பிரிவில் வெளியான அஸூர் இன்னும் உறுதியான எதிர்காலத்தை மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்கு வழங்கியது.

இருந்தாலும் மைக்ரோசாப்ட் போன்ற உலகளாவிய பெரிய நிறுவனம் மேலும் பல காரணங்களால் பாதிக்கப்படுவது இயற்கையே. உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மைக்ரோசாப்ட் தப்ப இயலவில்லை. தற்போது பின்னாட்டளவில் பொருளாதார நிலை சீரடைந்து வருவதால், 2010 ஆம் ஆண்டு மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்குத் தன்னை புதுப்பத்துக் கொள்ளும் ஆண்டாகத் தான் இருக்கும்.

1.சாதிக்க முடியாத மொபைல் பரிவு:

மைக்ரோசாப்ட் தன் விண்டோஸ் 6.5 மொபைல் ஆப்பரேட்டிங் சிஸ்டம் மூலம், இங்கும் தன் வலிமையை நிரூபித்து நிலைக்க முடியும் என்று எண்ணியது. ஆனால் அது எடுபடவில்லை. ஏற்கனவே உறுதியாக இயங்கிக் கொண்டிருக்கும் பல நிறுவனங்களுக்குப் போட்டியாக நுழைந்து வாடிக்கையாளர்களைத் தன் பக்கம் இழுப்பது, வெற்றி பெற முடியாத சவாலாகவே மைக்ரோசாப்ட் 2009 இல் கண்டது.

ஆர்.ஐ.எம்., பால்ம், ஆப்பிள் ஆகிய நிறுவனங்களின் வெற்றி, வாடிக்கையாளர்கள் ஒரே நிறுவனத்திலிருந்து தங்கள் போன்களை எதிர்பார்க்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்தியது. மைக்ரோசாப்ட் நிறுவனமும் ப்ராஜக்ட் பங்க் என்ற பெயரில் தன் மொபைல் போன்களை தயாரிக்கும் திட்டம் ஒன்றை அறிவித்தது.

அதில் ஸூன் சர்வீஸ் இணைக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. அப்படியானல் இன்னும் ஓராண்டு நாம் அதற்காகக் காத்திருக்க வேண்டும். ஐ போன்,பிளாக்பெரி, பால்ம் மற்றும் கூகுள் ஆண்ட்ராய்ட் ஆகியவற்றுடன், மொபைல் சந்தையில் மைக்ரோசாப்ட் நிறுவனத்தால் போட்டியில் இயங்க முடியவில்லை.

நல்ல ஒரு பார்ட்னர் நிறுவனத் துணையுடன் சாப்ட்வேர், சர்வீசஸ் ஆகிய இரண்டுடனும் இறங்கினால் தான் மைக்ரோசாப்ட் நிறுவனத்தால் மொபைல் சந்தையில் இயங்க முடியும். இல்லையேல் இந்தப் பிரிவை மறக்க வேண்டியதுதான்.

2. விண்டோஸ் 7:

2007, 09 ஆம் ஆண்டுகள் மைக்ரோசாப்டிற்கு மிகுந்த சோதனையைக் கொடுத்தது. இதற்குக் காரணம் மக்களிடையே எடுபடாமல், பல பிரச்சினைகளை வாடிக்கையாளர்களுக்குக் கொடுத்து வந்த விண்டோஸ் விஸ்டா இயக்கத் தொகுப்பாகும்.

ஆனால் விண்டோஸ் 7 வந்தவுடன் அதில் விஸ்டாவின் இயக்கம் துளி கூட இல்லை என்ற செய்தியே கம்ப்யூட்டர் பயன்படுத்துபவர்களுக்கு இனிப்பாக இருந்தது. தொடக்க விற்பனையும், விஸ்டா 7 குறித்து வந்த ஆய்வுக் குறிப்புகளும் மைக்ரோசாப்ட் நிலையைத் தூக்கி நிறுத்தியது. 2010 இல் இந்த நிலையைத் தொடர்ந்து தக்க வைப்பதுதான் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் தலையாயபணியாக இருக்கும்.

3. எம்.எஸ். ஆபீஸ்:

மைக்ரோசாப் நிறுவனத்திற்கு, மற்ற எந்த சாப்ட்வேர் தொகுப்பினைக் காட்டிலும் அதிக வருமானம் தரும் தொகுப்பு அதன் ஆபீஸ் தொகுப்புதான். இலவசமாகக் கிடைக்கும் ஓப்பன் ஆபீஸ் மற்றும் ஸோஹோ தொகுப்புகள் ஆபீஸ் தொகுப்பற்கு போட்டியா என்பது இன்னும் கேள்விக் குறிதான்.

சர்வர்களைக் கொண்டு அலுவலகப் பணிகளை இயக்கி வரும் பெரிய நிறுவனங்கள் தற்போது எம்.எஸ். ஆபீஸ் தொகுப்பைத்தான் விரும்புகின்றன. ஆனால் கூகுள் தற்போது மிக வேகமாகக் கொண்டு வரும் கிளவுட் கம்ப்யூட்டிங் அப்ளிகேஷன்கள், டேட்டா ஸ்டோரேஜ் போன்ற விஷயங்கள், மைக்ரோசாப்ட் நிலையைச் சற்று அசைத்துப் பார்க்கும் வாய்ப்புகள் உள்ளன.

எனவே அடுத்த 2010 ஜூனில் வெளியாக இருக்கும் ஆபீஸ் 2010 கூகுள் தரும் அப்ளிகேஷன்களைச் சமாளிக்க வேண்டியதிருக்கும். எனவே தன்னுடைய ஆபீஸ் தொகுப்பு எப்படி மற்றவற்றைக் காட்டிலும் சிறந்தது என்று காட்ட வேண்டிய சவாலை மைக்ரோசாப்ட் நிறுவனம் சந்திக்க வேண்டியதிருக்கும்.

4. பங் சர்ச் இஞ்சின்:

வரும் ஆண்டில் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் பங் சர்ச் இஞ்சின் இலக்கு மிக எளிதான ஒன்றாக இருக்கும். விளம்பர வழி வருமானத்தைப் பெருக்குவதும், சர்ச் இஞ்சின் பரிவில் பெரிய அளவில் இடம் பெறுவதும் ஆகும். தற்போது இந்தப் பரிவில் 9.9% இடத்தை பங் கொண்டுள்ளது.

யாஹூவுடன் கொண்டுள்ள ஒப்பந்தம் மற்றும் பங் தொடர்ந்து கொடுத்து வரும் புதிய வசதிகள் நிச்சயம் 2010 ஆம் ஆண்டில் இதனை உயரத்திற்குக் கொண்டு வரும் என எதிர்பார்க்கலாம்.


**PROLiNK®**
Power to e - world

## Atom Netbook
**Glee TA-0089**


மொபைல் பாவனையின் எல்லைக்கு



<u>சிறப்பியல்பு</u>

Intel® Atom N270 1.6GHz Processor
1 GB Ram, 160 GB Hard Disk,
3.5G Ready (Optional),
Wireless(WiFi) Compliant,
Built - in 1.3 Mega Pixel Web Cam,
Built - in Microphone,
Built - in All in One Card Reader,
10.1" LED LCD Display, VGA Port,
Audio - out & Mic - in Jack,
LAN, 3 - USB Ports,
Long Battery Life


ஒரு வருட உத்தரவாதத்துடன்


ரூபா. 46,900/=
(All Inclusive)

*நிபந்தனைகள் உண்டு

3.5G யுடன் லப்டொப் கம்பியூட்டருக்கு விசேட HSUPA இன்டனல் மொடம்



- HSUPA, HSDPA/UMTS 2100 MHz band
- Support GSM/WCDMA via the data card
- Auto - Startup, Minimized, Link Reactivation
- Easy configuration setup for home user

PCIE Modem + Netbook Rs.52,900/=

யாழ்ப்பாணத்தில் உங்களுக்கு அறிமுகப்படுத்தும்
விசேட கண்காட்சி 2010 பெப்ரவரி 26, 27 மற்றும் 28ஆம் திகதிகளில்
வேம்படி மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறும் மினி இன்னெடெல் கண்காட்சியில்

www.salaent.com

SE சாலா என்டபிரைசஸ்

<u>தலைமை அலுவலகம்:</u>
445, ஹவ்லொக் வீதி, கொழும்பு-6
தொ.பே: 011-2366666

<u>தலைமை காட்சியறை:</u>
203,காசல் வீதி, கொழும்பு-8.
தொ.பே: 011-2693355


## Sala Introduces Power Saver to Reduce Electricity Bills at INFOTEL




Sala Enterprises has once again come to the rescue, by introducing the innovative and much needed power saving product under the brand name E Marc. This unit reduce electricity bills by 10% to 30% and extend product life of your electrical appliances. The E-MARC Power Saver unit is a device, which will reduce your electricity bill and save you money. The Power Saver uses state of the art electrical technology to actively monitor and improve the power factor of your household appliances. In addition, the intelligent technology optimises the voltage and current demands thus reducing the total current drawn from the mains AC source. It also acts as a voltage stabilizer and therefore supplies with proper voltage during momentary power surges. E-Marc uses a wave-generating chip which propels waves to regulate the shape of voltage and electricity waves, so that they resemble pure sin as much as possible, reducing heat and electrical current lost in cables without reducing voltage. Three models of E Marc power saver are available. Single phase unit for an average house hold with less power consumption, Three Phase for houses and offices that consumes three phase electricity and a separate unit for air-conditioning. All three models are guaranteed for one year, backed by an excellent after sales service.

The E-Marc Power Saver unit regulated the electrical current which is recommended for areas with power fluctuations. This unit improves the quality of the electrical current which in turn, extends the life span of your electrical appliances.

Sala Enterprises with its moto "we make technology affordable" believes in giving the best for their customers at a very affordable price and will assure you of recovering the cost of the unit within no time. Based on customer feedback and extensive tests, savings between 10 & 30% have been recorded under normal conditions. The percentage savings will depend upon the type of load and the consumption. In some cases, savings above 20% have been recorded, especially in shops and offices. Sala Enterprises today ranks among the best market leaders in the computer UPS and communication fields, representing Prolink, Samsung, Delux, Divoom, Seiko Instruments, E Marc and Hasee to name a few.

**For more information, please visit www.prolink2u.com**



# கல்யாண காலம்! கவனத்தில் வைக்கவேண்டியவை!

✱ வரன்பற்றி விசாரிக்கும் பொறுப்பை பெற்றோர் அல்லது அவர்களுக்கு இணையான குடும்பத்தின் பொறுப்பான நபர்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
✱ ஒரு வரன்பற்றி ஒரு தடவைக்கு மேல் பல தடவைகள் விசாரிக்க வேண்டும்.
✱ அவசரக் கல்யாணம் எனும்போது வரன் பற்றிய விசாரணை துரிதகதியில் இருந்தாலும், விசாரணை மட்டும் திருப்தியாக இருக்கவேண்டும்.
✱ இணையம் மூலம் அமையும் வரனில், பையன் தனக்கு யாருமே இல்லை என்று கூறினாலும் பரிதாபப்பட்டு விட்டு விடாதீர்கள். அவன் வளர்ந்த சூழல் எது என்று ஆராய்ந்து, அந்த இடம் உண்மை தானா என்று கண்டறிந்து பையனைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.
✱ மணப்பெண் குடும்பத்தின் பொறுப்பான நடுத்தர வயதுப் பெண்மணியோ அல்லது பெண்ணின் தாயோ பையனிடம் தனியாக குறைந்தபட்சம் 15 நிமிடங்களாவது பேசவேண்டும். ஒரு தாயால் கண்டிப்பாக தன் பெண்ணுக்கு ஏற்ற மணமகன் இவன்தானா? என்று கணிக்க முடியும்.
✱ பையன் வேலை பார்க்கும் அலுவலகத்தில், அவனைப் பற்றி அவனுக்கே தெரியாமல் விசாரிக்க வேண்டும். அந்த வேலையை அடையாளம் தெரியாத நம்பிக்கையான ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும்.
✱ ஜாதகத்தைப் பெற்றுக் கொள்ளும் போது வரனின் கல்வித்தகமை, சம்பளம் ஆகியவற்றையும் நாசுக்காக அறிந்து கொள்ளவேண்டும்.

## இப்படி செய்யாதீர்கள்:


✱ இணையத்தில் வரன் வருவான். வெளிநாட்டிலிருந்து வந்து ஹோட்டலில் தங்கியிருக்கிறேன் என்பான். ஒரு இடத்தில் சந்திக்கலாம் என்பான். பார்த்த மாத்திரத்தில் பிடித்துப் போகும்படி ஆள் மிக வசீகரமாக இருப்பான். உங்கள் மனதில் ஒட்டியபின் மெதுவாக தூண்டிலைப் போடுவான். பாஸ்போர்ட், விசா, பணம் எல்லாம் பறிபோனதாகவும், ஒரு 75 ஆயிரம் இருந்தால் போதும், ஊருக்குச் சென்று விடுவேன், திருமண ஏற்பாடுகளை கவனிக்கலாம் என்றும் சொல்வான். வசீகர அழகில் மயங்கி பணம் கொடுத்து ஏமாறும் காரியங்களை கண்டிப்பாக செய்யாதீர்கள். இதுபோல் ஏமாந்தவர் கதைகள் ஏராளம்.
✱ திருமணத்துக்கு முன்பே பையனைப் பற்றி சொன்ன பொய் ஒன்றை நீங்கள் கண்டுபிடித்து விட்டீர்கள் என்றால், அதிலும் அந்த பொய் பையனின் படிப்பு, சம்பளம், ஒழுக்கம் பற்றிய பொய் என்றால் அந்த வரன் வேண்டாம்!
குடும்பங்கள் ஒத்துப் போனால் ஜாதகம் தேவையில்லை!

## இதையெல்லாம் கண்டிப்பாக செய்யுங்கள்:

✱ திருமணத்துக்கு தயார் என்றபின் தான் வரன் பார்க்க வேண்டும். காரணம், ஒரு வருடம் கழித்து கல்யாணம் செய்து கொள்ளலாம், அதற்கு இப்போதிருந்தே வரன் பார்க்கலாம் எனும்போது, காலம் தான் இருக்கிறதே இதைவிட சிறந்த வரன் வரும் என்று நல்லவரனை நழுவவிடும் வாய்ப்புகளும் உண்டு!
✱ கன்னிகைதானம் என்பதுதான் கன்னிகாதானம். எனவே பெண்ணைக் கொடுத்துவிட்டு, அவளுக்கு எல்லாமே இனி கணவன் வீடுதான் என்பதைப் புரிய வையுங்கள். அப்போதுதான் கணவன் வீட்டோடு ஒட்டுதல் ஏற்படும்.
✱ திருமணத்தில் இரு குடும்பங்கள் இணைவதுதான் முக்கியமான விஷயம். எனவே வரனின் குடும்ப அமைப்பை முதலில் கவனியுங்கள். நல்ல குடும்பமா என்பதை ஆராயுங்கள். இரு குடும்பங்களும் நல்லபடியாக இணைந்தால், இருமனங்களும் நன்கு சங்கமிக்கும்!
✱ பெண்ணின் பழக்க வழக்கம், ஆணின்



பழக்க வழக்கம் என்று ஆராய்ந்து தேர்ந்தெடுங்கள். இவர் புத்திசாலி, சம்பாதிக்கிறார் என்று மற்றவற்றில் அலட்சியமாக இருந்து விடாதீர்கள்.
✱ வரன்களின் ஜாதகத்தை நல்ல ஜோதிடர்களிடம் காண்பியுங்கள். புரோகிதர்களிடம் ஜாதகம் பார்க்காதீர்கள். புரோகிதர்கள் கம்பவுண்டர்கள் மாதிரிதான்.
✱ அங்காரக தோஷம் என்றெல்லாம் இல்லை. அதற்கு மங்கள யோகம் என்றுதான் பெயர். ஜோதிட தரம் அறிந்த ஜோதிடரிடம் ஜாதகம் பாருங்கள்.
✱ நல்ல வரன், கால நேரம் கனிந்தால் ஆடி, மார்கழி என்றெல்லாம் பார்க்காமல் திருமணம் செய்துவிடுங்கள். அந்தக் காலத்தில் ஆடியில், விவசாயப் பயிர் விதைக்கும் நாள் என்பதால் வேலை பளுவும் திருமணத்துக்கு பொருளாதா ரச் சிக்கலும் ஏற்படும் என்று ஆடியில் திருமணம் செய்யமாட்டார்கள்.
✱ மார்கழியில் பூஜை, புனஸ்காரங்கள் செய்வார்கள்.



தவிர 5 நாள் கல்யாணத்துக்கு சீதோஷ்ணநிலை ஒத்து வராது என்பதால்தான் மார்கழியில் திருமணம் செய்யமாட்டார்கள். இந்தக் காலத்துக்கு இது ஒத்துவராது.
✱ சர்வபொருத்தம் மனப்பொருத்தம் பிரதானம் என்பார்கள். இரு குடும்பங்கள் ஒத்துப்போய், அல்லது வரன்களின் இருமனங்களும் ஒத்துப்போனால் கண்டிப்பாக திருமணம் செய்துவிடுங்கள். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பதற்கு இது ஓர் உதாரணம்!
✱ ஆண் என்பவன் அடக்குமுறையோடு ஆளுமை குணத்துடன் இருப்பான் என்று பெண்வீட்டாரும், பெண் என்பவள் அடங்காப்பிடாரியாக இருப்பாள் என்று பிள்ளைவீட்டாரும் தங்கள் பிள்ளைகளிடம் போதித்து அவர்கள் மனதில் எதிர்மறை எண்ணங்களை உண்டாக்காதீர்கள்.
✱ பிள்ளை இந்த நட்சத்திரமா? என் பேத்திக்கு இந்த நட்சத்திரம் ஆகாது, என்று நட்சத்திரத்தை மட்டும் கேட்டு விட்டு வரனை ஒதுக்காதீர்கள். ஜாதகம் பார்த்து முடிவெடுக்க வேண்டும்.
✱ உறவுக்காரர், நண்பர் என்பதற்காக பெண் கொடுக்காதீர்கள். தயவு தாட்சண்யத்துக்கு பொன் கொடுக்கலாம், பொருள் கொடுக்கலாம், பெண்ணைக் கொடுப்பார்களா?
✱ வேலைக்குப் போகும் பெண்ணை 'உனக்கென்ன, சொந்தக் காலில் நிற்கிறாய்' என்பதை சொல்லிச் சொல்லி வரன் தேடாதீர்கள். ஒருவரையொருவர் சார்ந்து வாழும் தாம்பத்யத்தை பின்னாட்களில் அவளால் வாழ முடியாது.
✱ மழையில் விளைந்து, உரலில் மசிந்தால்தான் நெல்லுக்கு மதிப்பு. கணவன் வீட்டில் கஷ்டநஷ்டங்களைப் புரிந்துகொண்டு அனுசரித்து நடந்து கொண்டால்தான் பெண்ணுக்கு மதிப்பு என்று வரன்பார்க்குமுன் பெண்ணின் மனதில் பதிய வையுங்கள்.
✱ மாமன், மச்சான், சித்தி, மாமி என்று நான்கு நாட்களுக்கு முன்பே உறவுகளை வரவழைத்து திருமணம் செய்வது நல்ல விஷயம். வேலையைப் பகிர்ந்துகொள்ளும் சந்தோஷம் அனைவருக்கும் கிடைக்கும்!
✱ பெண் பார்க்கும் படலத்தில், வீட்டில் தங்கைகள் என்று வயதுப் பெண்கள் இருந்தால் வெளியில் வர விடாதீர்கள். வீண் பிரச்சினை.
✱ பெண் பார்க்க வரும்போது இரவல் நகைகளை பெண்ணுக்கு அணிவிக்காதீர்கள். அத்தனையும் பெண்ணின் நகைதான் என்று மாப்பிள்ளை வீட்டார் எண்ணிவிடக்கூடும்.
✱ எல்லாம் பிடித்துப் போனபின் பொருளாதார ரீதியில் பெண் வீட்டாரோடு கறாராக நிபந்தனை போடாதீர்கள்.
✱ நெட் சாட்டிங்கில் தேடும் வரன்களைத் தவிர்க்கவும். அந்த திருமணத்தில் 20% வெற்றி, மீதி தோல்விதான்.
✱ நிச்சயதார்த்தத்துக்கு பின்பு மாப்பிள்ளையையும் பெண்ணையும் சேர்த்து வெளியே அனுப்பாதீர்கள்.
✱ வரன் பார்க்கப் போகுமுன்பே வரன் பற்றிய தகவல்களை முழுவதுமாகத் தெரிந்து கொள்ளுங்கள். திருப்தியில்லை என்றால் நேரில் பார்க்காமலேயே தவிர்த்து விடலாம்.
✱ ஜாதகம் போல, புகைப் படத்தையும் கேட்டு வாங்குங்கள்.
✱ பெண் பார்க்கும் படலத்தின்போது சுமார் அரைமணி நேரமாவது இருவரையும் தனியாகப் பேசவிடுங்கள்.
✱ சீர், வரதட்சணை என்று பெண்ணைப் பெற்றவர்களிடம் கறாராக நடந்து கொள்ளாதீர்கள். மருமகளாக வரப்போகும் பெண்ணின் மனதில் உங்களைப் பற்றிய முதல் அபிப்பிராயம் பெருமைப்படத்தக்கதாக இருக்க வேண்டும்!
✱ சாந்தி முகூர்த்தத்தை ஹோட்டல், ரெஸ்டோரன்ட் என்று வைக்காமல் அவரவர் வீட்டில் வைத்து புனிதத்தன்மையைக் காப்பாற்றுங்கள்.
✱ வரன் பார்த்தவுடனே நோ, யெஸ் என்று சொல்லி விடாதீர்கள்.
✱ அவசரமாக வரன் தேடாதீர்கள்.
✱ நிச்சயதார்த்தம் முடிந்தபின் 5, 6 மாதம் என்று திருமணத்தை தள்ளிப் போடாதீர்கள். மழைக்காலத்தில் முகூர்த்தம் வைக்காதீர்கள்.

★★★


உங்களின் உடலினை நீங்கள் கட்டுக்கோப்புடன் வைத்துள்ளீர்களா?
நாம் இப்போது பம்பலப்பிட்டியிலும் (மிலாகிரி புனித போல் பள்ளிக்கு முன்பாக)
மிதமிஞ்சிய உடல் வளர்ச்சி, உடலின் எடை அதிகரித்தல், வயிறு வைத்தல், கெஸ்ட்ரிக் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களினால் நீங்கள் கவலைப்படுகிறீர்களா...............
இதோ! அதற்கான தீர்வு எம்மிடமிருந்து.....
PUNCHING MAN
AB PRO
Special Offer Rs. 7,900/-
HOME GYM
Rs. 32,450/- விலிருந்து
BODY STRIDER
Rs. 11,900/-
WEIGHT LIFTING BENCH
Rs. 12,300/- விலிருந்து
AB SHAPER
Rs. 5,590/- விலிருந்து
SIT-UP BENCH
Rs. 6,900/-
ELECTRONIC TREADMILL
Rs. 39,500/- விலிருந்து
PLASTIC DUMBBELLS FOR LADIES
WEIGHT & BARS
1 Kg Rs. 89/- விலிருந்து
PUNCHING BAG & GLOVES
WEIGHT LIFTING BELTS & GLOVES
SPORTS GOODS
FOOT BALL
ரூ. 450/- விலிருந்து
VOLLEY BALL
ரூ. 450/- விலிருந்து
BASKET BALL
ரூ. 750/- விலிருந்து
CRICKET HELMET
ரூ. 1750/- விலிருந்து
CRICKET PAD
ரூ. 1950/- விலிருந்து
CRICKET GLOVES
THIGH PAD
LEATHER BALL
ரூ. 290/- விலிருந்து
BADMINTON RACKET
ரூ. 295/- விலிருந்து
YOGA MAT
TENNIS RACKET
ரூ. 750/- விலிருந்து
TENNIS BALL
ரூ. 39/- விலிருந்து
MIKASA YONEX RDM Wilson SS AS CHAMP
VISA MasterCard HSBC SEYLAN
BODY SCULPTURE SINCE 1965
ESER MARKETING
ESER MARKETING (PVT) LTD
நாடளாவிய கிளைகள்
கோட்டை - தொ: 011 5731888
பம்பலப்பிட்டி - தொ: 011 2585330
நுகேகொடை - தொ: 011 5529888
மொறடுவை - தொ: 011 5528888
ஜா-எல - தொ: 011 5731730
களனி - தொ: 011 5552008
இராஜகிரி - தொ: 071 4440555, 5347632, 5357632
கண்டி - தொ: 081 5673333
குருநாகல் - தொ: 037 5672562
மாத்தளை - தொ: 066 5678886
கம்பஹா - தொ: 033 5628889
காலி - தொ: 091 5457777
மாத்தறை - தொ: 041 5629888
இரத்தினபுரி - தொ: 045 5678887
நீர்கொழும்பு - தொ: 031 5678880
களுத்துறை - தொ: 034 5629888
அம்பலன்கொடை - தொ: 091 5678888
அநுராதபுரம் - தொ: 025 5628889
கேகாலை - தொ: 035 5628889
பண்டாரவல - தொ: 057 5678889
முகவர்கள்
மட்டக்களப்பு - சனபில் ஸ்போட்ஸ், 362, பிரதான வீதி, காத்தான்குடி. தொ: 060 2652848, 077 3512341
மன்னார் - உஷா சேல்ஸ் சென்டர். தொ: 023 2222010
திருகோணமலை - அஜ்மீர் டிரேடர்ஸ், 186, என்.சீ. வீதி. தொ: 026 2222702
வவுனியா - 'கணேஷ்' 100, ஸ்டேசன் வீதி, வைரவ புளியங்குளம். தொ: 024 4924775
யாழ்ப்பாணம் - 'யாழகம்' 568, ஹொஸ்பிடல் வீதி. தொ: 021 2225563
HOTLINE: 5652652
www.esermarketing.com



ஜக்குபாய் படத்தின் விசேட காட்சியைப் பார்க்க வந்தபோது சினிமாப் பிரபல்யங்களான சிம்பு, தனுஷ், ராதிகா, த்ரிஷா மற்றும் அர்ஜுன்...

## ஆர்வம்

பாதியில் பிரகாசப் படம் பிரகாச வில்லன் தனது தாய்மொழியான கன்னடத்தில் படம் இயக்குகிறார். தமிழில் அப்பா மகள் பாசத்தைச் சொன்ன படத்தைதான் கன்னடத்தில் ரீமேக் செய்கிறார். ஆரவாரமாகத் தொடங்கிய படப்பிடிப்பு இப்போது அந்தரத்தில் ஊசலாடுகிறது. எல்லாமே பைனான்ஸ் இல்லாததால்தான் இந்தத் தடுமாற்றம். படத்தைவிட சொந்த வாழ்க்கையில் நடன இயக்குனருடன் ஜோடி சேருவதில்தான் பிரகாசம் ஆர்வம் காட்டுகிறார் என குமைகிறார்கள் படத்தில் பணிபுரிகிறவர்கள்.



படம்-தில்லாலங்கடி

பிரியாமணி தெலுங்குப் படங்களில் கவர்ச்சியாக நடித்து ஆந்திரப் பட உலகையே அதிர வைத்து வருகிறார்.
அவரது அரைகுறை ஆடைப்படங்களை இணையத் தளங்களில் பார்த்து 'பருத்தி வீரன்' முத்தழகியா இவர் என்று தமிழ் ரசிகர்கள் வாய் பிளக்கின்றனர். தமிழில் சமீபத்தில் ரிலீசான 'நினைத்தாலே இனிக்கும்', 'ஆறுமுகம்' படங்களில் மூடிக்கொண்டுதான் நடித்தார். அதன் பிறகு 'துரோணா' என்ற தெலுங்குப் படத்தில் முதன் முதலாக நீச்சல் உடையில் தோன்றினார்.
நீச்சல் உடையுடன்கூடிய பட போஸ்டர்கள் ஆந்திரா முழுவதும் ஒட்டப்பட்டு பரபரப்பு ஏற்படுத்தின.
தற்போது 'சாத்யம்' என்ற தெலுங்குப் படத்தில் அதை விட ஒரு படி மேலே போய் ஜெகபதி பாபுவுடன் படுக்கை அறைக் காட்சிகளில் நெருக்கம் காட்டியுள்ளார்.
ஜெகபதி பாபுக்கும் பிரியாமணிக்கும் காதல் எனவும் கிசுகிசுக்கள் வந்த வண்ணமுள்ளன. இருவரும் பல படங்களில் இணைந்து நடித்துள்ளனர்.
'சாத்யம்' பட படுக்கை அறை சீன்கள் காதலை நிரூபிப்பதாக உள்ளன என்கின்றனர். இந்த சூடான படங்கள் இணைய தளங்களில் பரவி வருகின்றன.
பிரியாமணியின் கவர்ச்சி படங்களைப் பார்த்து தமிழ், தெலுங்கு திரையுலக குத்தாட்ட நடிகைகளே ஆடிப்போய் உள்ளனர்.



(கடந்த வாரத் தொடர்ச்சி)



## எல்லாளன் பட ஒளிப்பதிவாளர் சந்தோஷுடன் ஒரு சந்திப்பு...

**கேள்வி:**-'ஓயாத அலைகள்' உட்படப் பல நடவடிக்கைகளை போராளிகள் வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார்கள். அதில் குறிப்பாக 'எல்லாளன்' நடவடிக்கையை திரைப்படமாக எடுக்க என்ன காரணம்?

**பதில்:**- புலிகள் ஆனையிறவை மீட்டது ஈழப் போராட்டத்தில் ஒரு முக்கியமான நிகழ்வு. அதுக்குப் பிறகு பல தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்தினாலும், 'எல்லாளன்' நடவடிக்கையையே அவர்கள் முக்கியமானதாகக் கருதினார்கள். இதை புரிந்துகொள்ள வேண்டுமென்றால் 'எல்லாளன்' நடவடிக்கைக்குத் தூண்டுதலாக அமைந்த விடயத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

எதிரிகளின் வான் தாக்குதலால் தமிழர்களுக்குப் பெரிய இழப்புகள் ஏற்பட்டிருந்தாலும் 2007இல் செஞ்சோலையில் நடத்தப்பட்ட வான் தாக்குதல் கொடூரமானது. இதில் அறுபதுக்கும் மேற்பட்ட பெண் குழந்தைகள் கொல்லப்பட்டார்கள். இந்தக் குழந்தைகள் எல்லோருமே பெற்றோர்களைப் பறிகொடுத்தவர்கள். இந்தக் கொடூர நிகழ்வுக்குப் பிறகுதான் எதிரியின் வான் தளத்தைத் தகர்க்கவேணும் என்கிற முடிவு எடுக்கப்படுகிறது. அதன் செயல் வடிவம்தான் 'எல்லாளன்' நடவடிக்கை.

**கே-** செஞ்சோலைப் படுகொலையும் படத்தில் இடம்பெற்றுள்ளது இல்லையா?

**ப-**'எல்லாளன்' நடவடிக்கையின் தூண்டுகோலே செஞ்சோலை படுகொலைதான். 2007 நவம்பர் மாதம் தமிழ்த் தேசியத் தலைவரின் மாவீரர் தின உரை புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கும்போது கிபிர் விமானத் தாக்குதலில் வானொலி நிலையம் தகர்க்கப்படுகிறது. அதன் ஊழியர்கள் கொல்லப்படுகிறார்கள். அந்த இடிபாடுகளில் செஞ்சோலைப் படுகொலைக் காட்சிகளை எடுத்தோம். அதில் நடித்த குழந்தைகள் எல்லோரும் செஞ்சோலைத் தாக்குதலில் உயிர் பிழைத்தவர்கள். வழக்கமான சினிமா மேக்கப் துணையுடன் எடுத்த அந்தக் காட்சியில், அந்தத் தாக்குதலில் ஊனமுற்ற குழந்தைகளையும் பயன்படுத்தியமையால் அது செஞ்சோலைத் தாக்குதலை அப்படியே பதிவு செய்துள்ளது என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால், 'எல்லாளன்' திரைப்படத்தில் வரலாற்றை மறுஉருவாக்கம் செய்திருக்கிறோமே தவிர அது உண்மையல்ல.

**கே-**படத்துக்கான உங்கள் தயாரிப்பைப் பற்றி கொஞ்சம் சொல்ல முடியுமா?

**ப-** 2008 ஜனவரி நான் அங்கு போனேன். பெப்ரவரி 10ஆம் திகதி படப்பிடிப்பு. படப்பிடிப்புக்கு முன்னர் ஒரு விடயத்தில் நான் உறுதியாக இருந்தேன். படத்தில் போராளிகளை மட்டுமே நடிக்க வைப்பது. இதை அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். ஈழத்தில் இருந்த நிதர்சனம் மற்றும் திரைப்பட உருவாக்கப் பிரிவோடு இணைந்துதான் படத்துக்கான வேலைகளைச் செய்தேன். இந்தப் பிரிவில் போராளிகள், பொதுமக்கள், போரில் காயமடைந்தவர்கள் என்று பலதரப்பட்டவர்கள் இருந்தார்கள். முதல் வேலையா 'எல்லாளன்' நடவடிக்கையில் ஈடுபட்ட 21 கரும்புலிகளின் புகைப்படங்களை வைத்து அவர்களின் நிறம், உயரம், தோற்றம் இதெல்லாம் ஒத்துவருகிற போராளிகளை நடிப்பதற்காகத் தெரிவு செய்தோம். அந்த 21 போராளிகளின் பெற்றோர்கள், நண்பர்கள், உறவினர்கள் என்று நிறையப் பேரைச் சந்தித்து அவர்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்தோம். இந்த விவரங்களையும், அவர்களின் டைரிக் குறிப்புகளையும் வைத்துத்தான் படத்தில் அவர்களைப் பற்றிய பகுதிகளை உருவாக்கினோம்.

**கே-**அதாவது படத்தில் கற்பனையான புனைவுகள் எதுவும் இல்லை என்கிறீர்களா?

**ப-**அதுதான் உண்மை. 21 கரும்புலிகள் எடுத்துக்கொண்ட பயிற்சியும் அப்படியே படத்தில் வருகிறது. கடுமையான பயிற்சி இலகுவான சண்டை. இதுதான் அவர்களின் கொள்கை. நடவடிக்கைக்கு முன்பு ஆயுதப் பயிற்சி, உளவியல் பயிற்சி, உணவுக் கட்டுப்பாட்டுப் பயிற்சி, தற்காப்புப் பயிற்சி என்று நிறையப் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. அதை அப்படியே போராளிகளை வைத்துப் படமாக்கினோம். பயிற்சிக் காட்சிகளிலும் உண்மையான ஆயுதங்களைத்தான் பயன்படுத்தினோம். நாங்கள் சினிமாவில் செய்கிற மாதிரி டம்மியைப் பயன்படுத்தலாமா என்று கேட்டேன். நாங்க சினிமாக்காரர்கள் இல்லை, அப்புறம் டம்மி என்கிறதே எங்ககிட்டக் கிடையாது என்று மறுத்தார்கள். படத்தில் பயன்படுத்தப்படுகிற எல்லாமே, ஆயுதங்களும் - வெடிப் பொருட்களும் - நூறு வீதம் உண்மையானவை. பயிற்சியாக இருந்தாலும் சரி, போராளிகளின் தனிப்பட்ட வாழ்க்கையாக இருந்தாலும் சரி எல்லாமே உண்மைதான்.

**கே-**தாக்குதல் சம்பவத்தை எப்படிப் புனைவு இல்லாமல் எடுக்க முடிந்தது?

**ப-**அனுராதபுரம் தாக்குதலுக்கு முன்னர் அதிகாலை 'மார்ச் 3.45 மணிக்கு நடவடிக்கையை முன்னெடுத்துச் சென்ற லெப். கேணல் இளங்கோ தாக்குதலை எப்படி நடத்தவேணும் என்று மற்ற 20 பேரிடமும் பேசினார். இதிலிருந்து அதிகாலை 5.40 வரை அவர் தாக்குதல் நடவடிக்கையை தலைமையகத்துடன் 'சட்லைட்' போனில் சொல்லிக்கொண்டேயிருக்கிறார். தாக்குதல் அவரது பேச்சில் அப்படியே பதிவாகியிருக்கு. படத்தில் இந்தத் தாக்குதல் 25 நிமிடங்கள் வரை வருகிறது. இந்த 25 நிமிடம் நீங்கள் கேட்கிற ஒவ்வொரு வார்த்தையும் இளங்கோவின் பேச்சில் அப்படியே பதிவானவை. சொல்லப் போனால் மற்றைய காட்சிகளைவிடத் தாக்குதல் காட்சிதான் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே மறு உருவாக்கம் செய்யப்பட்டிருக்கு. (அடுத்த வாரமும் தொடரும்....)

# கவிதைப்புனல்

## குழந்தைகள்



மாசில் குழந்தை உள்ளத்தின்
மாண்புக் கெதுவும் நிகரில்லை
தேசுற் றிலங்கும் வதனத்தில்
தெய்வத் தன்மை தான்ஜொலிக்கும்
வாச மலரின் அழகெல்லாம்
வாரிச் சுருட்டும் வனப்புமிகும்
பாசம் அதனில் எளிதுறையும்
பார்க்கின் இன்பம் தான்பிறக்கும்!

பேசும் சொல்லின் பொருளறியார்
பேதமை தாங்கும் பண்புமிலர்
ஆசை பெருக முகம்மலரும்
அவர்தம் சொல்லில் அகம்மலரும்
நேசம் பெருகும் நேர்ச்சிரிப்பில்
நேர்மைக் கெவர்தான் நிகராவர்
தேசம் செழிக்கத் திருவுறையும்
தேனமு தென்னின் தெவிட்டிடுமோ?

தேடும் செல்வம் பொருளெல்லாம்
தேர்ந்த கல்விச் சிறப்பெல்லாம்
நாடும் நகரும் வளமெல்லாம்
நலமார் குழந்தைக் கீடாமோ
பாடும் கலையும் பரிணமிக்கும்
பண்பும் வளர்ந்து சீர்கொடுக்கும்
ஏடும் சிறக்கும் எழில்பெருக்கும்
ஏற்றம் பெறுவார் குழந்தைகளே!

மழலை யுதிர்த்தால் செவிக்கின்பம்
மனமும் நெகிழும் உவகையுறும்
பழகிப் பேசிக் கரமணைத்தால்
பற்றிப் பிடித்து முத்தமிடும்
நிழலைப் போலப் பின்தொடரும்
நீங்கா அன்பை வளர்த்துவிடும்
எழிலின் கோலம் எமைக்கவரும்
ஏந்தி எத்தி மகிழ்ந்திடுவோம்!

இறையின் உருவாம் மழலைகளின்
இனிய விழியின் பார்வையிலே
உறையும் அகத்தின் சுடரொளியும்
உணர்வு முந்த உடன்தழுவும்
வெறுமை யகல மனைதுலங்கும்
வேற்றுமை களையும் புன்சிரிப்பால்
நறுமணம் கமழும் மலர்களவர்
நயனத் தசைவால் கவர்ந்திடுவார்!

இறைவன் வாரி அணைக்கின்ற
இனிய அன்பின் சின்னமவர்
மறையின் கருவின் பொருளவரே
மங்கா திலங்கும் நித்திலங்கள்
நிறைவாய் அருளைப் பொழிகின்ற
நிர்மல மான இரத்தினங்கள்
எரிக்கும் சுடரின் ஒளிப்பிழம்பாய்
எழிலுறு உலகைப் படைத்திடுவார்!

- ஞானம்

## மலையக எழுச்சி

### தொழிற் சங்கம்

சங்கத்தார் மாறு வேடம்
சங்கற்பம் நெஞ்சில்; சென்று
அங்கங்கள் சேர்ப்பு; பார்ப்பு!
அவலங்கள் ஆய்வு; அன்னார்
பங்கங்கள் எண்ணார்; தோட்டப்
பணியாளர் சில்லோர் சூழ்ச்சி!
கங்கணம் மக்கள்; கட்டிக்
காத்தனர் கட்சி யன்று!

தொழிற்சங்கம் அமைப்பு; வெள்ளைத்
துரைமார்கள் எதிர்ப்பு; சேர்ந்தால்
பழிவாங்கல்; பாய்ச்சல்; உள்ளே
புகுந்தபல் தலைவர் மார்கள்
வழியினில் தடுப்பு; மன்றில்
வழக்குகள் தொடுப்பு; சங்க
அழிப்புக்கு வித்து; சக்தி
சிதைப்புக்கு சித்து அன்னார்!

கங்காணி மார்கள் நோக்கிக்
கட்டளைத் தோட்டம்; சங்க
அங்கங்கள் ஆகுவோரை
அறிவிக்கு மாறு; சில்லோர்
பங்கங்கள் எண்ண வில்லை
பார்ப்பங்கு வேவு; ஓடி
தங்கங்கள் துரைமார் என்று
தவறாது அள்ளி வைப்பு!

கூட்டங்கள் உள்ளே போடக்
கூடாது; தடுப்பு; அன்று
தோட்டங்கள் கடுப்பு; சங்கத்
தொழிலாளர் துடுக்கு; சங்கக்
கூட்டங்கள் வெளியில்! ஆமாம்
பொதுச்சந்தி பாதை யோரம்
நோட்டத்தில் நாடு; தோட்டம்!
விவரங்கள் திரட்டல்; வேவு!
(தொடரும்)

-கவிஞர் ஸி.எஸ்.காந்தி

## இத்தனை நாளாய் எங்கிருந்தாய்?

"பதுக்கல் நடவடிக்கை" படைமுகிலார் கைவிட்டுப்
புதுக்கிப் பொழிந்திங்கு புவிமீது வெள்ளமெனச்
சதுக்கல் நிலப்பரப்பில் தண்ணீராய் ஓடியதை
ஒதுக்க இயலாமல் ஒப்புவிப்பன் இக்கவியில்.

நட்டநடு இரவில், நானுறங்கு மெத்தையிலே
சொட்டிய நீர்த்துளியால் துயில்கலைந் தெழுந்திருந்து
சட்டிவைத் தொழுக்கைத் தரைவீழா நிலைகாத்து,
மட்டுக் கட்டினனே, மழைநல்ல மழையென்று!

ஏங்கித் தவித்திருக்க, ஏமாற்றி, ஏமாற்றி,
தூங்கி நெல்வாடித் துவழ்தெரிய விட்டதன்பின்
வாங்கு வாங்கென்று வாங்கியதே பெருமழையும்,
தேங்கி நிற்கிறதே, தெருவெல்லாம் வெள்ளமடா!

குடைபிடித்துச் செல்வோரின் குடைதுளைத்து ஊடுருவித்
தடைதாண்டித் துளியாகத் தலைநனைத்த மழையிதுவே!
அடைமழையை பெய்விக்க, அவளாரும் கற்புடையாள்
படைமுகிலைப் பார்த்தாணை படைத்தாளோ'வா'வென்று

நல்லார் யாரேனும் நாட்டுள்ளே வந்தாரோ?
பொல்லாத மண்மீது பொழிவிக்க என்றங்கு
சொல்லாமற் கொள்ளாமல் சுடுதரையைக் குளிர்விக்க
நல்லார் யாரேனும் நாட்டுள்ளே வந்தாரோ?!

வீசிநீரடித்து வீதியெல்லாம் கழுவி வைக்கக்
காசுகொடுப்ப தென்றால் கணக்கென்ன ஆகுமப்பா?!
'ஓசி'மழை பெய்து, ஊத்தைகளை நீக்குவதை
தூசுஇலை தட்டித் துடைப்பதனைப் பாருமப்பா!

ஊசிக் காற்றடிக்க உடல்சுருட்டிப் போர்வைக்குள்
வீசு கதகதப்பில் வருந்தூக்கச் சுகம்-உச்சம்!
சூழும் அடைமழையில் தோயவந்த தோகையர்கள்
"பாழும் மழை" யென்று பழிசொல்லல் சரிதானோ?!

மழையே, நீ இரங்கி மா தம்மும் மாரியெனப்
பொழிவாயேல் எங்களுக்குப் பொதுவாக நன்மைவரும்!
அழிவாகத் தொடர்கின்ற அடைமழையை யாவருமே
இழிவாகக் கருதுவதை இதயத்தில் வைப்பாயே!

-கி.வாயுபுத்திரன்

## கிளிச் சோதிடம்

எங்கும் புகழ் தங்கும் புது ஆட்சித் திறன்
எப்படி யிருக்கும் சொல்கிளியே!-அதைச்
செப்பமா யெமக்கு நீமொழியே!-வலு
சிங்கக்கரம் பங்கம்பழி பாவம்தனைச்
சீக்கிர மாயினி அறுத்திடுமாம்-நற்
பாக்கியமே வாழ்வில் குருத்திடுமாம்!

சோலைமலர் மாலை தனைச் சூடும் அர
சாட்சி நிலையைச் சொல்கிளியே!-மன
சாட்சி பிசகா மல்மொழியே!-புலர்
காலைமுதல் மாலைவரை உழைப்போர் துயர்
கடிதினில் நீங்கி மறைந்திடுமாம்!-அவர்
மடிதனில் ஊதியம் நிறைந்திடுமாம்!

ஆட்டம் பல போட்ட துரை மார்கள் புரி
அடுத்த கரணம் எதுகிளியே-நமை
அடுத்திடும் தேர்தலில் புதுவழியோ?-அவர்
நாட்டம்எலாம் ஆட்டம்உற மீண்டும்எமை
நாடியே வாசலில் வந்திடுவார்-குழு
கூடியே மண்டையும் வெந்திடுவார்!

சாதலும் படு மோதலு மென இலங்கையிலே
சந்ததம் அழிவோ சொல்கிளியே-நம்
சந்ததி இழியுமோ நீமொழியே!-இனி
காதக மில்லை பாதக மில்லை வளங்
காணலாம் என்பது சத்தியமாம்!-வளை
நாணலும் நிமிருமாம் நித்தியமாய்!

வடக்கில் தினம் முடக்கப் படும் அகதிகளின்
வாழ்வில் மோட்சமோ சொல்கிளியே-இலை
தாழ்வில் நீட்சியோ நீமொழியே!-அவர்
கிடக்கும்நிலை விடுக்கப்பட தொடுக்கும்சுபம்
கிடைத்திடும் என்பது ஆட்சிமொழி-அவர்
அடைந்திடும் துயர்க்கது மீட்சிவழி!

-ஏறாவூர் அனலக்தர்

## மண்ணுலக வேந்தர்



பாலன் பிறந்தார் இயேசு பாலன் பிறந்தார்
பாவிகள் மீட்சிக் காக பாலன் பிறந்தார்
பாவக் கறையை நீக்க பாலன் பிறந்தார்
பாடு பட்டு மனுவை மீட்கப் பிறந்தார்!

மனுக்குலத்தைக் காத்து வந்தார்
மனத்துயரங்கள் நீக்கி நின்றார்
அணுகிய நோயால் தவித்த பேரை
அற்புதர் மீட்டு புரந்து நின்றார்!

-எஸ்.தர்ஷினி

## தமிழ் வணங்கும்!

பள்ளியறைக் குள்ளமர்ந்து ரகசியமாய்ப்
படிக்கின்ற பாடங்களை இழைபிரித்து
துல்லியமாய் ஏடுகளிற் தொட்டெழுதும்
தோதற்ற நவயுகத்தின் மதனவனே
உள்ளிருக்கும் காமத்தைக் கிளரச்செயும்
உதவாதோர் கவினாட்சி உனக்கெதற்கு?

கணிகையரின் கட்டழகில் மெய்மறந்து
கணப்பொழுதில் மெட்டமைத்துக் கவிதைபாடும்
துணிவுமிகு கவிஞர்குழாம் துளிர்த்தெழுமே
தொல்லைசேர் காமமெனும் தீயையேந்தி
இனிமையென்று இங்கெமக்குத் தருவதாலே
ஈனங்கள் பெருக்கெடுத்தே கற்பைத்தின்னும்!

சாமத்தில் துயிலெழுப்புஞ் சேவலினாய்
சமத்தாகக் கவிக்குரலால் விழிக்கச்செயும்
காமத்துக் கவிஞர்களின் கருப்பொருளில்
கணிகையரின் புறவழகு துடிப்பதென்ன....?
நாமத்தில் மன்மதனின் லீலைபூண்டு
நற்கவிதா மன்றங்களில் நடிப்பதென்ன?

அம்மணமாய் அரிவையரைக் கற்பனையின்
அருகமர்த்தி மதுக்கவியால் அளந்தெடுத்துச்
செம்மையுறக் காமச்சுவை சொட்டுமாறு
செய்கின்ற இலக்கியங்கள் புகழ்ச்சிக்கன்றி
நம்மவர்கள் சீர்திருத்தங் கொள்வதற்கல்ல
நாற்றிசையும் புகழுதற்காய்ப் பாடுகின்றார்!?

முத்தொளிரும் தத்துவங்கள் பொன்மொழிகள்
முகையவிழ்த்தே அறப்பொருளா யிருக்கையிலேன்
செத்துதிரும் சிற்றின்பக் கலைகளினைச்
சிந்தையினில் வளர்த்துக்கவி தீட்டுகின்றார்
புத்தொளியைப் பரப்பிடும்நற் பெட்டகமாய்ப்
புலவரினம் புனைகையின் தமிழ்வணங்கும்!

-கவிஞர் ஏ.ஆர்.நாகூர், கந்தளாய்

# தமிழ்த்திரையுலகில் இசையும் பாடல்களும்

திரை இசையின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், திரைப்படங்கள் வெளிவரத் தொடங்கிய காலம் முதலாக இசையும் பாடல்களும் பிரிக்க முடியாத அம்சங் களாக இருந்திருக்கின்றன. ஆரம்ப காலத்தில் வெளிவந்த மௌனப் படங்கள் திரையிடப்படும்போது, திரைக்கு முன்னால் இசைக் கலைஞர்கள் அமர்ந்திருந்து காட்சிகளுக்கு ஏற்றவகையில் பாடல்களையும் பின்னணி இசையையும் அளித்து வந்துள்ளனர். 1930 ஆம் ஆண்டு இந்தியாவில் வெளிவந்த 'ஆலம் ஆரா' என்னும் படத்தில் முதன் முதலாக இசை அறிமுகமானது. இப்படத்தில் ஏழு பாடல்கள் இடம்பெற்றதாக அறிய முடிகிறது. உலக சினிமாவில் 1926 ஆம் ஆண்டு வெளிவந்த 'டொன் யுவான்' (Don Juan) திரைப்படத்தில் தான் இசை இடம்பெற்றிருந்தது.

தமிழ்த் திரையிசையின் தொனிகளும் அதன் பல்வேறு கூறுகளும் மொழி எல்லைகளையும், கலாசாரங்களையும் கடந்து இன்றைக்கு உலக அளவில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. தமிழ் திரையுலகின் இசையமைப்பாளர்கள் வித்தியாசமான இசைப்பண்பாட்டையுடைய மொழிகளிலும் தமது வித்துவத் தன்மையைக் காட்டி வருகின்றார்கள். இசையமைப்பாளர் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு தென்னிந்திய மொழிப் படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

இசைஞானி இளையராஜா தமது இசையமைப்பால் இந்தியா முழுவதும் புகழ் பெற்றவர். ஏ.ஆர்.ரஹ்மான், 'ரோஜா' படத்தின் மூலம் இசையமைப்பாளரானவர். தமிழ்த் திரையிசையை சர்வதேச ரசிகர்களும் ரசிக்கக்கூடிய அளவில், உலகளாவிய ஈர்ப்பைப் பெற்றவர். ஆங்கிலப் படத்திற்கு இசையமைத்ததன்


எம்.எஸ்.விஸ்வநாதன்

மூலம் இரண்டு ஆஸ்கார் விருதுகளைப் பெற்றவர்.

அவரது புதிய கொலிவூட் படமான 'கப்பிள்ஸ் ரிட்றீட்' (Couples Retreat) இல் 'குறு குறு கண்களிலே எனை அவள் வென்றாளே' என்னும் தமிழ்ப் பாடலையும் இணைத்துள்ளார். ஒரே சமயத்தில் இரண்டு 'கிராமி' விருதுகளைப் பெற்ற முதல் இந்திய இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியத் திரையில் இசையே முக்கியத் துவம் பெற்றிருந்த காலத்தில், அன்று பாடகர்களே நடிகர்களாகப் பிரகாசித்தனர். கர்நாடக இசையில் பயிற்சியும், நல்ல குரல் வளமும் பெற்றிருப்பது நல்ல நடிகர்களின் அடிப்படைத் தகுதியாக இருந்தது. நடிப்புத் திறமையை விட பாடும் முறையும் தான் முக்கியமானதாகக் காணப்பட்டது. பாடலாசிரியர், பாடகர், இசையமைப்பாளர் ஆகியோர் இசைத்திறன் மிக்கவர்களாக இருந்துள்ளனர்.


இளையராஜா

தமிழ்த் திரையுலகின் முன்னணி நடிகர்களில் பெரும்பாலானவர்கள் இசை நிபுணர்களாகவும் பாகவதர்களா கவும் இருந்துள்ளனர். முதல் சுப்பர் ஸ்டாரான எம்.கே.தியாக ராஜ பாகவதர் கர்நாடக மரபிசைப் பாடகர். அவர் நடித்த படங்களில் அவர் பாடிய பாடல்கள் யாவும் இசை ரசிகர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன. அவர் நடித்த 'பவளக் கொடி' படத்தில் மட்டும் ஐம்பது பாடல்கள். அனைத்தும் கர்நாடக இசையை அடிப்படையாகக் கொண்டமைந்தன.

நவீன காலத்து கர்நாடக இசையில் பல ஆக்கங்களை நிகழ்த்திப் புகழ் பெற்ற பாபநாசம் சிவன், தமிழ்த் திரையிசையின் பல தொடக்க காலப் பாடல்களை இயற்றி இசையமைத்தவர். இதனால் இவரைத் தமிழ் திரையிசையின் தந்தை என்று அழைக்கிறார்கள். இவரால் எழுதப்பட்ட திரைப் பாடல்களை எம்.கே.தியாகராஜபாகவதர் தாம் நடித்த படங்களில் பாடியுள்ளார்.

மற்றுமொரு நடிகரான பி.யு.சின்னப்பா பாகவதர் பிரமாதமாகப் பாடுவதுடன் நடிப்பிலும் திறமை பெற்றவராகவும் திகழ்ந்தார். 'காதல் கனி ரசமே', 'சந்திரோதயம் இதிலே', 'அன்பில் விளைந்த அமுதமே' போன்ற கர்நாடக ராகங்களிலான பாடல்களை மிகத் துல்லியமாகப் பாடி ரசிகர்களைத் தம்வசப் படுத்தினார். இன்று வரையும் உணர்ச்சி பூர்வமாகப் பாடுவதில் அவர் வெளிப்படுத்திய தரம் எட்ட முடியாத ஓர் உச்சமாகத்தான் இருக்கின்றது.

அக்காலத்தில் எப்போதாவது இடம்பெற்ற தமிழ் நாட்டுப்புற இசையின் பிரவேசத்தைத் தவிர கர்நாடக சங்கீதம் மட்டுமே தமிழ்த் திரையிசையின் முக்கிய அம்சமாக விளங்கியது. இதே காலகட்டத்தில் பாடக நடிகராக முன்வந்த, டி.ஆர். மகாலிங்கம் கர்நாடக இசையை அடிப்படையாகக் கொண்ட திரையிசை மரபை 1970கள் வரை முன்னெடுத்து வந்துள்ளார்.

1930களில் நடிகராகக் களம் பதித்த எஸ்.வி. வெங்கட் ராமன், மீரா, கண்ணகி ஆகிய படங்களுக்கு இசையமைத்ததன் பயனாக முழுநேர இசையமைப்பாளராக உருவானார். தமிழ்த்திரையிசையின் முதல் நட்சத்திர இசையமைப்பாளர் என்ற பெருமையைப் பெற்றார். கர்நாடக இசை மேதையான ஜீ.என்.பாலசுப்பிரமணியம், டி.கே.பட்டம்மாள், முசிறி சுப்பிரமணிய ஐயர், எஸ்.வி. சுப்பையா பாகவதர் ஆகியோரும் தமிழ்த் திரையிசையின் கர்நாடக சங்கீத யுகத்தில் பணியாற்றியவர்களே. தண்டபாணி தேசிகர், வி.என்.சுந்தரம், என்.எஸ். கிருஷ்ணன், கே.ஆர். ராமசாமி ஆகிய அனைவருமே பாடக நடிகர்கள்.

1930 களில் குழந்தை நட்சத்திரமாக திரையுலகில் கால்பதித்த சிதம்பரம் எஸ்.ஜெயராமன் பின்னாளில் பிரபல்யம் பெற்று தமிழ்த் திரைப்பட உலகின் சிறந்த பாடகராக முகிழ்ந்தார். 1950 இல் வெளிவந்த 'விஜயகுமாரி' 1954 இல் வெளிவந்த 'ரத்தக்கண்ணீர்' போன்ற புகழ்பெற்ற பல படங்களின் இசையையும் அவரே அமைத்தார்.

எம்.எஸ்.சுப்புலட்சுமி, கே.பி.சுந்தராம்பாள், யு.ஆர்.ஜீவரத்தினம், என்.சி.வசந்த கோகிலம் ஆகியவர்கள் சிறந்த கர்நாடக மரபிசைப் பாடகிகளாகவும் புகழ் பெற்ற நடிகைகளாகவும் இருந்துள்ளார்கள்.

நாடக மேடைக ளில் பின்னணிப் பாடகர்களாகவும் ஹார்மோனியம் வாசிப்பவர்களாகவும் தமது இசை வாழ்க்கை யைத் தொடங்கிய ஜி.ராமநாதன், 1942 இல் வெளிவந்த 'மனோன்மணி' என்ற படம் மூலம் இசையமைப்பாளராக தமிழ்த் திரையிசைக்குள் சங்கமமானார். பல ஆண்டு கள் ஓடிச் சாதனை படைத்த எம்.கே. தியாகராஜ பாகவதரின் 'ஹரிதாஸ்' படத்திற்கு இசையமைத்ததன் மூலம் தமிழ்த் திரையிசையில் ஒரு புதிய யுகத்தின் தொடக்கத்தைத் தொடக்கி வைத்தார்.

முப்பதுகளிலே இசையமைக்கத் தொடங்கிய ஆர்.சுதர்சனம், ஏ.வி.எம். ஸ்ரூடியோவின் ஆஸ்தான இசையமைப்பாளராகி அறுபதுகளின் கடைசிவரை பல படங்களுக்கு இசையமைத்தார். ஹரிச்சந்திரா, ஸ்ரீவள்ளி, பராசக்தி ஆகிய படங்களுக்கு இசையமைத்து மிகப்பெரிய வெற்றிப்பட இசையமைப்பாளராகத் தம்மைப் பிரபல்யப்படுத்திக்கொண்டார்.

இவரை அடியொற்றி வந்த கே.வி.மகாதேவன் இசையமைப்பாளராகின்றார். கர்நாடக இசையிலும், நாட்டுப்புற இசையிலும், மெல்லிசை மெட்டுகளிலும் பிரபலமடைந்த பலநூறு பாடல்களுக்கு இசையமைத்துள்ளார். வீணை எஸ்.பாலச்சந்தர், வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதன், எஸ்.எம். சுப்பையா நாயுடு, சீ.ஆர்.சுப்பராமன், டி.ஆர்.பாப்பா ஆகியோரும் தமிழ்த் திரைப்படங்களுக்கு இசையமைத்


ஏ.ஆர்.ரஹ்மான்

துள்ளனர். கே.பி. சந்திரபாபு, பானுமதி ஆகியோர் நடிகர்களாக இருந்து திரைப் படங்களில் பாடி நடித்துள்ளனர்.

***

# 'யாழ் நூல்' படைத்த முத்தமிழ் வித்தகர்

தமிழ் கூறும் நல்லுலகம் போற்றுகின்ற 'யாழ்நூல்' என்னும் பொக்கிசத்தைத் தரணிக்குத் தந்த 'முத்தமிழ் வித்தகர்' சுவாமி விபுலானந்தர் பெருமைக்குரியவர். ''தமிழ் ஆய்வின் இக்கால விரிவுக்கு வேண்டிய வித்துக்களை விபுலானந்தருடைய புலமை ஈடுபாடுகளிலேயே காணமுடிகின்றது. குறிப்பாகத் தமிழ் இலக்கியத்தினூடே வருகின்ற சிந்தனை மரபு பற்றிய ஒரு சிரத்தை விபுலானந்தரிடத்து வெளிப்பட்டுள்ளது. இயற்கை அறிவியல் நோக்கு முறையினை உள்வாங்கிய ஒரு பயில்வாளர் என்கின்ற வகையிலும் அதேவேளையில் ஆத்மார்த்த அழகியல் துறைகளில் ஈடுபாடு கொண்டவர் என்ற வகையிலும் தமிழ்ப் பண்பாடு பற்றிய பல விடயங்களையும் பன்முகப்படப் பார்க்கும் ஆற்றலுடையவராக விளங்குகின்றார்'' என்று பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் கூறியுள்ளார்.

'முத்தமிழ் வித்தகர்' எனத் தமிழ் உலகம் வானளாவப் போற்றும் வகையில் சுவாமி விபுலானந்தரின் இலக்கிய ஆளுமை ஆழ்ந்தும், விரிந்தும் காணப்பட்டது உண்மையே. ஆனால் அந்த இலக்கியப் பணிகளுக்கு மத்தியிலும் சமூகத் தொண்டிற்கு, அதுவும் குறிப்பாக கல்வித் தொண்டிற்கு அவர் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதும் அதே அளவிற்குப் பாராட்டத்தக்க விடயமே. இலக்கியப் பணியும் சமூகப் பணியும் அவரது ஆளுமையின் இரு மிகப் பெரிய பரிமாணங்கள் எனலாம். அவரது கல்விச் சிந்தனைகள் மற்றும் கல்வித் தொண்டினைக் குறித்தும் நாம் பெருமை கொள்ள முடியும்'' என்று சுவாமி ஆத்மகனாநந்த இயம்பியுள்ளார்.

''தமக்கென வாழாப் பிறர்குரியவராக வாழ்ந்தவர் சுவாமி விபுலானந்தர். தாம் பெற்ற-கற்ற கல்வியறிவைப் பிறருக்கு ஈந்து இன்பம் கண்டவர். தனது ஊர், தனது நாடு, தான் வாழ்ந்த உலகு ஆகியவற்றில் தம் குறுகிய வாழ்நாள் காலத்தில், அறிவு ஒளி பரப்பி, உலக மக்களை குறிப்பாக, தமிழ் மக்களைத் தமது கல்விநெறி, கல்வித் தொண்டுகளால் ஒரு புதிய தேசிய நோக்கில் வாழவைக்க முயன்ற துறவி விபுலானந்த அடிகள், இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய கல்வியறிஞர்களின் தேசிய பெருந்தலைவர்களின் வரிசையில் அடிகளும் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளார்'' என்று முன்னாள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி செ.அழகரத்தினம் தமது நூலில் எழுதியுள்ளார்.




பன்னெடுங்கால ஆராய்ச்சியின் விளைவாக அடிகள் ஆக்கியளித்திருக்கும் 'யாழ்நூல்' அரும்பெரும் பொக்கிசமாகும். தமது புலமைவழி நின்று பண்டைத் தமிழரின் இசைக் கருவிகளைத் துருவித் துருவியாராய்ந்து பண்டை யாழின் வரலாறு, அமைப்பு முறை போன்ற அரிய விடயங்களையெல்லாம் திரட்டித் தொகுத்துத் தம் ஆராய்ச்சி முடிபுகளை யாழ்நூல் வாயிலாக வெளியிட்டார்.

'யாழ்நூல்' கரந்தைத் தமிழ்ச்சங்க ஆதரவில் 1947 ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 20 ஆம் நாள் திருக்கொள்ளம் புத்தூரில் மற்றாஸ் மாநில கல்விமந்திரி அவிநாசலிங்கம் செட்டியார் அவர்களின் தலைமையில், சங்ககாலச் சம்பிரதாயங் களுக்கு ஒப்பாக அறிஞர் பேரவையில் மிகச் சிறப்பான முறையில் அரங்கேற்றப்பட்டது. தமிழ்ப்பணி, சமூகப்பணி, இலக்கியப்பணி, ஆராய்ச்சிப் பணி என்று பல்வகைப் பரிமாணங்களை உள்ளடக்கி வருங்காலச் சமுதாயத்திற்கு வழி காட்டியாக வாழ்ந்து 1947 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதி தமது ஐம்பத்து ஐந்தாவது வயதில் இயற்கை யெய்தினார். *

# கலைத்துறை நாயகனுக்கு கண்ணீர் அஞ்சலி !



இலங்கையின் முத்த கலைஞர்களில் ஒருவரான ஸ்ரீதர் பிச்சையப்பா கடந்த 20ஆம் திகதி காலமானார். இவர் நாடகம், கவிதை, ஓவியம், பாடல், இசையமைப்பு, அத்தோடு எழுத்துத்துறையிலும் பிரகாசித்த ஒரு கலைஞன். உலகில் ஒரு சில கலைஞர்களுக்கே இவர் போல எல்லா ஆற்றல்களும் பொருந்தி இருக்கும். இந்த பல்கலைத் தென்றல் ஸ்ரீதர் பிச்சையப்பாவின் நாடகங்கள் பல அரச, தனியார் வானொலிகளில் தடம் பதித்தவை என்றால் அது மிகையாகாது. இலங்கையில் இசைக்குழுக்களின் கச்சேரிகள் அனைத்திலும் இவர் பாடியிருக்கின்றார். இவர் பாடும் போது தனக்கே உரித்தான பாணியில் பாடும் விதம் பலரையும் கவர்ந்தது. இவரது இரசிகர்கள் இலங்கையில் மாத்திரமல்ல புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியிலும் உள்ளனர். அதற்கு இவர் வெளிநாடுகளில் நடத்திய நிகழ்ச்சிகளின் வெற்றிகளே சான்று.

இவர் சில வருடங்களுக்கு முன்னர் தொகுத்து வழங்கி இருந்த 'வானொலி அண்ணா' நிகழ்ச்சி சிறு குழந்தைகள் பலரை கவர்ந்த நிகழ்ச்சி. சிறுவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் வழங்கி அவர்களுடைய திறமையை வெளிக் காட்டியவர் அண்ணா ஸ்ரீதர்.

மெல்லிசை பாடல்கள் சிலவற்றை எழுதி, இசையமைத்து பாடியும் உள்ளார் ஸ்ரீதர். இவருடைய நகைச்சுவை நடிப்பினால் பலரது துயரங்களை போக்கியவர். மனிதர் தன்னுடைய வாழ்க்கையில் துயரத்தையே தழுவி வந்தார்.

பல மேடைகள் கண்ட ஸ்ரீதர் காரைதீவில் இசை நிகழ்ச்சிக்கு சென்றிருந்த வேளை குண்டு வெடிப்பு ஒன்றில் சிக்கி இவரது ஒற்றைக்கண் பாதிக்கப்பட்டது. அதன் பின்னர் சளைக்காது சோர்ந்து விடாது சந்தோஷமாகவே பல நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பித்தார். அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையின் தனிமையும், வெறுமையும், குடியும் ஒன்று சேர உள்ளுக்குள்ளேயே உருக்கி இன்று நல்ல கலைஞரான அவரை எம்மத்தியில் இருந்து பிரிந்து விட்டது. இந்த கலைஞர் எம்மை விட்டுப் பிரிந்தாலும், அவர் வளர்த்துச் சென்ற கலையும் எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த கலைஞனின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**தொகுப்பு - எம். சாந்தி**



பாடகி எல்.ஆர். ஈஸ்வரியுடன்..



நாடகத்தின் போது....



எம்.எஸ். விஸ்வநாதனுடன்....



இசை நிகழ்ச்சியின் போது...



கவிஞர் வைரமுத்துவுடன்....

## கலைஞனுக்கு ஓர் கவிதாஞ்சலி

படைப்பாளுமை மிக்க
பண்பாளனே-
வாழ்க்கையில் கலை செய்பவர்கள்
மத்தியில்
உன் வாழ்க்கையே
கனதியான கலையானது...

கண்ணீர்த் திவலைகளை
கவிதையாக்கி,
ஓராயிரம் நினைவுகளை
ஓவியமாக்கி,

அழுகையின் வினாடிகளை
அழகிய நடிப்பாக்கி,
சோகத்தின் சந்தங்களை
ஆனந்த சங்கீதமாக்கி,

மொத்தத்தில்
கவலையிலும் கலைகள் நெய்து
கண்ணீரை காணிக்கையாக்கிப்
போனவனே-
காரைதீவு சம்பவத்திலும்
கலையுலகிலிருந்து
நீ காணாமல் போகவில்லை...

படைப்பாளுமையின்
பல்கலைக்கழகம் நீ,
துயரச் சுமைகளிலும்
துவண்டு போகாத
இலக்கியம் நீ,

தலைக்கனமில்லாத
இலக்கணம் நீ,

வறுமையிலும்
புலமையைக் காட்டிய
அற்புதக் கலைஞன் நீ,

சதாரணங்களோடு
சரித்திரம் படைத்த
சகல கலா வல்லவனே- நீ
மரணிக்கவில்லை
மறைந்து விட்டாய்...!

**எஸ் ஜனூஸ்**





நடிகை ரம்யா கிருஷ்ணன் நடிக்கும் தங்கம் தொடர், சன் டி.வியில் ஒளிபரப்பாகி வருகிறது. இந்த தொடரில் ரம்யாகிருஷ்ணனுடன் சேர்ந்து நடிக்கும் வாய்ப்பை திரையுலகம் சாராத ஒரு பெண்ணுக்கு வழங்க முன்வந்திருக்கிறார், ரம்யா. இதுபற்றி அவர் கூறும்போது, தொடரை பார்க்கும் பெண்கள் பலர் என்னை சந்திக்கும்போது 'உங்களுடன் சேர்ந்து நடிக்க வேண்டுமே' என்கிறார்கள். அவர்களின் ஆர்வத்தை பூர்த்தி செய்யும் விதத்தில் தங்கம் தொடரிலேயே அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க விரும்புகிறேன். 20 வயதுக்கு மேற்பட்ட சிறந்த சரும அழகியான ஒருவருக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படும். சிந்தால் நிறுவனம் மூலம் தேர்வு செய்யப்படும் அவர், தொடர் முழுக்கவே என்னுடன் நடிப்பார் என்கிறார்.

## ரம்யாவுடன் நடிக்கலாம்

## சுட்டித் தமிழ்

தமிழ் மொழிக்கு கௌரவம் சேர்க்கும் விதத்தில் விஜய் டி.வி. நடத்தி வரும் ''தமிழ்ப் பேச்சு எங்கள் மூச்சு சுட்டிகள்'' நிகழ்ச்சி தமிழகத்தின் சிறந்த இளம் பேச்சாளரை தேர்வு செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் சேலம், கோவை, திருச்சி, மதுரை, நெல்லை மற்றும் சென்னை ஆகிய இடங்களில் இதற்கான நேர்முகத் தேர்வு நடத்தி அதில் சுமார் 160 குழந்தைகள் தேர்வானார்கள். இறுதியாக 50 சிறுவர்களுடன் போட்டி துவங்கியது.

இறுதிப்போட்டி சென்னை அண்ணா கலையரங்கத்தில் மூத்த தமிழ் அறிஞர்கள், தமிழ் சான்றோர்கள், ஆன்றோர்கள், தமிழ் பேராசிரியர்கள் முன்னணியில் நடைபெற்றது.

கணேஷ்வர், கார்த்திகேயன், பாலகுமரன், ஆகாஷ், நரேன், கவுதம், குறிஞ்சிக் கொற்றவன் ஆகியோரே இறுதிச்சுற்றின் 6 போட்டியாளர்கள். இவர்களில் ஒருவருக்குத்தான் வெற்றி மகுடம். சிறப்பு விருந்தினர்களாக நடிகர் சிவகுமார், கவிஞர் பா.விஜய், நக்கீரன் கோபால், கவிஞர் ஞானி மற்றும் சுப.வீரபாண்டியன், பர்வீன் சுல்தானா ஆகியோர் பங்குபெற்றனர்.

இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார் நெல்சன்.

தமிழர் வாழ்வியல், தமிழர் கலை, தமிழர் கொடை, தமிழர் வீரம், தமிழர் பண்பாடு, தமிழர் இலக்கியம் ஆகிய தலைப்புகளின் கீழ் இந்த சிறுவர்கள் பேச இருக்கின்றனர். இந்த சிறுவர்கள் மேடை ஆளுமை தலைப்பை எங்ஙனம் புரிந்து கொண்டுள்ளனர் என்ற அடிப்படையில் வெற்றியாளர் தேர்வாக உள்ளார் என்பது குறிப்படத்தக்கது.

**யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றை கதை வடிவில் தற்போது பலர் சுடர் ஒளி வார இதழுக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றனர். 'என்னுயிர்க் குழந்தை', 'மடியில் உறங்கினான்' என்று இரு கதைகள் ஏற்கனவே பிரசுரமாகி உள்ளன. இந்தத் தொடரில் தற்போது மூன்றாவது கதை பிரசுரமாகியுள்ளது. அடுத்த வாரமும் தொடரும். இவை அனைத்தும் உண்மைக் கதைகள்.**

# அகல்யா ஏன் குழந்தையானாள்

1

அ. க. வன்னியன்

ஓர் அதிகாலைப் பொழுதில் கதிரவன் ஒளி பரப்ப, இருண்டு அடர்ந்திருந்த காடு மெல்ல மெல்ல வெளிச்சம் பரப்பியது நாமும் அந்த அடர்ந்த காட்டுக்குள்ளால் ஒரு ஒற்றையடிப் பாதையால் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தோம். எவ்வளவு அழகு அந்தக்காடு. எம்மைக்கண்டு குரங்குகள் கத்திக் கொண்டு மரம் விட்டு மரம் தாவ, மயில்கள் அகவ, காட்டுக் கோழி கொக்கரித்துக் கொண்டு பறக்க, நாமும் எந்தச் சத்தமும் இல்லாமல் நடந்து வந்து கொண்டிருந்தோம். எம்மில் ஏழு பேர். அதில் கூட வந்தவர் ஒருவர் திடீரென இருமி விட்டார். நாம் அனைவரும் அப்படியே இருந்து விட்டோம். மரங்களிலிருந்த சில வண்டுகள் சிர் என்று பாடிக் கொண்டிருக்க, அங்கே ஓங்கி வளர்ந்து நின்ற பாலை, வீரை மரங்கள் ஒன்றுடனொன்று ஒட்டிக்கொண்டு சலசலக்க, நாமும் நடந்து வந்த களைப்பில், கையில் எடுத்து வந்திருந்த சிற்றுண்டிகளைச் சாப்பிடுவதற்காக ஓரிடத்தில் இருந்தோம். நான் மட்டும் நின்றுகொண்டிருந்தேன். அந்த இடத்திலிருந்து ஏதோவொரு வாசனை வந்துகொண்டிருந்தது. அந்தக் காட்டிலிருந்து அவ்வித வாசனை வருவதற்கு எந்த சந்தர்ப்பமும் இல்லை. ஆள் நடமாட்டம் இருப்பதை உணர்ந்துகொண்ட நான் சற்றுத்தூரம் சென்று பார்ப்போம் என்று இருபது மீற்றர் தூரம் வரை நடந்திருப்பேன். ஒரு பெரிய மரத்திற்கு அடியில் ஒருவர் மறைந்து கொள்வதைக்கண்டு என் சுடுகலன் இயங்கியது. மறுகணம் நெருப்புடன் சேர்ந்த புகை மண்டலம் எழுந்தது. நான் காயப்பட்டு வீழ்ந்து விட்டேன். கண்கள் இருட்டத் தொடங்கின. இரத்தம் கசிந்து கொண்டிருப்பதை என்னால் உணர முடிந்தது. நான் மீளமாட்டேன் என்று நினைத்தேன். என் காதுகளில் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. நண்பர்கள் எனக்கருகில் இருப்பது தெரிந்தது.

சற்று நேரத்தில் எல்லா உணர்வுகளையும் இழந்தேன். மயக்கம் தெளிந்து பார்த்தபோது வைத்தியர்கள் பரவலாக நின்றனர். ஆட்களின் நடமாட்டங்கள் அதிகமாக இருந்தன. எல்லாப் பக்கங்களிலும் வெளிச்சங்கள், பெரிய பெரிய கருவிகள். லைற் பற்றிப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. என் உடம்பு முழுவதும் வயர்கள், மனதுக்குள் ஒரே பயமாகத்தான் இருந்தது. ஆனால், இங்கே உயிருடன் இருப்பது அதிசயம். எந்த ஆஸ்பத்திரியில் இருக்கிறேன் என்பதுகூடத் தெரியவில்லை. இவ்வாறே சில நாட்கள் கழிந்தன. பின்பு அந்த அறையிலிருந்து இன்னொரு பகுதிக்கு மாற்றினார்கள். அப்போது தான் எனக்கு விளங்கியது நான் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இருக்கிறேன் என்று. என்னைப் பார்ப்பதற்கு எவருமே வரவில்லை. நான் பிறந்து வளர்ந்தது யாழ்ப்பாணம். 2006இல் வன்னிப்பகுதிக்கு வந்தேன். அங்கு ஒரு நிறுவனத்தில் வேலை செய்து வந்தேன். எனது ஒன்றுவிட்ட அக்காவும் அத்தானும் வன்னியில்தான் இருந்தார்கள். அவர்களுக்கும் நான் இருக்கும் நிலவரம் தெரியாது. இப்படியே சில நாட்கள் ஓடின.

ஒரு நாள் திடீரென ஆஸ்பத்திரியில் வேலை செய்பவர் வந்து, 'இனியவன்..., இனியவன்' இந்தப்பேரில் உள்ளவர்கள் யாராவது இருங்கிறீங்களா...?' என்று உரத்துக் கத்தினார். என்னால் உரத்துக் கதைக்க முடியாது. 'அந்தா... அந்தத் தம்பிதான்' என்று ஒருவர் சொல்ல, அவர் எனக்கருகில் வந்தார். தம்பி உங்களைப் பார்க்க வந்த ஆளை அனுப்பவா? என்று கேட்டார். நானும் யோசித்து விட்டு வரச்சொல்லுங்கோ என்றேன். என்னை இதுவரையில் எவரும் வந்து பார்க்கவில்லை. இப்பவாவது யாரோ ஒருவர் வந்திருக்கிறாரே! அதுபோதும். எனக்கும் என்னைத் தெரிந்தவர்களைப் பார்ப்பதற்கு ஆவலாகத்தானிருந்தது. ஆனால், என் நிலைமையும் பிரச்சினைக்குரியது. அவர் வந்து கேட்டதுக்கும் ஒரு முக்கிய காரணம் இருந்தது. எனக்கருகில் வைத்தியரைத் தவிர வேறு எவருமே வரமாட்டார்கள். அந்தளவுக்கு என் உடல் நிலைமை இருந்தது. எனது இடுப்புக்கு மேலேயும், கழுத்துக்குக் கீழேயும் யாருமே பார்க்க விரும்ப மாட்டார்கள். அந்த அளவுக்கு என் உடம்பு பிரித்து வேயப்பட்டு இருந்தது. எனக்கே என்னுடலைப் பார்க்கப் பிடிக்கவில்லை. துணியால் மூடி மறைத்து விடுவேன். யாரும் என்னைப் பார்ப்பதற்குப் பயப்படுவார்கள். அன்றும் அதைத்தான் செய்தேன். இருந்த துணியை எடுத்து மூடினேன்.

அன்று என் உள்ளம் அதிர்ச்சியையும் ஆனந்தத்தையும் கண்டது. வந்து என்முன் நின்றாள் ஆனந்தபுரத்தைச் சேர்ந்த அகல்யா. நான் சொல்வதற்கே வார்த்தைகள் இல்லை. அவள் என் நெருங்கிய நண்பன் ரகுவின் தங்கை. ரகுவின் வீட்டிற்கு இரண்டு, மூன்று தடவைகள் போயிருப்பேன். அவ்வளவுதான். எனக்கும் அவளுடன் பெரிதாகக் கதைத்தும் பழக்கமில்லை. என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். நானும் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் கண்கள் இரண்டும் கலங்கி இருந்தன. அவள் அழுதாள்.

''அகல்யா, ஏன் அழுகிறீங்கள். அழாதேங்கோ. எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை'' என்றேன். அவள் 'பிரச்சினை இல்லைத்தான்... ஒருக்கா... எனக்கு... சொல்லிவிட்டிருக்கலாம் தானே' என்றாள். அவள் கையில் கொண்டு வந்த பழப் பார்சலை வைத்துவிட்டு தனது கைப்பைக்குள் வைத்திருந்த பேப்பரை விரித்தாள். அதற்குள் இருந்த திருநீற்றை எடுத்து என் நெற்றியில் பூசினாள். பின்னர் எனது கையில் முதன்முதலாக கோயில் நூலைக் கட்டிவிட்டுச் சென்றாள்.

இப்படியே சில நாட்கள் கழிந்தன. எப்படியாவது வீட்டிற்குச் சமாளித்துப் பொய்சொல்லிவிட்டு வந்துவிடுவாள். அவள் என்னைப் பார்க்க வருவது வீட்டுக்காரருக்கும் தெரியவர அவளின் காலம்; நண்பன் ரகு காயப்பட்டு நானிருந்த ஆஸ்பத்திரிக்கே வந்து விட்டான். அகல்யாவும் அதைச்சாட்டாக வைத்து அண்ணனையும், என்னையும் பார்ப்பதற்குத் தினமும் வருவாள். அது வழமையாக நடந்து கொண்டிருந்தது.

அகல்யாவுக்கு என்னில் ஏதோ ஈர்ப்பு இருக்கு என்பது எனக்கு விளங்கியது. அதனால் எனக்கும் அவளில் ஏதோ ஒரு இனம்புரியாத அன்பு ஏற்பட்டது. ஆனால், நான் அதை காட்டிக் கொள்ளவில்லை. என் நிலைமை எனக்குப் புரிந்தது. நான் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பது அவளுக்கு விளங்காத விடயமுமில்லை. ஆனாலும் அவள் என்னில் அதிக அன்பு வைத்திருந்தாள். அகல்யா வந்தால் ரகு சொல்வான்; 'நீ வரத் தேவையில்லை. எங்களை இங்குள்ளவர்கள் பார்ப்பார்கள். நீ வீட்டில் நில்' என்பான். ஆனால் அவள் நிற்கவில்லை. என்னிடம் வருவதில் அவள் குறியாக இருந்திருக்க வேண்டும். அவள் தன் பணியைத் தொடர்ச்சியாக செய்து கொண்டிருந்தாள்.

அதிக நாட்களுக்குப் பிறகு என்னை இரண்டு இடியப்பம் சாப்பிடச் சொன்னார்கள். நானும் சாப்பிட்டேன். அன்று அவ்வளவு தான் வயிறு வீங்கி விட்டது. உடனே அவசர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு சென்று சிகிச்சை செய்தார்கள். இப்படிப் பல தடவைகள் நடந்தன. இதெல்லாம் அவளுக்குப் புரிந்திருந்தும், ஏனோ வருவதை அவள் நிறுத்தவில்லை. வரும் போது ஏதாவது ஒரு கோவிலுக்குப் போய் நூல் கொண்டு வந்து கட்டிவிடுவாள். நூல் கட்டிக்கட்டி முழங்கால் வரை நூல்கட்டு வந்து விட்டது. போதாதற்கு மறுகையிலும் கட்டிவிட்டாள், நான் என்ன செய்வது! ஒரு நாள் அகல்யா வந்தாள். அவள் அன்று மிகவும் அழகாக இருந்தாள். அவளது செயல்கள் எப்பொழுதும் குழந்தைத் தனமாகவே இருக்கும். எதையாவது கொஞ்சம் உரத்துக் கதைத்தால் அழத் தொடங்கி விடுவாள். அன்றும் அப்படித்தான் அவள் வந்து நிற்க நான் கேட்டேன். ''ஏன் வந்தனீங்கள் உங்களை வரவேண்டாம் என்றுதானே சொன்னனான்'' என்றேன். அவள் அழத் தொடங்கி விட்டாள். அருகில் இருப்பவர்கள் எல்லாரும் எம்மையே பார்த்தார்கள். அவள் எனக்கு அருகில் ஒரு கடிதத்தை வைத்துவிட்டு அழுதபடியே எதுவும் கதைக்காமல் போய்விட்டாள். நான் என்ன மனிதன்? எனக்கே என்னைப் பிடிக்கவில்லை. எனக்கருகில் இருந்த மகேந்திரன் ஐயா என்னைப்பார்த்துப் பேசினார். ''உன்னை இதுவரைக்கும் ஆர் வந்து பார்த்தார்கள். அந்தப்பிள்ளை உனக்காக எவ்வளவோ கஷ்டப்படு கிறாள். உன்னில் அப்படி என்னதான் இருக்கு. நீ செத்த பிணமாகக் கிடந்து கொண்டு கோபப்படக் கூடாது. அவளும் வராட்டி உன் நிலைமையை யோசித்துப் பார்''

எனக்கும் நான் பிழை செய்துவிட்டதாக ஒரு உணர்வு. கண்கள் கலங்கிய படியே அவள் தந்த கடிதத்தைப் பிரித்தேன். கடிதத்தைப் பார்க்கும் போது மங்கலாகவே என் கண்களுக்குத் தெரிந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு வாசிக்கத் தொடங்கினேன்.

*''அன்புடன் இனியவன் அண்ணா... அகல்யாவாகிய நான், என் மனதில் உள்ளதை உங்களுக்குத் தெரியப் படுத்த விரும்புகிறேன். நேரில் சொல்ல எனக்குத் தைரியம் இல்லை. எனக்குத் திருப்பி கதைக்கத் தெரியாது. அழத்தான் தெரியும். இன்னும் நீங்கள் என்னை ஏசுவீர்கள். நான் அழுவேன். அது தான் நடக்கும். எதுவுமே கதைக்காமல் அழுதுகொண்டே வந்துவிடுவேன். இதுதான் எனக்குத் தெரிந்தது''*

கடிதத்தை வாசிக்கத் தொடங்கும்போதே எனக்கு அழுகை வந்துவிட்டது. கண்களைத் துடைத்துக் கொண்டு வாசிக்கத் தொடங்கினேன்.

*''அண்ணா, நீங்கள் ஏன் என்னைக் காணும்போதெல்லாம் கோபப்படுறீங்கள். அதுக்கு ஏதும் காரணம் இருக்கா. நான் உங்களுக்கு ஏதாவது கூடாதவற்றைச் செய்தேனா? ஏன் என்னைக் கண்டதும் கோபிக்கிறீங்கள்?. அல்லது வேண்டுமென்றே கோபப்படுகிற மாதிரி நடிக்கிறீங்களா?''*



*அகல்யா, உனக்கு உண்மை விளங்கியிருக்கிறது. இது என் மனதுக்கு ஆறுதல் என்றி என் மனதுக்குள் நினைத்துக் கொண்டு கடிதத்தை வாசிக்கத் தொடங்கினேன்.*

*''நீங்கள் என்னை எப்போதும் பேசும் போது, நீங்கள் என்னில் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறீர்கள் என்றுதான் நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன்.''*

*அகல்யா, நீ என்னைச் சரியாகப் புரிஞ்சு வைச்சிருக்கிறாய் என்பது உண்மை என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டு தொடர்ந்தேன்.*

*''நான் உங்களைப் பார்க்க வருவது என் வீட்டக்காரருக்கும் தெரியும். அவர்களுக்கு நான் வருவது பிடிக்கவில்லைத்தான். ஆனால், என் மனதில் சரி என்று பட்டால் செய்வேன் அவ்வளவுதான். இதைப் பார்ப்பவர்களுக்குப் பிழையாகத் தெரியலாம். அதைப்பற்றிப் பிரச்சினையில்லை. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம். சொல்ல வெளிக்கிட்டால் சொல்லிக் கொண்டேயிருப்பேன். என்னை நீங்கள் இதுக்குப்பிறகும் பேசுவீங்களா? இல்லையா? இன்னுமொரு தட்வை அழுவேனா? அதெல்லாம் உங்களைப் பொறுத்தது. மறுநாள் உங்களை நேரில் சந்திப்பேன்.*

*இப்படிக்கு, அகல்யா.''*

(தொடரும்)

# குருவும் சீடனும்

ஹிந்திக் கதை



ஒரு கிராமத்திலே ஒரு துறவி இருந்தார். அவர் அதிகமாக இறை தியானத்திலேயே மூழ்கியிருப்பார்.

ஒரு நாள் அவர் தியானம் செய்வதற்காக அமர்ந்து கொண்டார். திடீரென அவருக்கோர் எண்ணம் வந்தது.- 'இறைவன் நியாயமானவனல்லன். உலகத்திலே பெரும் செல்வம் படைத்தவர்கள் பலருக்குப் பிள்ளைகள் இல்லை. பிள்ளைகள் அதிகமாக இருப்பவர்களுக்கு சாப்பிடக் கொடுக்க வழியில்லை.' இந்த எண்ணத்தால் அதன் பிறகு எவ்வளவு முயற்சி செய்தும் அவருடைய உள்ளம் தியானத்தில் லயிக்கவில்லை.

ஏதோ நினைத்தவராக, சமீபத்தில் இருந்த ஒரு கிராமத்தை நோக்கி நடக்கலானார்.

கிராமத்தை அடைந்தபோது ஒரு விவசாயி எதிர்ப்பட்டான். அன்றைய தினம் முழுக்க வேலையில் ஈடுபட்டிருந்ததால், அவன் களைத்துப் போயிருந்தான். விவசாயி ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குள்

''இதோ பார், நான் உன்னிடம் ஒரு விஷயம் பற்றிக் கேட்கப் போகிறேன். நீ கடவுளை நேர்மையானவன் என்று நினைக்கிறாயா?'' என்று துறவி கேட்டார்.

விவசாயி சொன்னான்: உங்களுக்கு இருப்பதைப் போன்ற ஞானம் எனக்கில்லை. இருந்தாலும், நீங்கள் கேட்டதற்காக மனதில் இருப்பதைச் சொல்கிறேன். இறைவன் நியாயமானவன் என்பதில் எனக்குச் சந்தேகம் இருக்கிறது. நீங்களே பாருங்கள். இந்த மழை காலத்தில் கூட பயிர்கள் காய்ந்து கருகிவிட்டன. ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லை. சில நாட்களுக்கு முன்னர் மலைப் பகுதியில் மழை பெய்ததாகத் தகவல் கிடைத்தது. வயல்களுக்கு நீர் தேவை. ஆனால், கடவுளுக்கோ இதைப்பற்றி எந்தச் சிந்தனையும் இல்லை.''

விவசாயி சொன்னதைக் கேட்டு, துறவி மனதிற்குள்ளாக மகிழ்ச்சி அடைந்தார். அவர் அங்கிருந்து வெளியேறினார்.

கிராமத்தை விட்டுச் சிறிது தூரமே சென்றிருப்பார், அதற்குள் ஒரு வாலிபன் எதிர்ப்பட்டான். ''துறவி அவர்களே! உங்களுக்கு ஆட்சேபனை இல்லாவிட்டால் என்னை உங்களோடு வைத்திருங்கள். என்னுடைய வாழ்க்கை சீரடையும்'' என்று அந்த வாலிபன் சொன்னான். அதற்கு இணங்கிய துறவி அவனைத் தன்னோடு கூட்டிச் சென்றார்.

இப்போது அவர்கள் வேறொரு கிராமத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது இரவாகிக் கொண்டு வந்தது. இனி தொடர்ந்து செல்ல முடியாது என்று அவர்கள் நினைத்தனர். அன்றைய இரவை அங்கே கழிப்பதாக அவர்கள் தீர்மானித்துக் கொண்டனர். இருவரும் பணக்காரன் ஒருவனின் வீட்டுக்குச் சென்றனர்.

பணக்காரன் நல்ல கனவானாக இருந்தார். இருவரையும் நன்கு வரவேற்று ஆதரித்தார் அவர். வேள்ளிப் பீங்கானில் அவர்களுக்கு உணவு பரிமாறினார். தங்கக் கிண்ணத்தில் தண்ணீர் கொடுத்தார்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் துறவி, சீடனுடன் கிராமத்தை விட்டுச் சென்றார்.

கிராமத்திலிருந்து வெகு தூரம் சென்ற பிறகு சீடன் தன்னுடைய பையில் இருந்து தங்கக் கிண்ணத்தை எடுத்து துறவிக்குக் காட்டினான். பணக்காரன் அவர்களுக்கு நீர் அருந்துவதற்காகக் கொடுத்த அதே கிண்ணம் தான் அது. சீடன் செய்த துர்ச்செயலால் அவருக்கு வருத்தமாக இருந்தது. ஆனால், இப்போது என்ன செய்வது?

இன்னுமொரு கிராமத்தை வந்தடைந்தார்கள். மாலை நேரம். அவர்கள் ஒரு வியாபாரியின் வீட்டுக்கு முன்னால் போய் நின்றனர்.

அந்த வியாபாரியோ மகா கஞ்சன். ஏழைகளுக்கு அவன் அன்னதானம் எதுவும் கொடுக்காதவன். இருவரும் அவனுடைய வீட்டில் ஓய்வுகொள்ள வேண்டுமெனக் கதைத்துக் கொண்டிருந்த போது, வியாபாரியோ உடனே மறுத்துவிட்டான். அப்போது துறவி, ''எங்களுக்கு நீ எதுவும் தர வேண்டியதில்லை. நாங்கள் சாப்பிட்டுவிட்டுத்தான் வருகிறோம். இரவிலே ஓய்வெடுத்துவிட்டு அதிகாலையிலே போய்விடுவோம்'' என்று கூறினார்.

கருமி வேண்டா வெறுப்போடு சரி என்று சொன்னான்.

அங்கிருந்து செல்லும் போது சீடன் தங்கக் கிண்ணத்தை வியாபாரியின் வீட்டிலே மறைத்து வைத்துவிட்டு வந்தான்.

அவர்கள் போனபிறகு கருமி தங்கக் கிண்ணத்தைக் கண்டான். அவனுக்கு ஒரே பிரமிப்பாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. கிண்ணத்தைக் கையில் எடுத்தபடி, 'அவர்களுக்கு அன்னதானம் அளிப்பதிலிருந்து தவிர்ந்து கொண்டுவிட்டேனே. துறவி ஓர் இரவு தங்கியதால் இவ்வளவு பெருஞ் செல்வம் கிடைத்தது! ஏழைகள், அனாதைகளுக்கு உதவி செய்தால் தான் என்ன வந்துவிடப் போகிறது?' என்று அவன் யோசித்தான்.


தங்கக் கிண்ணத்தை மறந்துவிட்ட விஷயம் துறவிக்குத் தெரியவந்தபோது, சீடனைத் திட்டித் தீர்த்தார்.

அதன் பிறகு இருவரும் நடந்து ஆற்றங்கரையை அடைந்தனர். அப்போது ஒரு செல்வந்தன் அங்கே நீராட வந்திருந்தான். துறவியைக் கண்ட அவன் தன்னுடைய வேலைக்காரனிடம் அவரை அழைத்து வருமாறு பணித்தான். வேலைக்காரன் வந்து துறவியை அழைத்தபோது, சீடன் உடனே அவனுடைய கழுத்தைப் பிடித்து, ஓடிக் கொண்டிருந்த ஆற்றிலே தள்ளிவிட்டான்.

துறவிக்குத் தன்னுடைய சீடனுடைய நடவடிக்கை நல்லதாகப் படவில்லை. உடனே அவனை விரட்டிவிட்டார் துறவி. சீடன் அவருடைய பார்வையிலிருந்து மறைந்ததும், அந்த இடத்திலே ஒரு புனிதர் இருப்பதை அவர் கண்டார்.

''நீர் இறைவனுடைய நீதி நியாயத்திலே ஏன் சந்தேகம் கொள்கிறீர்?'' உம்முடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காகத்தான் இறைவன் அந்த இளைஞனை உம்மோடு அனுப்பிவைத்தார். அவன் என்னென்ன செய்தானோ, அவற்றின் மர்மங்களை நான் தெளிவுபடுத்துகிறேன்..தங்கக் கிண்ணத்திலே தண்ணீர் தந்த பணக்காரன்

(21ஆம் பக்கம் பார்க்க)








# மந்திரத்தீவ மந்தாகினி

அவன் நீண்ட பெருமூச்சொன்றை பதிலளித்து விட்டு, நடந்து கொண்டேயிருந்தான்.

''பாத்திமா, கோபி,மேரி... அந்த பெண்கள் நமது நண்பர்களை நீராட்டப் போறாங்க...இதுதான் சந்தர்ப்பம்... குளிச்சு முடியுறதுக்கு முன்னாடி நம்ம நண்பர்களை இவங்க கிட்டேயிருந்து காப்பாத்தியே ஆகணும்... அதனால மூணுபேரும் கிட்டவாங்க...'' மூவரையும் அருகில் அழைத்து இரகசியமாய்க் கூறினான் அன்ரனி.

''வீட்டிலியிருந்து கொண்டு வந்த மிளகாய்ப் பொடிகளை ஒவ்வொருத்தரும் ரெடியா வச்சிருங்க... சரீன்னு சொன்னதும்... அந்த் பொம்பளைங்களின் கண்ணில திமீர்னு கொட்டணும்... அவங்க சடுதியாக நடந்த தாக்குதலில் திணறிடுவாங்க... இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி... நாங்க நண்பர்களை கூட்டிக்கொண்டு ஓடிவிடலாம்... சரியா?'' அன்ரனி திட்டங்களை கூறினான். ''சரிடா அன்ரனி! ஆனால்... அந்த ராட்சசிகள் ஆயுதங்கள் ஏதாவது வச்சிருந்தால் நாம என்ன பண்ணுறது...?'' பாத்திமாவின் கையை பிடித்துக் கொண்டு மேரி கேட்டாள். ''மேரி! அவங்க கிட்ட ஆயுதம் எதுவுமே இல்லை... தீப்பந்தம் மட்டும் தான் வெச்சிருக்காங்க... நீ வீணாக பயப்படாதே...'' இவ்வாறு கோபி சொல்ல, மேரி மௌனமானாள்.

அதன் பின்னர் மீண்டும் அதே பாதையால் நால்வரும் நடந்து கடற்கரையை அண்மித்தார்கள். அங்கே...

மாருதியும் குலோதரியும் சிறுவர்களின் கைக்கட்டையும் வாய்கக்கட்டுக்களையும் அவிழ்த்து விட்டிருந்தனர். சிறுவர்கள் ஐவரும் கண்ணீர் சிந்தி அழத் தொடங்கினார்கள். ''ஏய் பசங்களா! என்ன அழுகை..? அழுதீங்கன்னா வாயிலே சூடு வைப்பேன்... மாருதி.. இவங்களை குளிக்க நீருக்குள்ள இறக்கு...'' என மாருதியை பணித்தாள் குலோதரி.

நடக்கின்ற நிகழ்வுகளை தாழைமரங்களின் பின்னால் நின்று கவனித்துக் கொண்டிருந்த அன்ரனியும் சகாக்களும், இதுதான் சரியான நேரம் என ஊகித்தனர். ''கோபி! நீ போய் நம்ம படகை தயாரா வைத்திரு..'' அன்ரனி அவசரப்படுத்தினான். ''கோபி.. நீ போய் சரின்னு..கையை காட்டினால் நாங்க.. அங்கே போவோம்... சரியா..'' பாத்திமாவின் வார்த்தைகளுக்கு, கோபி தலையசைத்து விட்டுப் புறப்பட்டுப் போனான். மூவரும் மிளகாய்ப் பொடிகளை கைகளிலே எடுத்து தயார் நிலையில் வைத்திருக்க, கோபி படகடியில் நின்று கையசைத்தான்.

தழைமரங்களின் பின்னால் நின்ற மூவரும், திடீரெனப் பாய்ந்து வெளியே வந்தார்கள். மறுபுறம் பார்த்துக் கொண்டிருந்த மாருதியும் குலோதரியும் அரவம் கேட்டுத் திரும்ப, இவர்களின் கண்களில் மிளகாய்ப் பொடியை தூவினார்கள். ''ஆ..ஐயோ!'' வென இருவரும் கதற, ''சீக்கிரம்.. அதோ அந்த படகடிக்கு ஓடுங்கள்...'' என்று அன்ரனி குரல் கொடுக்க,வில்லில் இருந்து புறப்பட்ட அம்பென, சிறுவர்கள் படகை நோக்கி ஓடினார்கள். பின்னாலே அன்ரனி, மேரி, பாத்திமா மூவரும் விரைந்தார்கள். குலோதரியும் மாருதியும் கண் எரிச்சல் தாங்க முடியாமல் அலறிக் கொண்டு கடலிலே ஓடிப்போய் வீழ்ந்தார்கள். ஏற்கனவே தயாராய் வைத்திருந்த படகில் சிறுவர்கள் ஏறிக்கொள்ள; அன்ரனியும் கோபியும் துடுப்பு வலிக்கத் தொடங்கினர். படகு ஒன்பது பேரையும் சுமந்து கொண்டு பெருமிதத்தோடு மிதந்து சென்று கொண்டிருந்தது. கடற்கரையில் நிகழ்ந்த சம்பவங்கள் தெரியாமல், மந்தாகினியும் அவளது தோழிகளும் தம்மை அலங்கரிப்பதிலும் , பூஜைக்கு பொருட்களை ஒழுங்குபடுத்துவதிலும் மும்முரமாக ஈடுப்பட்டுக் கொண்டிருந்தனர்:


அப்போது, வானிலே வெண்ணிலா மிதக்கத் தொடங்கியிருந்தாள். இந்த மழலைகளின் வெற்றிக்கு வாழ்த்துவதைப் போல வெண்ணிலா ஜொலித்தது. தப்பித்த சிறுவர்கள் சந்தோசத்தால் அழத் தொடங்கினார்கள்.

''ஹோய்... நீங்க அழக்கூடாது... உங்களுக்கு ஒண்ணுமே இல்லை.. மந்தாகினியின் அத்தியாயம் நாளையோடு முடிந்து விடும்...'' பாத்திமா அவர்களுக்கு தைரியமூட்டினாள்.

''நாங்க அப்பா அம்மாவை ஏமாத்தி வந்தது தவறுதான்.. ஆனால் உங்களை காப்பாற்ற வேற வழி தெரியலை...'' அன்ரனி உருக்கமாகக் கூறினான்.

தூரத்தே, இவர்களின் பிறந்த மண்ணான குறிஞ்சித் தீவு நெருங்கிக் கொண்டிருந்தது. ஊருக்குப் போய் மந்தாகினியின் வெறித்தனத்தை சொல்லி, நாளைக்கே அவளின் கொலைவெறியை அடக்குவது என, திட்டம் தீட்டினார்கள்.

**முற்றிற்று**



**-இராமசாமி ரமேஷ்-**

## இளஞ்சுடர்

தயாரிப்பு : தினா



நேர்முக பரீட்சை நடக்கும் அலுவலகத்தைக் கண்டுபிடிக்க முடியாமல். திணறும் அவருக்கு நீங்களாவது சரியான வழி காண்பிக்கக் கூடாதா?

## வர்ணம் தீட்டுங்கள்





ஆஸ்திரேலியாவின் தேசிய ஊர்வன கண்காட்சியகத்தில் 'சிலந்தியின் நெருப்பு' என்ற கொடூரமான விஷத்தை கொண்ட அதிசய சிலந்தி பூச்சி ஒன்று உள்ளது. இது இங்கே இனப்பெருக்கம் செய்கிறது. இதன் விஷத்தை பாம்புக்கடி விஷத்திற்கும் ஏனைய விஷ தன்மைகளுக்கும் மாற்று மருந்தாக பயன்படுத்துகின்றனர். உலகில் வைரத்தைவிட விலை உயர்ந்தது இதன் விஷம். இப்படத்தில் சோதனைக்குழாயின் மூலம் விஷத்தை எடுப்பதைக் காணலாம்.

### பொன்மொழிகள்

வெற்றி என்பது தோல்வியின் முயற்சி;
தோல்வி என்பது வெற்றியின் தளர்ச்சி.

*****

தோல்வி என்பது இல்லாவிட்டால் வெற்றி என்ற பதத்துக்கும் பொருள் கிடையாது.

## குருவும் சீடனும்

(20ஆம் பக்க தொடர்ச்சி...)

தன்னுடைய கிண்ணத்தின் மீது கர்வம் கொண்டவனாக இருந்தான். கிண்ணம் மறைந்து போனதால், தன்னுடைய கர்வத்தை இல்லாமற் செய்யவே கடவுள் அப்படிச் செய்தார் எனப் புரிந்து கொண்டான். இந்தச் சம்பவத்துக்குப்பிறகு அவன் இறைவனின் கட்டளைப்படி நடந்துகொள்ளத் தீர்மானித்தான்.

பின்னர் எந்தக் கஞ்சனிடம் தங்கக் கிண்ணத்தை மறந்துவிட்டு வந்தானோ, அவன் ஏழைகளுக்கு உதவி செய்வதில் எத்தகைய நம்பிக்கையும் இல்லாதவன். ஆனால், கிண்ணம் கிடைத்ததிலிருந்து அவனுடைய வாழ்க்கை திசை திரும்பிற்று. ஏழைகளுக்கு அன்னமளிப்பதன் மகத்துவத்தை அவன் விளங்கிக் கொண்டான். அன்றிலிருந்து ஏழைகளுக்குத் தானம் செய்வதில் தன்னுடைய செல்வங்களைச் செலவிட்டு வருகின்றான்.

ஆற்றிலே தள்ளப்பட்ட வேலைக்காரனின் விஷயம் அடுத்தது. அவன் மகா துஷ்டன். அவன் தன்னுடைய எஜமானனுடைய பணத்தை இரகசியமாகத் திருடி வந்தான். எனவே, அவனுடைய துர்ச்செயல்களுக்குரிய தண்டனை அவனுக்குக் கிடைத்தது. கடவுளுடைய நீதி.நியாயத்தின் இரகசியத்தை இப்போதாவது விளங்கிக் கொள்ளும்.

உண்மை. இறைவனுடைய நீதி நியாயத்தை விளங்கிக்கொள்ளக்கூடிய அளவுக்கு மனிதனுக்கு எங்கே ஞானம் இருக்கிறது! என்று சொல்லியவாறு துறவி தன்னுடைய பழைய இருப்பிடத்தை நோக்கித் திரும்பிச் செல்லலானார்.

***




முள்ளிவாய்க்கால்வரை தாம் பட்ட துன்பங்களையும், அதனுடன் முடிவுறாது தொடர்கின்ற முள்ளுக்கம்பிக் கூண்டுச் சுமைகளையும் மனதில் சுமந்தபடி பல லட்சம் பேர் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு கதைகள் பொதிந்துள்ளன. அதை வெளிக்கொண்டுவர எல்லோராலும் முடிவதில்லை. இதனால் அவர்களது துன்பங்கள் அவர்களுக்குள்ளேயே மீண்டும் உறங்கிப் போகின்றன. இவற்றை வெளிக்கொணர வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டதுதான் 'முள்ளிவாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும்'. ஈழத் தமிழரின் வரலாற்றில் வேதனைகள், சோகங்கள், மரணங்கள், பிரிவுகள் நிறைந்த வன்னி மக்களின் நெருப்பாற்றுப் பயணம் வரலாற்றுப் பதிவுகளில் கறைபடிந்த அத்தியாயமாகிவிட்டது.

**நான்காவது கூடாரத்தின் கதை**

மூன்று குழந்தைகளுடன் தகப்பன் தனியே கஷ்டப்படுகிறார். மூத்த ஆண்பிள்ளையின் வயது 7, அடுத்த பெண்குழந்தையின் வயது 4, மூன்றாவது பெண்குழந்தையின் வயது 4 மாதம். இவ்வாறான வயது நிலையினர்களை வளர்த்தெடுப்பதில் பெற்றோர் படும் கஷ்டம் எவ்வளவு என்பதை எல்லாப் பெற்றோரும் அறிவர். இருந்தாலும் அதில் ஒரு சுகம் இருக்கிறது. அதனால் அதை ஒரு சுமையாக எந்தப் பெற்றோரும் கருதுவதில்லை.

ஆனால் இங்கு தாய்ப்பால் குடித்து தாயின் அரவணைப்பில் வளர வேண்டிய குழந்தைக்குத் தாய் இல்லை. தலைசீவிப் புத்தாடை அணிந்து பாடசாலைக்கு அனுப்பி வைப்பதில் அழகு காண்பதற்கும் தாய் இல்லை. தனது கணவனையும் ஒரு குழந்தையாகப் பார்த்து குடும்பத் தலைவியாக இருந்த அந்தத் தாய் முள்ளிவாய்க்காலில் இறந்துவிட்டார்.

மாத்தளன் வைத்தியசாலையில் தான் அந்தத் தாய் அப்பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். குழந்தையைப் பெற்றதிலிருந்து பாலூட்டும் தாய்க்கான போஷாக்கு உணவு இல்லை. சுவாத்தியமான இருப்பிட வசதி இல்லை. தொடர்ச்சியான பங்கர் வாழ்க்கை. இவ்வாறான சூழலிலும் தாயாக இருந்து எல்லா வேலைகளையும் கணவன் தான் பார்த்து வந்தார். இப்படித்தான் நல்ல பாசப்பிணைப்புடன் அந்தக் குடும்பம் வாழ்ந்து வந்தது. திடீரெனப் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் எல்லோரையும் பாதித்தது. குடியிருக்கப் பொருத்தமற்ற சூழலாகக் கூடாரங்கள் மாறின. தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் இவையெல்லாம் அந்தத் தாயாரை மேலும் சோர்வடையச் செய்கிறது.

தொடர்ந்தும் முள்ளிவாய்க்காலை நோக்கி இடம்பெயர்ந்து இராணுவப் பிடிக்குள் உட்படுகிறார்கள். மக்கள் வெள்ளம் அலை மோதுகிறது. பலர் இராணுவ பஸ்களில் ஏறுகிறார்கள். ஓய்வாக ஓரிடத்திலிருந்த அந்தத் தாய் நிரந்தரமாகவே ஓய்வு எடுத்துவிட்டார்.

அழுதழுது உயிரற்ற உடலையும் சுமந்தபடி கொஞ்சத் தூரம் வந்தார்கள். நீங்கள் இந்தப் பேருந்தில் போங்கள் - இறந்த உடல் அடுத்த பேருந்தில் உங்களைத் தொடர்ந்து வரும் என இராணுவத்தினரால் கூறப்பட்டது. இவர்கள் இங்கு வந்துவிட்டனர். ஆனால் தாயாரின் உடல் இன்னும் வரவேயில்லை. மூன்று பிள்ளைகளோடு அதிலும் பால் கேட்டு அழும் கைக்குழந்தையோடு தனக்குள் அழுதுகொண்டிருக்கும் அந்தத் தகப்பனின் துயரை யார் போக்குவார்?

யாழ்ப்பாணம், நல்லூரில் நல்ல வசதியான குடும்பத்தில் மூத்த மகனாகப் பிறந்து சந்தோசமாக வாழ்ந்துவந்த நிலையில் சமாதான காலத்தில் தற்காலிகமாக முல்லைத்தீவு, வற்றாப்பளையில் வாழ்ந்து வந்தபோது ஏற்பட்ட இடம்பெயர்வு இவரை நிரந்தரமாகவே பிரித்துவிட்டது. இவருடைய பெற்றோர் யாழ்ப்பாணத்திலிருந்து கப்பல் ஊடாகத் திருமலை வந்து அங்கிருந்து வவுனியா மெனிக்பாம் சென்று ஓரமாக நின்று தன் பிள்ளையின்

**-டொமினிக்-**

வரவைப் பார்த்துக் கொண்டிருந்தபோது தான் இச்செய்தி அவர்கள் காதை எட்டியதும் புழுவாகத் துடித்தார்கள் - அழுதார்கள். பிள்ளையின் உடலையும் பார்க்க அந்த நல்லூர் முருகன் வழிவகுக்கவில்லையே என்ற கவலையோடு வீடு சென்றார்கள்.

இப்படித்தான் இங்குள்ள பல்லாயிரம் கூடாரங்களும் பல ஆயிரம் கதைகளைக் கொண்டிருக்கின்றன.

நான்கு கூடாரங்களின் கதைகளோடு கனத்துப் போன இதயத்துடன் எனது கூடாரம் நோக்கிப் பயணிக்கும் போதும் ஒரு சம்பவம்.

**தடுப்பு முகாமில் உள்ளவர்களை சந்தித்தல்**

தமிழீழவிடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் என்று 15000ற்கும் மேற்பட்டவர்கள் தடுப்பு முகாமில் இருப்பது எல்லோரும் அறிந்த விடயம் தான்.

இவ்வாறு இருப்பவர்களை பெற்றோர், உறவினர்கள் சென்று பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. அதற்கு அமைய பலர் தங்களுடைய கூடாரங்களிலிருந்து முகாமின் நுழைவாயில் நோக்கி நகர்கிறார்கள். குடும்பமாக சென்று பார்க்க முடியவில்லையே என்ற கவலை அவர்கள் முகங்களில் தெரிந்தபோதும் ஒருவர் பார்ப்பதற்காவது சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு சந்தோஷத்துடன் ஒருவர் பின் ஒருவராக ஓட்டமும் நடையுமாகப் போவதைக் காணமுடிந்தது. இவ்வாறு சென்றவர்கள் பலர் சில நிமிட இடைவெளியின் பின் திரும்பினார். இப்படித் திரும்பி வந்த தாய் ஒருவரிடம் வினவிய போது இவர் கூறினார்.

தம்பி நேற்று மாலைதான் ஒலிபெருக்கியில் அறிவித்தார்கள்; இன்று காலை பேருந்து புறப்படும் - அதில் சென்று தடுப்பில் உள்ள உங்கள் உறவுகளைப் பார்க்கலாம் என்று குடும்பத்தில் ஒருவரை வரும்படியும் கூறினார்கள். அதற்கமைய என் பிள்ளைக்கு ஏதாவது சாப்பாடு செய்து கொண்டு போக வேண்டுமென்ற ஆசை. ஆனால் என்னிடம் 10 ரூபாவுக்கு வழியில்லாத நிலை. சொந்த ஊரில் எவ்வளவு வசதியாக இருந்த நாங்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டு இப்போ ஒரு வருமானமும் இல்லாத நிலையில் அவர்கள் தரும் உணவைச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறோம்.

மகன் கடிதம் போட்டிருந்தான். அதில் "அம்மா நீங்கள் என்னைப் பார்க்க வரும்போது இறைச்சிச் சாப்பாடு கொண்டுவாருங்கள். வேறு ஒன்றும் எனக்கு வேண்டாம். உங்களுடைய கையில் காசு இருக்காது என்று எனக்குத் தெரியும் - அப்பாவும் இல்லாத நிலையில் ஒரு தம்பியுடனும் இரண்டு தங்கைகளுடனும் சரியாகக் கஷ்டப்படுவீர்களென்பதை அறிவேன். எனவே எனக்காக யாரிடமும் கடன்பட்டு எதையும் வாங்கிவர முயற்சிக்க வேண்டாம்" என எழுதியிருந்தான். இறைச்சிச் சாப்பாடு கூட எனது கையால் செய்து கொண்டுபோய் ஊட்ட முடியாத நிலையில் என்னுடைய வாழ்க்கை..... கருவாட்டுக் கறி வைத்து இரண்டு முட்டையும் அவித்து சோற்றுப் பார்சல் ஒன்றைத் தான் கொண்டு போக என்னால் முடிந்தது. மகனைப் பார்க்கப் போகிறேன் என்ற சந்தோஷத்தில் இரவு நித்திரையே இல்லை. மூன்று மணிக்கே எல்லோரும் எழுந்து சமைத்து அந்த உணவைக் கட்டிக்கொண்டு இங்கு வந்தால் எங்களை இன்று கூட்டிக் கொண்டு போக முடியாதாம். பின்னர் அறியத் தருவினமாம் என்று சொல்கிறார்கள். பிள்ளைக்கென்று சமைத்த உணவையும் கொடுக்க முடியாத நிலையில் திரும்பக் கூடாரத்துக்குப் போகிறேன். அடுத்தமுறை கூப்பிடும்போது இந்த கருவாட்டுக்கும் வழியிருக்குதோ? அங்கேயே எல்லோரும் செத்திருக்கலாம் என்றவாறு அந்தத் தாய் நகருகிறாள்...

சற்றுத் தூரத்தில் சென்றுகொண்டிருந்த போது இன்னுமொரு தாயின் கைக்கு அந்த பார்சல் மாறுவதைக் கண்டேன்.

குறித்த சில முகாம்களில் பெயரைச் சொல்லி அதில் தடுத்து வைக்கப்பட்டுள்ள உறவுகளைச் சந்திப்பதற்கு இன்னும் அரை மணி நேரத்தில் பேருந்து புறப்படத் தயாராக இருக்கிறது என்ற அறிவித்தல் விடப்பட்டதனை அடுத்து வெறுங்கையுடன் தனது பிள்ளையைப் பார்க்க வந்த அந்தத் தாய்க்கு இந்தத் தாய் கொடுத்த பார்சல் தான் அது. என் பிள்ளைதான் சாப்பிடாவிட்டாலும் வேறு பிள்ளையாவது சாப்பிட்டும் - சாப்பிடுமென்ற நினைவோடு அந்தத் தாய் கூடாரத்தை அடைந்திருப்பாளென எனக்குள் நினைத்துக் கொண்டேன்.

**பலர் பார்த்திருக்க வீதியோரத்தில் குளிப்போம், உடுப்பு மாற்றுவோம்**



இப்படித்தான் ஒவ்வொரு உறவுகளதும் சந்திப்புக்கள் தொடர்கின்றன.

இவ்வாறான சம்பவங்களை உள்வாங்கியபடி பல கஷ்டங்களோடு ஒவ்வொரு நாட்களாக கடந்து இப்போது 100 நாட்களையும் தாண்டி நிற்கிறோம்.

சர்வதேசத்தின் அழுத்தத்தைத் தொடர்ந்து தற்போது கொஞ்சம் கொஞ்சமாக எங்களைத் தேடி சில வசதி வாய்ப்புக்கள் வருவதனை உணர்கிறோம்.

(அவலங்கள் தொடரும்)

# மன அழுத்தம், அடிமைக்குணம் ஏற்படுத்தும் இணையத்தளம்



**கேள்வி:** ஆண் வயது 61. கடந்த பத்து வருடங்களாக நீரிழிவு நோயினால் கஷ்டப்படுகின்றேன். இப்பொழுது - நீரிழிவுடன், அதிஉயர் இரத்த அழுத்த நோய், மற்றது ஆஸ்துமா வியாதியும் சேர்ந்துள்ளது. கடந்த சில மாதங்களாக பகலில் பாதங்கள் வீங்குகின்றன. இரவில் படுத்து தூங்கி எழுந்தால் கால்பாதங்களில் உள்ள வீக்கம் வடிந்துவிடுகிறது. சமீபத்தில் வைத்தியர் ஆலோசனைப்பிரகாரம் சிறுநீர்ப் பரிசோதனை செய்து பார்த்தபோது சிறுநீரில் புரதம் இருப்பதாக தெரிய வந்தது. ஆனால், வைத்தியரோ இது பற்றி பயப்படத்தேவையில்லை என்று கூறினார். மருந்துகள் தந்தார். இது பற்றி விளக்கம் தர முடியுமா?

**பதில்:** நீரிழிவு நோயை-மருத்துவ உலகில் நோய்களின் 'இராணி' (QUEEN OF DISEASES) என்று அழைப்பார்கள். அதாவது நீரிழிவு நோய் உடலின் பல உறுப்புகளை பாதிக்கும் தன்மையது. அத்துடன் இரத்த அழுத்தமும் ஆஸ்துமா என்கின்ற மூச்சிரைப்பும் இத்துடன் கூட்டு சேர்ந்தால் சொல்லவும் வேண்டுமா? நீரிழிவுநோயும் இரத்த அழுத்தமும்-சிறுநீரகத்தை பாதிக்கின்றன. சிறுநீரகத்தின் வடிகட்டும் பண்பைப் பாதிக்கின்றன. உறுப்புகளின் இயக்கத்தில் வெளியாகின்ற அசுத்தங்களை, கழிவுகளை-உதாரணமாக யூரியா, கிரீயட்டினின் (CREATININE) போன்ற பொருட்களை, இரத்தத்திலிருந்து வடிகட்டப் பெற்று வெளியேற்றுவது சிறுநீரகத்தின் செயற்பாடுகளில் ஒன்று. மேலும் நாம் அருந்தும் நீரின் நமது தேவைக்கு அதிகமான பகுதியை வெளியேற்றுவதும் சிறுநீரகம் தான். அதுமட்டுமல்ல உடலியக்கத்தில் நமக்கு தேவையான புதரச்சத்து, மற்றும் கனிப்பொருட்களை வடிகட்டினாலும், அவை வெளியேறாமல் திரும்பவும் உறிஞ்சி எடுத்து உடலுக்குள் சேமித்து வைப்பதும் சிறுநீரகத்தின் தொழில்களில் ஒன்று. ஆனால், நீரிழிவு-இரத்த அழுத்தம் காரணமாக இந்த தொழில் பண்புகளை சிறுநீரகம் இழக்க நேரிடுகிறது. அப்படி இழக்கும் போது உங்களுக்கு எற்படுவது போல் சிறுநீரில் புரதம் வெளியேறலாம். இதனை MICRO ALBUMIN UREA என்பார்கள். ஒருவிதத்தில் இந்த நோய்க்குறி - சிறுநீரகம் செயலிழக்க ஆரம்பமாகின்றது என்பதை வைத்தியருக்கு தெரிவிக்கும் அபாய அறிவிப்பு என்று கூடச்சொல்லலாம். எனவே இதற்கு உடனடியாக சிகிச்சை ஆரம்பிப்பது விரும்பத்தக்கது. இன்று இதற்குரிய மருந்து மாத்திரைகள் நிறையக் கிடைக்கின்றன. எனவே காலம் தாழ்த்தாமல்-NEPHROLOGIST எனப்படும்- சிறுநீரக விசேட வைத்திய நிபுணரின் ஆலோசனை பெறவும்.

கால்வீக்கம் என்பது சிறுநீரககோளாறின் அறிகுறியாக கருதப்பட்டாலும், கால்வீக்கம் VARICOSE VEINS என்கின்ற இரத்த நாளக் கோளாறினால் தான் உங்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். கால்களில் உள்ள இரத்த நாளங்களில் காணப்படும். VALVES களின் பாதிப்பால்-இரத்த ஓட்டம் சீராக நடைபெறாததால் இந்த வீக்கம் ஏற்படுகிறது. இதனால்தான் பகலில் நாம் நடந்து, நின்று தொழில்படும் போது-காலுக்கு வருகின்ற இரத்தம் திரும்பவும் மேலே செலுத்தப்படாததால் தேங்கி பாதங்களில் வீக்கம் ஏற்படுகிறது. ஆனால், நாம் கிடையாக இரவில் தூங்கும் போது, தேங்கி நிற்கும் இரத்தம் மேலே செலுத்தப்படுவதால்-காலையில் இந்த வீக்கம் வடிந்துவிடுகிறது. இதனை DOPPLER SCAN பரிசோதனை மூலம் கண்டறியலாம். இன்று VASCULAR SURGEONS என்று இதற்கு தனி ஒரு வைத்திய நிபுணர்கள் உள்ளார்கள். அவர்களின் ஆலோசனை பெறுவதும் உங்கள் விஷயத்தில் அவசியம் என்பது எனது கருத்து.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு - 14.

**கேள்வி:** ஆண், வயது 28. சர்வதேச நிறுவனம் ஒன்றில் சந்தைப்படுத்தும் முனைவராக இருக்கின்றேன். மாதத்திற்கு மூன்று தடவைகளாவது எனது தொழில் நிமித்தம் அடிக்கடி அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு விமானப்பயணம் செய்வேன். எனது பிரச்சினை என்னவென்றால் - விமானப் பயணத்தின் பின்னர் ஏற்படும் சோர்வு, தூக்கக்குணம் என்பவற்றால் குறைந்தது இரண்டு நாட்களுக்கு எனது திறமை, ஊக்கம், தூக்கம் என்பவை குறைந்துவிடுகின்றன. பொதுவாகவே நீண்டதூர விமானப் பயணத்தின் பின்னர் இப்படி நடப்பது சகஜம் என்பதை அறிவேன். ஆனால் விரைவாக இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபட மருந்து மாத்திரைகள் உள்ளதா என்பதை அறிய விழைகின்றேன்.

**பதில்:** நீண்டதூர விமானப் பயணங்களின் பின்னர் ஏற்படும் இந்த அயர்வை JETLAG என்று குறிப்பிடுவார்கள். நாடுகள் கண்டங்கள் என்பன - TIME ZONES எனப்படும் நேரவலயத்தால் பிரிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக- பிரிட்டனுக்கும் எங்களுக்கும் உள்ள காலவித்தியாசம் $5\frac{1}{2}$ மணி நேரம் என்று குறிப்பிடும் போது - $5\frac{1}{2}$ மணிநேர வலயங்களால் நாம் விலகியிருக்கின்றோம் என்பதையே அது கருதுகிறது. விமானப் பயணங்களின் போது இப்படி பல நேர வலயங்களை குறுகிய நேரத்தில் பறந்து கடக்கின்றோம். இவை- எமது உடலில் நடந்து கொண்டிருக்கின்ற CIRCADIAN RHYTHM என்கின்ற - பல உடலியல் வட்டங்களில் (BIOLOGICAL CYCLES) மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இந்த உடலியல் வட்டங்களின் பலனாகத்தான் - சரியாகக் காலையில் எழுந்திருக்கின்றோம், இரவானதும் தூக்கம் வருகிறது. மதியம் 12 மணி என்றதும் பசிக்கின்றது. ஆனால் எமது நேரவலயத்தை விட்டு குறுகிய நேரத்தில் 5 நேரவலயங்களை கடந்து சென்று இறங்கினாலும், எமது நேரத்திற்கு சரியாக கண்விழித்தல், பசி, தூக்கம் ஏற்பட்டுவிடும். இதனால் நாம் இறங்கிய இடத்தில் அனுசரிக்க முடியாமல் கஷ்டப்படுவோம். இதே போல திரும்பி எமது நாட்டுக்கு வரும் போது - அவர்களின் நேரத்திற்கு பழக்கப்பட்டு வழக்கப்படுத்திக் கொள்வதால் - இங்கு வந்து குறைந்தது ஓரிரு நாட்களுக்கு போன இடத்து நேரத்துக்கு தூக்கம் வந்துவிடும். இதனைத்தான் JETLAG என்பார்கள். இப்படி அடிக்கடி பறந்துதிரியும் விமானிகள், பணிப்பெண்கள் உங்களைப் போன்ற உத்தியோகஸ்தர்கள் இந்த JETLAG னால் தொடர்ந்து பாதிக்கப்படும் போது - மேற்கூறிய பிரச்சினைகளைத் தவிர தூக்கம் இன்மை, சீரற்ற தூக்கம், MOOD CHANGE எனப்படும் குறைநலன் மாற்றங்கள், எரிச்சல்குணம், வயிறு சம்பந்தமான கோளாறுகள், மூளைத் திறன் குறைவு என்பவையும் ஏற்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இப்படிப் பறந்து திரியும் பெண்களுக்கு மாதவிலக்கு வட்ட ஒழுங்கீனங்களும், விளையாட்டு வீரர்களின் செயற்திறன் குறைவும் ஏற்படுவதாக அறியப்பட்டுள்ளது. ஒரு மூன்று மணிநேர வித்தியாச வலயத்துள் பறப்பவர்கள் இப்படிப் பாதிப்படைவது குறைவு. ஆனால் அதற்கு மேல் பறப்பவர்கள்தான் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். பறக்கும் திசையும் JETLAG எனப்படும் பயணக் களைப்பு கோளாறுகளுக்கு முக்கியமாகின்றது. கிழக்குப் பக்கம் நோக்கிப் பறப்பவர்கள் - உதாரணமாக பிரிட்டனிலிருந்து இலங்கை வருபவர்களுக்கு - மேற்கு நோக்கிப் பறப்பவர்களைவிட JETLAG ஆல் அதிகம் பாதிக்கப்படுவதாக அறியப்பட்டுள்ளது. கிழக்கு நோக்கிப் பறப்பவர்கள் - தாம் கடக்கும் நேரவலயங்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு நாட்களுக்கு JETLAG ஆல் அவதியுறுவார்கள். உதாரணமாக பிரிட்டனியிருந்து இங்கு வர ஐந்து நேர வலயங்களைக் கடப்பதால் 3-4 நாட்களுக்கு அவர்களுக்கு இந்தப் பயணக்களைப்பு ஏற்படும். அதேவேளையில் இங்கிருந்து இதே தூரத்தை பறப்பவர்களுக்கு அரைப் பங்கு அதாவது 2 நாட்களுக்கு மட்டும் தான் பயணக்களைப்பு இருக்கும்.

இதுவரை இந்தப் பிரச்சினைக்கு எதுவித மருந்துகளும் கண்டறியப்படவில்லை. ஆனால் இதனைக் குறைப்பதற்கு பயணிகள் சில வழிமுறைகளை கையாளலாம். உடலியல் வட்டத்தை அல்லது உயிரியல் கடிகாரத்தை BIOLOGICAL CLOCK ஐ அனுசரித்து போவதின் அடிப்படையில் போய்ச் சேர்ந்த இடம் - பகலாய் இருந்தால் தூக்கம் வந்தாலும் தூங்காமலும் இரவு வரை விழித்திருந்து தூங்குதல் - அல்லது - இரவாயிருந்தால் - குறித்த நேரத்திற்குத் தூங்குதல் என்று பழக்கத்தை மாற்றி - பயணக்களைப்பிலிருந்து விடுபடலாம்.

**கேள்வி:** எனது தந்தை, வயது 53, நீரிழிவு நோயாளி. சமீபகாலமாக பார்வைக் கோளாறு ஏற்பட்டுள்ளது. நான்கு வருடங்களுக்கு முன்னர் - CATARACT சிகிச்சை வலது கண்ணில் நடந்தது. அதன் பின்னர் அந்த கண்ணின் பார்வை குறைந்து கொண்டே வந்தது. அடுத்த வருடமே இன்னொரு சத்திரசிகிச்சை அந்த கண்ணில் நடந்தது. ஒருமாதம் கழித்து - விழித்திரை கழன்று வருகின்றது (RETINAL DETACHEMENT) என்று அதே கண்ணில் மற்றொரு தடவை சத்திர சிகிச்சை நடந்தது. இதன்பின்னர் அவரது கண் கோளத்தினுள் டாக்டர் SILICON OIL கொண்டு நிரப்பி, விழித்திரை கழன்று வருவதைத் தடைசெய்தார். சமீப காலமாக - இடது கண்ணில் பார்வைக் கோளாறு ஏற்பட்டுள்ளது. அவரது பார்வை இல்லாமல் போய்விடுமோ என்று நான் அஞ்சுகின்றேன். கண்களுக்கு, ஏதாவது 'மாற்றுக்கண்' TRANSPLANT பொருத்தும் சிகிச்சைகள் வழக்கத்தில் உள்ளதா? எனது பிரச்சினை தீர உதவவும்.

**பதில்:** உங்கள் தந்தைக்கு பல சத்திர சிகிச்சைகள் செய்தும் வலது கண் பயனற்றுப் போனது கேட்டு மிகவும் வருந்துகின்றேன். நீரிழிவு நோய் - நோயாளர்களைப் பயங்கரமாக பாதிக்கும் விடயம் கண்களிலே தான் இருக்கின்றது. நீரிழிவு நோய் காரணமாக கண்களில் புரை (CATARACT) ஏற்படுகின்றது. கண்களின் விழித்திரையில் உள்ள சிறு இரத்தக் குழாய்களில் இரத்தக் கசிவு ஏற்பட்டு விழித்திரை பாதிப்படைகிறது. VITREOUS HUMOUR என்கின்ற கண் கோளத்தில் நிரப்பப்பட்டுள்ள ஜெல் போன்ற திரவத்தில் இரத்தப்பெருக்கு ஏற்பட்டு பார்வைக் கோளாறு ஏற்படுகிறது. இதன் காரணமாக - காலம் செல்லச் செல்ல - இந்தத் திரவம் சுருங்குவதால் அது விழித்திரையை தன்னோடு இழுத்து விழித்திரையை கழற்றிவிடுகிறது. இதனால் தான் நீரிழிவு நோயாளர்கள் - எதுவித பிரச்சினைகளை காணவிடிலும் - குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவையாவது கண் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று விசேடமாக பரிந்துரைக்கப்படுகிறது. காலம் தாழ்த்தி இந்தப் பிரச்சினைகளுக்கு வைத்தியம் செய்வதால் எதுவித பயனும் நிச்சயம் கிட்டாது என்பதை நீரிழிவு நோயாளர்கள் யாவரும் மனதில் கொள்ளவேண்டும். தற்போதுள்ள நிலைமையில் உங்கள் தந்தையின் கண்களைக் காப்பாற்ற வழியேதும் இல்லை. TRANSPLANT என்கின்ற மாற்றுசிகிச்சை - கண்களின் வெளிப்புற CORNEA என்கின்ற பகுதி பழுதடைந்தால் மட்டுமே செய்யலாம். ஆனால் பழுதடைந்த விழித்திரைக்கு மாற்றீடு சிகிச்சை எதுவுமே இல்லை. எதற்கும் உடனே - ஒரு கண் நிபுணரின் ஆலோசனை பெறவும். ★



(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அமைப்புக்களின் கூட்டு முயற்சிகளின் முதல் வேலைத்திட்டங்களாக இலங்கைக்கெதிரான பொருளாதாரத்தடையை உருவாக்குவதோடு அதன் அடிப்படையில் இலங்கைக்கெதிரான வரிச்சலுகைகளை நிறுத்தக்கோரி அரசியல் மட்டங்களில் அழுத்தங்களைக் கொடுப்பதாகவும் இருக்கிறது.

அத்துடன் தாயகத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், உறுப்புக்களை இழந்தோருக்கும் உதவவும், பெற்றோர் உறவினர்களிடம் இருந்து பிரிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவவும், தடுத்து வைக்கப்பட்டிருப்போருக்கு உதவவும் நாட்டில் உள்ள மானிடநேய அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து செயற்திட்டங்களை உருவாக்கும் முயற்சிகளை பல தடைகளையும் மீறி செய்து வருகிறது.

2009ஆகஸ்டில் பாரிஸில் உலக தமிழர் பேரவை ஆரம்பித்து வைக்கப்பட்ட போது இலங்கைத் தமிழர்களின் நலன்கள் சார்ந்த பல்வேறு தீர்மானங்கள்



பேரவையில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் சிலர்..

நிறைவேற்றப்பட்டன.

* எந்த வித சட்டப் பிரதிநிதித்துவமும் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களையும், ஆண்களையும் பெண்களையும் விடுவிப்பதற்கான உதவிகளைச் செய்வது.

* இலங்கையில் மனிதாபிமானத்திற்கு எதிராகப் போர்க்குற்றங்களை புரிந்த குற்றவாளிகளையும் - நபர்களையும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த உதவுவது.

* இலங்கையிலுள்ள தமிழர்கள் ஜனநாயக ரீதியாக வழங்கிய மக்களாணையின் அடிப்படையில் அங்கு இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை காணுவதற்கு உதவும் வகையில் சர்வதேச அரசுகளையும், அரசசார்பற்ற நிறுவனங்களையும் ஓரணியில் திரட்டுவது.

தமிழர் பேரவையின் மூன்று கொள்கைகளையும் நிறைவேற்றுவதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் இருந்து உறுதியான, கட்டமைக்கப்பட்ட உலகளாவிய பங்களிப்பை உடைய ஒருங்கிணைப்புக் குழு ஒன்றை உருவாக்குவதற்காகவே இதுவரை உலகத் தமிழர் பேரவை செயற்பட்டது.

உலகத்தமிழர் பேரவையானது தனது முதலாவது கொள்கையை செயற்படுத்தும் நோக்கத்தின் முதல் கட்டமாக - வன்னியில் அண்மையில் நடந்த கடும் சமரால் பெற்றோரை இழந்த, சிறப்புத் தேவைப்பாடு உள்ள ஆயிரம் தமிழ்ச் சிறார்களுக்கும், 450 ஆதரவற்ற குடும்பங்களுக்கும் நிதி உதவி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் 235 சிறுவர்களுக்கும் 90 குடும்பத்தினருக்கும் நிதி உதவி வழங்குவது ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. இரண்டாவது கொள்கைக்கு ஏற்ப,யுத்தக் குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்த ஆதாரங்களையும் ஆலோசனைகளையும் திரட்டும் நடவடிக்கைகளில் மேற்படி ஒன்றியம் ஈடுபட்டு வருகின்றது.

உலக தமிழர் பேரவையின் மூன்றாவது கொள்கைக்கு ஏற்ப - இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நாடுகளிலும் உள்ள சிரேஷ்ட அரசியல்வாதிகள், அரச ஊழியர்கள், அரசசார்பற்ற அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் உறுப்பினர்கள் ஆகியோருடன் பல்வேறு நாடுகளில் உள்ள நிறுவனங்களின் ஊடாக கருத்தாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

லண்டனில் உத்தியோக பூர்வமாக ஆரம்பமாகி இருக்கும் இந்தத்தமிழர் பேரவை மூலமாக உலகளாவிய தமிழர்களின் பலவேறு உரிமைகளையும், இலக்குகளையும் மிக இலகுவான முறையில் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

அத்தோடு, இடம்பெற்றுக் கொண்டிருக்கும் உலகத் தமிழர் பேரவை மாநாட்டில்-உலகத்தமிழ்ப் பெண்கள் பேரவையும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இலங்கையிலும், சர்வதேசங்களிலுமுள்ள தமிழ் பெண்கள் மத்தியில் ஒருமித்த பிரதிநிதித்துவத்தை உருவாக்கி தமிழ் பெண்கள் கட்டமைப்பை வலுப்படுத்துவதே இந்த மாநாட்டின் தூர நோக்கமாகும்.

உலகத் தமிழர்கள் சார்ந்த பல்வேறு எதிர்காலத் திட்டங்களை தீட்டவும், இந்த மாநாடு பயன்படுத்தப்படவுள்ளது. மேலும், அமெரிக்கா-கனடா போன்ற நாடுகளில் இலங்கை அரசுக்கெதிரான புறக்கணிப்புப் போராட்டங்களை துரிதப்படுத்துவதோடு, யுத்தக் குற்றங்களையும் -மனிதாபிமானத்திற்கு எதிரான நடவடிக்கைகளையும் மேற்கொண்டவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன் வைப்பதுமே உலகத் தமிழர் பேரவையின் மாநாட்டின் அதிமுக்கிய நோக்கம் என்றும் கூறப்படுகிறது.

இந்த மாநாட்டுக்கு அனுமதி வழங்கி முழு ஆதரவு வழங்கியது பிரிட்டனின் ஓர் அதிரடி நடவடிக்கை ஆகும்.


## பரதநாட்டிய அரங்கேற்றம்



கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவியான செல்வி. பிரஸ்ணியா ஜெயநாயகத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 6 ஆம் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி, புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இது கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் சிஷ்யைகளின் 100 ஆவது அரங்கேற்றம் ஆகும். இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக தமிழ் நாட்டில் இருந்து வருகை தரும் பத்மபூஷண் கலாநிதி பத்மா சுப்பிரமணியம் கலந்து சிறப்பிக்கிறார்.

# பெண்களுக்கான வயாகரா..!







சர்வதேச பாலியல் மருத்துவக் கருத்தரங்கில் அது ஒரு விறுவிறுப்பான கட்டம்.

- நாளுக்கு நாள் ஆண்களுக்கு விறைப்புத்தன்மை குறைந்து போக என்ன காரணம்?

- அந்த குறைபாட்டிற்கு காரணம் மனதா, உடலா?

- அதனைக் கண்டறிவது எப்படி?

- சரி செய்வது எப்படி...?

- இப்படி கேள்விகள் டாக்டர்களிடமிருந்து பறந்து வந்து கொண்டிருக்க, நிதானமாக பதிலளித்துக் கொண்டிருந்தார், டாக்டர் கணேசன் அடைக்கண். இவர் சர்வதேச பாலியல் ஆராய்ச்சி நிபுணர். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக மகப்பேற்றுத்துறை டாக்டர்.

இத்தகைய மாநாடுகள் ஒருபுறம், சர்வதேச செக்ஸ் ஆராய்ச்சிகள் மறுபுறம். இவை எல்லாம் நடந்து கொண்டே இருந்தாலும்... சமூகம் சந்திக்கும் பாலியல் பிரச்சினைகள் குறைந்திருக்கின்றனவா?

- இல்லை.

இளம் வயதிலேயே உடலுறவு வைத்துக் கொள்வது, திருமணத்திற்கு முன்பே கர்ப்பம் தரிப்பது, திருமணத்திற்கு முந்தைய நாள் காதலனோடு ஓடிப்போய் விடுவது, திருட்டுக் காதலை தொடர கணவரையே கொலை செய்வது என்பதெல்லாம் நடந்து கொண்டு தானே இருக்கின்றன. இன்னொரு புறத்தில் செக்ஸில் திருப்தி அடையும் மனைவிகளின் எண்ணிக்கை குறைகிறது. விவாகரத்துக்கள் அதிகரிக்கின்றன.

டாக்டர் கணேசன் அடைக்கண் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில்...

**நீங்கள் வயாகராவில் இருக்கும் 'நைட்ரிக் ஆக்சைட்' செயல்பாடு பற்றி ஆராய்ச்சி செய்து உலகத்திற்கு உணர்த் தினீர்கள். தற்போது பெண்களுக்கான வயாகரா கண்டு பிடிப்பு எந்த நிலையில் இருக்கிறது?**

"ஆண்களுக்கான வயாகரா எப்படி செயல்படுகிறது என்பதை முதலில் விளக்குகிறேன். செக்ஸின் அடிப்படையே ஆசைதான். ஓர் ஆண், இன்னொரு பெண்ணோடு உடலுறவு கொள்ள நினைக்கும் போது ஆணின் நரம்பு நாளங்களில் 'நைட்ரிக் ஆக்சைட்' என்ற வாயு திரவம் உருவாகும். அப்போது செல்களில் இருக்கும் 'சைக்கிளிங் சி.ஜி.எம்.பி.' என்பது ஆண்குறி திசுக்களை நீளச்செய்யும். அப்போது உடலில் இருந்து, 'போஸ்போ டைஎஸ்டரேஸ்' என்பது சுரந்து உடலுறவு ஆசையை குறைக்கும் விதமாக செயல்படும். வயாகரா சாப்பிட்டால், இந்த ஆசைக் குறைப்பு திரவத்தை சுரக்காமல் செய்யும். சைக்கிளிங் சி.ஜி.எம்.பியை அதிகரிக்கச் செய்யும். இதில் நைட்ரிக் ஆக்சைட் வாயு திரவம் செக்ஸ் செயல்பாட்டிற்கு உந்துதலாக இருக்கும் என்பதை நான் கண்டுபிடித்தேன்.

இனி பெண்களின் பிரச்சினை பற்றி சொல்கிறேன். பெண்களின் செக்ஸ் ஆசைகள், தூண்டுதல், உச்சகட்டம் போன்றவைகளைப் பற்றிய ஆய்வுகள் மிக மந்த கதியில் தான் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கு காரணம் ஆண்களின் சுயநலம். ஒரு ஆணுக்கு செக்ஸில் என்ன பிரச்சினை இருக்கிறது என்பதை அவனது ஜோடியான பெண்ணால் கண்டுபிடித்து விட முடியும். அவளுக்கு இருக்கும் குறைப்பாட்டை அவளே கண்டுபிடித்தாலும், வெளியே சொல்வதில்லை. கல்வி என்பது ஆண்- பெண், சமூகம் சார்ந்த பிரச்சினை. அதனால் பெண்களுக்கும் வயாகரா போன்ற தூண்டுதல் மருந்துகள் தேவை என்பது உணரப்பட்டிருக்கிறது.

பெண்களின் வயாகரா கிட்டதட்ட கண்டுபிடிக்கப் பட்டுவிட்டது. பெண்களின் மூளையில், உடல் இயக்கத்தில் ஏற்படுத்தும் மாற்றங்களை அமெரிக்காவில் ஆராய்ந்து இறுதி முடிவுக்கு வந்திருக்கிறார்கள். மனித குரங்குகளைக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் இன்னொரு கேள்வி, பெண்கள் தரப்பில் இருந்து எழுப்பப்பட்டிருக்கிறது. நாங்கள் செக்ஸில் திருப்தி அடையவில்லை என்பது போன்ற மாயையை உருவாக்கி, எங்களுக்கு மருந்து தயாரிக்கிறீர்கள். அதன் மூலம் நாங்கள் செக்ஸ் பற்றியும், தூண்டுதல் மருந்து பற்றியுமே அதிகமாக சிந்திக்கும் நிலைக்கு தள்ளப்பட்டு விடுவோம்' என்று சொல்கிறார்கள். இதுவும் சிந்திக்க தகுந்ததாக இருக்கிறது. பெண்களுக்கான வயாகரா இரண்டு ஆண்டுகளுக்குள் விற்பனைக்கு வந்துவிடும்.

**பெண்களின் ஆசையைத் தூண்டும் மருந்துகள் வந்து விட்டால், அதை பெண்களுக்கு தெரியாமலேயே பானங்களில் கலந்து கொடுத்து பெண்களை ஆண்கள் வீழ்த்தும் நிலை உருவாகி விடுமே?**

"இதுவும் சிந்திக்க வேண்டிய விஷயம்தான். ஆனால் ஆண்களுக்கு தெரியாமல் வயாகராவை கலந்து கொடுத்து, அவர்களின் ஆசையைத் தூண்டும் விதத்தில் இதுவரை எந்த சம்பவமும் நடக்கவில்லை. அதனால் பெண்களை மாத்திரைகளால் வசீகரிக்கும் வாய்ப்பு குறைவுதான். இன்னொரு விஷயத்தையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆணோ, பெண்ணோ யாராக இருந்தாலும் அவர்கள் மூளையில் (அதாவது மனதில்) ஆசை உருவானால்தான் உடலால் அதை வெளிப்படுத்த முடியும். அதனால் மனமிருந்தால் தான், செக்ஸில் மார்க்கம் உண்டு." *

# இளமைத்தோற்றம் தரும் இனிய ஆடைகள்



இளமையாக இருப்பதற்கு அனைவருமே விரும்புகின்றனர். வயதானவர்கள் கூட பியூட்டி பார்லருக்குச் சென்று தங்கள் தோற்றத்தை இளமையாகக் காட்டிக் கொள்ள முயற்சி செய்கின்றனர். என்ன தான் பியூட்டி பார்லருக்குச் சென்றாலும், ஒருவருடைய இளமைத் தோற்றத்தைத் தீர்மானிப்பது அவர் அணியும் ஆடைகளே. ஒருவருடைய நிறத்துக்கும், உருவத்துக்கும் பொருத்தமான ஆடைகளை அணிந்தால், அவர் அதிக வயதுடையவராக இருந்தாலும், குறைந்த வயதுடையவர் போல இளமைத் தோற்றத்துடன் காட்சியளிப்பர்.

இன்றைக்குப் பெரும்பாலானவர்கள் விரும்புவது தொளதொளவென்று இல்லாமல், அளவு குறைவாக இருக்கும் ஆடைகளைத்தான். முட்டியைத் தொடும் சட்டையும், தரையைக் கூட்டும் பேண்ட்டும் அணிந்த காலம் மலையேறிப் போய்விட்டது. அதேபோல பெண்களும் முழங்கை வரை நீளும் ரவிக்கையையும், சேலையையும் மறந்து, ஸ்கேர்ட், டி-சேர்ட், டொப்ஸ், கவுன் என்று மாறி விட்டனர். அதிலும் தற்போது மினி ஸ்கேர்ட், ஸ்லீவ்லெஸ் டி-சேர்ட் மற்றும் டொப்ஸ் என்று ஆடைகளின் அளவு குறைந்து கொண்டே வருகிறது.

தற்போது நீங்கள் விரும்பும் பிரபல கம்பெனிகளின் ஆடைகளை தவணை முறையில் பணம் கொடுத்து வாங்கும் வசதியும் வந்து விட்டதால், உங்களுக்கு விருப்பமான ஆடைகளை வாங்குவதற்குத் தடையேதுமில்லை. நீங்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை மட்டும் செலுத்தி விட்டு, மீதியைக் கொஞ்சம் கொஞ்சமாகச் செலுத்தினால் போதும். இதனால் கொண்டு செல்லும் பணத்துக்கு ஏற்ற ஆடையாகப் பார்த்து தேர்ந்தெடுப்பது குறைந்து, எமக்கு விருப்பமான அதிக விலையுள்ள ஆடைகளைத் தேர்ந்தெடுப்பது அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் சேலை கட்டும் பெண்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. குறிப்பாகத் தென்னிந்தியாவின் பாரம்பரிய உடையாகவும் சேலை இருப்பதால், இங்கு விதவிதமான சேலைகள் கிடைக்கின்றன. எப்போதும் அணியாவிட்டாலும், விழாக்காலங்களில் சேலை அணிவதை பெரும்பாலான இளம்பெண்கள் விரும்புகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு சேலை கட்டத் தெரியாததால், அவர்களின் அம்மாக்களே சேலை கட்ட உதவி செய்கின்றனர்.

இவர்களின் கவலையைத் தீர்க்கும் விதமாக தற்போது 'ரெடிமேட் சேலைகள்' தயாரிக்கப்பட்டுள்ளன. இதை 2 நிமிடத்திலேயே அணிந்து கொள்ளலாம். கொசுவம், மடிப்பு என எந்தத் தொந்தரவும் இல்லாமல், எல்லாம் ஏற்கனவே மடிக்கப்பட்டு 'பின்' செய்யப்பட்டிருக்கும். இதுதவிரவும், இரண்டு பக்கமும் அணிந்து கொள்ளக் கூடிய ரிவர்சபள் சேலைகள், பாக்கெட் வைத்த சேலைகள், வஸ்திரகலா பட்டு என்று புதிய வடிவமைப்புடன் கூடிய சேலைகளைத் தயாரிப்பதில் சென்னை முதலிடத்தில் உள்ளது.

ஆடை உலகில் ஒவ்வொரு நாளும் புதுப்புது மாற்றங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அதில் ஒன்று தான் பாவாடை, சல்வார் கம்மீஸ், சுடிதார் ஆகியவற்றில் உள்ள நாடாவுக்குப் பதிலாக எலாஸ்டிக் வைத்து பயன்படுத்துவது. சிலருக்கு இடுப்பு மட்டும் பெரியதாக இருக்கும். இவர்களுக்கு எலாஸ்டிக் வைத்த ஆடைகள் நன்கு பொருந்திப் போகும். இதுதவிர, ஜிப் வைக்க வேண்டிய இடத்தில் பட்டன் வைப்பது, ஒரு பக்கம் மட்டும் ஸ்லீவ் வைத்துக் கொள்வது என்று மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

தற்போது கர்ப்பமான பெண்களுக்கான உடைகளும் வடிவமைக்கப்படுகின்றன. கர்ப்பிணிகளைப் பொறுத்தவரை, ஒவ்வொரு நாளும் அவர்களின் உடலில் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். சில சமயம் முதல் வாரம் அணிந்த ஆடையை மறுவாரம் அணிய முடியாமல் போய் விடும். இதைத் தவிர்ப்பதற்காக கர்ப்பிணிகளுக்கென்று தனி உடைகள் வடிவமைக்கப்படுகின்றன. இந்த ஆடைகள் அணிவதற்கு எளிதாகவும், உடலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப நெகிழ்ச்சி அடைவதாகவும் இருக்கும். அதேநேரம் துவைப்பதற்கும் எளிதானதாக இருக்கும்.

சிந்தடிக், கொட்டன் போன்ற துணிகளில் இவை தயாராகின்றன. இவற்றில் பிரிண்ட் மற்றும் எம்ப்ராய்டரி செய்யப்பட்டவை, பிளெய்ன் என பல வகைகள் உள்ளன. இதைப்போன்ற ஆடைகள் பெரும்பாலும் அதிக நீளமுடையதாக இருக்கும். சில ஆடைகளில் ஸ்லீவ் குறைவாகவும், நீளம் அதிகமாகவும் இருக்கும். பல வகையான வண்ணங்களில் இவை கிடைக்கின்றன. இவற்றுடன் சல்வார், பேண்ட், கோட் ஆகியவற்றை அணிந்து கொள்ளலாம். கர்ப்ப காலத்தில் மட்டும்தான் அணிய வேண்டும் என்றில்லாமல், எப்போது வேண்டுமானாலும் இவற்றை அணிந்து கொள்ளலாம் என்பதும் குறிப்படத்தக்கது.

இளசுகளை மட்டுமல்லாமல், நடுத்தர வயதினரையும் ஈர்த்துள்ள ஆடைகளுள் ஒன்று ஜீன்ஸ். அணிவதற்கு எளிதாக உள்ளது, துவைக்காமல் பயன்படுத்தலாம், நீண்ட நாட்களுக்குப் பயன்படுத்தலாம், உடற்கட்டை நன்கு எடுத்துக் காட்டுகிறது போன்ற காரணங்களால் ஜீன்ஸை விரும்புபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. முதலில் ஆண்கள் மட்டுமே பயன்படுத்தி வந்த ஜீன்ஸ், இன்று பெண்களாலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. பூட்கட், ஸ்ட்ரெய்ட் பட் என பலவகையான ஜீன்ஸ்கள் உள்ளன. பெண்களுக்கெனத் தனியாக ஜீன்ஸ்கள் வடிவமைக்கப்படுகின்றன. தற்போது கர்ப்பிணிகளுக்கான ஜீன்ஸ்களும் கிடைக்கின்றன.

சுடிதாரைப் போலவே இருக்கும் லெகின்ஸ், சுடிதாரிலிருந்து சற்றே மாறுபடுகிறது. சுடிதாரில் இருக்கும் நாடாவுக்குப் பதிலாக இதில் எலாஸ்டிக் வைக்கப்பட்டிருக்கும்.



மெல்லிய துணியால் தயாரிக்கப்பட்ட இவை, உடலின் வெப்பநிலையை சமச்சீராக வைத்துக்கொள்ள உதவுகின்றன. லைட் வெயிட் சுடிதார்கள் அணிவதற்கு எளிதாகவும், ஸ்டைலாகவும் இருக்கும்.

தற்போது அம்மா - மகள் டிரண்ட் வெகுவேகமாகப் பரவி வருகிறது. அதாவது தாய், மகள் இருவரும் உடை உடுத்துவதில் தொடங்கி, ஹேர் ஸ்டைல், நகைகள், ஒப்பனைகள் அனைத்தும் ஒரே மாதிரியாக இருப்பது இதன் சாராம்சம். இப்போதுள்ள அம்மாக்கள் தங்களுடைய மகள்களைப் போலவே இளமையாக இருக்க விரும்புகின்றனர். அதற்கேற்றவாறு உடற்பயிற்சி செய்து தங்களுடைய உடலை கட்டுக்கோப்பாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்கின்றனர்.

விளம்பரங்களில் கூட அம்மா - மகள் இணைந்து வருவது தற்போது அதிகரித்துள்ளது. அம்மா - மகளுக்கான பேஷன் ஷோ, சிறந்த அம்மா - மகள் போட்டி ஆகியவையும் பெரும்பாலான இடங்களில் நடத்தப்படுகின்றன. இவை தாய்க்கும், மகளுக்கும் இடையே அதிகப்படியான நெருக்கத்தை உருவாக்குகின்றன. தவிரவும், சின்னக் குழந்தைகள் அணியும் உடைகளில் உள்ள டிசைன்களைப் போலவே, அம்மாவின் உடைகளிலும் டிசைன்கள் வடிவமைக்கப்படுகின்றன.

'பாய்பிரண்ட் டிரெண்டும்' தற்போது அதிகரித்து வருகிறது. அதாவது, தங்களுடைய காதலன் அல்லது கணவருடைய ஜீன்ஸ், சட்டை, டி-சேர்ட், பேண்ட், கோட் போன்றவற்றை அணிந்து கொள்வார்கள். அதாவது ஆண் உடைகளை பெண்ணும் அணிவது இந்த கலாசாரம் ஆகும். வீட்டில் இருக்கும் ஆடைகளையே அணிந்து கொள்வதால், இதற்கெனத் தனியாக செலவு செய்ய வேண்டியதில்லை.

தற்போது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் ஆடைகள் தயாரிக்கப்படுகின்றன. அதாவது பருத்தி, வாழைமட்டை போன்ற இயற்கைப் பொருட்களிலிருந்து நூல் தயாரித்து, அதில் இயற்கையாகத் தயாரிக்கப்பட்ட வண்ணங்களைச் சேர்த்து ஆடைகள் நெய்யப்படுகின்றன. இந்த மாதிரியான ஆடைகளை தற்போது பெரும்பாலானவர்கள் விரும்பி வாங்குகின்றனர். ✱

# ✱கச்சைதீவு திருவிழா

வருடம் தோறும் கச்சத்தீவில் பெப்ரவரி கடைசி வாரத்தில் நடக்கும் அந்தோனியார் திருவிழா, இந்த மாதம் 26, 27, 28 ஆகிய மூன்று தினங்களில் நடைபெறுகின்றது

இந்திய இலங்கை மீனவர்கள் கலந்து கொள்ளும் இந்தத் திருவிழா, இலங்கை இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே போர் உச்சத்தில் இருந்த காரணத்தால், கடந்த ஐந்து வருடங்களாகவே நடைபெறவில்லை.

கடந்த ஆண்டு போர் முடிவுக்கு வந்துவிட்ட நிலையில், இலங்கை அரசும், யாழ்ப்பாணம் மறை மாவட்டமும், இந்த வருடம் அந்தோனியார் திருவிழா கோலாகலமாக நடைபெறும் என்றும் அதில் இந்தியா இலங்கையைச் சேர்ந்த மீனவர்களும், பொதுமக்களும் கலந்துகொள்ளலாம் என்றும் அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கின்றன.

கச்சத்தீவுக்கு குடும்பத்தோடு சென்று இரண்டு நாட்கள் தங்கியிருந்து, சந்தோஷமாகக் கொண்டாடும் திருவிழா என்பதால், மீனவர்கள் மத்தியில் சந்தோஷம் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருக்கிறது. என்றாலும் அதில் ஒரு சிக்கல்!

திருவிழாவில் இரண்டு நாட்டு மீனவர்களும், பொதுமக்களும் கலந்துகொள்ளலாம் என்று இலங்கை அரசு அறிவித்திருந்தாலும், இந்திய மீனவர்களும், பொதுமக்களும் திருவிழா வுக்குச் செல்ல இந்திய அரசும் அனுமதி அளிக்க வேண்டும்.

அப்படி அனுமதி தந்தால்தான் கடல் கடந்து மீனவர்கள் கச்சத்தீவுக்குச் செல்ல முடியும். எனவே, திருவிழாவுக்குச் செல்ல மீனவர்களை இந்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கை இந்திய மீனவர்களால் விடுக்கப்பட்டுள்ளது.

கச்சத்தீவுத் திருவிழா என்பது இந்தப் பகுதி மீனவர்களின் உரிமைத் திருவிழா. அந்தத் தீவில் இருக்கும் அந்தோனியார் ஆலயத்தை நிறுவியதே ராம்நாதபுரம் மாவட்டம் தொண்டியைச் சேர்ந்த சீனிக் குப்பன் என்ற மீனவர்தான். அப்போது அந்தத் தீவு இந்தியா வசம் இருந்தது. 1974 இல், இலங்கைக்கு இந்தியா கச்சத் தீவை தாரை வார்த்துக் கொடுத்த போது, போடப்பட்ட ஒப்பந்தங்களில் கூட, 'வருடா வருடம் இந்தத் தீவில் நடைபெறும் அந்தோனியார் திருவிழாவில் இரு நாட்டு மீனவர்களும் கலந்து கொள்ள எந்தத் தடையும் இல்லை' என்றுதான் இருக்கிறது.



1983 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையே போர் ஆரம்பமான பிறகு, கச்சத் தீவுத் திருவிழா அடியோடு நின்று போனது. அதன்பிறகு, இருநாட்டு அரசுகளுக்குமிடையே நடந்த பேச்சுக்களின் படி 2002, 2003, 2004, 2005 ஆகிய நான்கு வருடங்கள் திருவிழா நடந்தது.

இப்போது, இலங்கை அரசோ திருவிழாவை அறிவித்து, இந்திய மீனவர்களுக்கும் அழைப்பு விடுத்திருக்கிறது.

இந்நிலையில், ராமேஸ்வரம் மீனவர்கள் மிகுந்த எழுச்சியோடு திருவிழாவுக்குச் செல்லத் தயாராகி வரும் மக்களுக்கு 'தாராளமாக அனுமதி கொடுங்கள்' என்ற பச்சை கொடி கலைஞர் காட்டி விட்டாராம்.

இந்தத் தகவல் அரசல் புரசலாக மீனவர்கள் மத்தியில் பரவி, ஒட்டுமொத்த ராமேஸ்வரம் தீவு மீனவக் குடும்பங்களும் திருவிழாக் கொண்டாட்டத்தை ஆரம்பித்துவிட்டன. ✱




நிரேஷ்,
இரத்தினபுரி.

**கேள்வி:-** 'ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்...!' என்கிறார்களே. ஆவது பெண்ணாலா...?

**பதில்:-** ஆவது பெண்ணினாலும் தான் என்பதை மறுக்க முடியாதல்லவா?

விவேக்,
ஜா-எல.

**கேள்வி:-** பிரம்மச்சாரி - சம்சாரி. இந்த இருவரில் யார் மற்றையவரைப் பார்த்துப் பொறாமைப்படுவார்....?

**பதில்:-** பெரும்பாலும் இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை என்ற நிலைமைதான்.

நரேஷ்,
தெஹிவளை.

**கேள்வி:-** ஒரு பெண் என்னைப் பார்த்து அடிக்கடி புன்னகைக்கின்றாள். சந்தோஷப்படவா? சந்தேகப்படவா?

**பதில்:-** முதலில் சபலப்படாதீர்; பின்னர் சஞ்சலப்படுவீர்; அத்தோடு அவலப்படுவீர்..!

சரோ,
களுத்துறை.

**கேள்வி:-** ஆடி அடங்கிய பின் ஒழுக்கம் குறித்து, வெட்டில் பிளக்கின்றனவே சில 'ஞைன்ரிகள்'.....?

**பதில்:-** பல்லிழந்த பாம்பின் பரிதாப உபதேசம் அது. இயலாமையின் வெளிப்பாடாகவும் சில சமயம் இருக்கலாம்.

சஞ்சு,
மன்னார்.

**கேள்வி:-** அடுத்ததடுத்துக் குழந்தைகளைக் கணக்கு வழக்கின்றிப் பெத்துப் போடும் பெண்களின் 'பணியை' எப்படிச் சொல்வது...?

**பதில்:-** தாயாவதும் பின்னர் தயாராவதும் தான் அவர்களின் பணி போலும்.....!

மணி,
கொக்குவில்.

**கேள்வி:-** காதலித்துக் கல்யாணம் செய்தவர்கள் கூட பெண்ணை சுவைத்து விட்டும் பின்னர் விவாகரத்துச் செய்கின்றார்களே....?

**பதில்:-** என்ன யோக்கியர்களுக்கு மட்டும் தான் காதல் வருமா....?

மது,
வவுனியா.


**கேள்வி:-** நான் வேலை தேடி அலைகிறேன். ஆனால் தரகரோ வேலை பார்க்கும் பெண்ணின் குறிப்பைக் கொண்டு வந்து நெருக்குதல் தருகிறார். என்ன செய்ய...?

**பதில்:-** வீட்டு வேலைக்குத்தான் நீர் லாயக்கு என்பதைத் தரகர் புரிந்து கொண்டு விட்டார் போலும்....!

சுஹைர்,
மருதானை.

**கேள்வி:-** தளராத முயற்சிக்கு உதாரணம் கூறுங்கள்...?

**பதில்:-** எத்தனை முறை தோற்றாலும் விடாது தொடர்ந்து வேட்பு மனுத்தாக்கல் செய்யும் வேட்பாளர்களே நல்ல உதாரணம்.




நியூட்டன்,
கண்டி.

**கேள்வி:-** துண்டு விழும் தொகையால் குடும்பங்கள் துண்டாடப் படுகின்றனவே..?

**பதில்:-** வரவு எட்டணா. செலவு பத்தணா என்றால் கடைசியில் துந்தணாதான்!

சதா,
கொழும்பு.

**கேள்வி:-** மருத்துவக் கண்டுபிடிப்பில் தங்களைக் கவர்ந்தது எது பித்தரே...?

**பதில்:-** பாவத்தின் சுமையைப் பெண் மட்டுமே தாங்கிக் கொள்ள வேண்டும் என்ற இறைவனின் விதிப்பைத் தாண்டும் விதத்தில் மரபணு மூலம் தந்தையை உறுதிப்படுத்தும் மருத்துவ சாதனைதான்..!

மேகலா,
நீர்கொழும்பு.

**கேள்வி:-** பெண்கள் எதற்காக ஆண்களை மயக்குகின்றார்கள்....?

**பதில்:-** ஆண்கள் எதற்காகப் பெண்களிடம் மயங்குகின்றார்களோ.... அதற்காக...!

டேவிட்,
புத்தளம்.

**கேள்வி:-** பித்தரே....! ஐந்தில் அடங்கியது ஐம்பதில் நிமிருமா...?

**பதில்:-** சிலதுகள் எண்பதுகளிலும் எகிறுகின்றனவே....?

ஆயிஷா,
அம்பாறை.

**கேள்வி:-** வீட்டில் சுமை தாங்கி யார் ஆணா? பெண்ணா..?

**பதில்:-** இதில் என்ன சந்தேகம்? சுமப்பதும் சுமை தாங்குவதும் பெண்தானே...?

செல்வா,
குருநகர்.

**கேள்வி:-** ஏன் திருமணம் செய்தோம் என்று வெறுப்புத் தட்டுகிறதே பித்தரே..?

**பதில்:-** கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்து என்ன பயன்...? குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடி என்ன பலன்...? நீராகத் தேடியதை அனுபவித்துத்தான் ஆக வேண்டும். வேறு என்ன வழி...?

சிவன்,
மடுல்சீமை.

**கேள்வி:-** அந்தக் காலத்துக் காதலும், இந்தக் காலத்துக் காதலும் கட்டவிழ்வதில் என்ன வேறுபாடு பித்தரே...?

**பதில்:-** அது - குடத்துக்குள் விளக்கு. இது - குன்றில் விளக்கு. அது மறைவில் கட்டவிழும். இது அம்பலத்திலும் அரங்கேறும்.

நயன்,
புத்தளம்.

**கேள்வி:-** வெற்றியின் இரகசியம் என்ன..?

**பதில்:-** முயற்சி திருவினையாக்கும். Efforts never fail.

## சொற்சிலம்பம் போட்டி இல.407

சொற்சிலம்பம் 407 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் திகதி 2010 ஆம் ஆண்டு மார்ச் 14 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மார்ச் 21 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 405 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.407

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | | | | ■ |
| 11 | | 12 | | ■ | 13 | | 14 |
| | ■ | | ■ | 15 | | ■ | |
| ■ | 16 | | 17 | | ■ | 18 | |
| 19 | | | | ■ | 20 | | |
| 21 | | | ■ | 22 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இவ.406

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | றி | 2 மு | 3 க | ம் | ■ | 4 சு | 5 ப |
| ச் | ■ | 6 க | ரு | ■ | 7 அ | தி | க |
| 8 ச | 9 ம | த் | து | 10 வ | ம் | ■ | ட் |
| 11 க | டி | து | ■ | 12 ச | மி | 13 பா | டு |
| ம் | ■ | 14 வா | 15 ச | ம் | ■ | த | ■ |
| ■ | 16 பு | ர | ளி | ■ | 17 த | ம் | 18 பி |
| 19 சா | ய | ம் | ■ | 20 ந | ட | ■ | ண |
| 21 வி | ல் | ■ | 22 கு | டு | ம் | ப | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 407

**இடமிருந்து வலம்**

1. போதனை.
5. உலகம்.
7. மங்கள நிகழ்வுகளில் இதனைத் தெளித்துத்தான் வரவேற்பார்கள்.
8. குழந்தை/ சிசு.
9. காட்டு/ வன(ம்)
10. முற்கால வாகனம்.
11. அறுப்பது இதனால்.
13. விலக்கும் சொல்.
15. பெருவிருட்சமாகும் மரம்.
16. பிரதிக்ஞை.
18. (நெல்) தானியத்தின் தோல்.
19. பட்டினம்.
20. மத்தியான/ நண்பகல் சமய(ம்)
21. இடம் அல்ல.
22. உணவு/ சாப்பாடு

**மேலிருந்து கீழ்**

1. நன்மை செய்தல்/ உதவி செய்தல்.
2. ஒரு வகைத் தாவரம்/ ஓலை, இலை போன்றவற்றால் செய்யப்படும் பின்னல் தொழிலுக்கு உதவும்.
3. சுறுசுறுப்பாக இது சேகரிப்பதை மனிதன் இனிப்பாக அருந்துவான்.
4. அனைத்தும்.
5. மகள்.
6. பெறுமதி.
8. இறத்தல்/ சாதல்/ அழிதல்
12. சிறுவரின் விளையாட்டுக் கருவி.
14. அழகான/ யௌவனமான காட்சி அல்லது தோற்றம்.
15. இசைவுச் சொல்.
16. அனைத்தும்..
17. தங்களது.
18. விழ/ சொரிய.
19. புதிய
20. பெரிய

## சொற்சிலம்பம் போட்டி இல. 405

**பரிசு பெறுவோர்**

1. திருமதி. ரஞ்சினி ஜெயரத்தினம், 21,3/2A, முதலாவது சப்பல் லேன், வெள்ளவத்தை.
2. சி. கிருஷ்ணவேள், 184, A, 'மரி அமலி மகால்' மகாறம்பைக்குளம், வவுனியா.
3. த. நாகையா, 209, மார்கண்டு வீதி, கல்முனை.

**சொற்சிலம்பம் போட்டி இல. 405**

**பாராட்டுப் பெறுவோர்**

01. செல்வன். ரெ. அருண்பிரசாத், கலஹா.
02. கே. இராஜகோபால், வட்டுக்கோட்டை.
03. திருமதி. வி. சங்கீதா, செங்கலடி.
04. சு. சோபியா, யாழ்ப்பாணம்.
05. அ. சதீஸ்வரன், மல்லாவி.
06. க. கமால்தீன், ஏறாவூர் - 03.
07. சி. சசிகுமார், வட்டுக்கோட்டை.
08. அ. நடேசன், வவுனியா.
09. திருமதி. சந்திரா ரவிந்திரன், ஹட்டன்.
10. எம். ரஞ்சன், தெஹிவளை.
11. லாவண்யா துங்கராசா, புத்தூர்.
12. திருமதி. தி. செல்லதுரை, திருகோணமலை.
13. திருமதி. ஏ. சர்மிளா, அரியாலை.
14. பிரேமநந்தன் நிஷா, வவுனியா.
15. ஆ.ச. சர்மா, காரைநகர்.

# பெரியார் !

✱ ராமசாமி என்பது பெரியாரது பெற்றோர் வைத்த பெயர். பெண்ணடிமைத்தனம் குறித்துப் பெரும் பிரசாரம் செய்ததற்காக, மாநாடு கூட்டிய பெண்கள் அமைப்பினர் சூட்டிய பட்டம்தான் பெரியார். அதுவே அவரது பெயராக மாறிப் போனது!

✱ பெரியார் - நாகம்மை இருவருக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்து 5ஆவது மாதமே இறந்து போனது. அதன்பிறகு குழந்தைகள் இல்லை. ஆனால் 20க்கும் மேற்பட்ட அநாதைக் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்க ஆரம்பித்தார். படிக்க வைத்துத் திருமணம் செய்தது வரை இவரது செலவுதான். இவர்களுக்கு ஈ.வெ.ரா.ம. என்பது இனிஷியல்!

✱ தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் எடைக்கு எடை பொருட்கள் வழங்கப் பட்டது இவருக்குத்தான். வெள்ளி, நெல் மூடைகள், பேரீச்சம்பழம், பெட்ஷீட் தொடங்கி வெங்காயம் வரை வழங்கப்பட்டுள்ளது.



✱ தான் மேடையில் பேசிக் கொண்டு இருக்கும்போது யாராவது மாற்றுக் கருத்து இருந்தால் உடனே எழுந்து சொல்லலாம் என அறிவித்திருந்தார். நான் இல்லாத இடத்தில் என்னைப் பற்றிப் பேசாதே, காணாத இடத்தில் குரைக்காதே என்பார்!

✱ வால்மீகி இராமாயணம், அபதான சிந்தாமணி, தமிழ்ப் பேரகராதி ஆகிய மூன்று புத்தகங்களையும் எப்போதும் தன்னுடன் வைத்திருப்பார். சர்ச்சைக்குரிய புத்தகங்களின் அடுத்தடுத்த பதிப்புகளையும் விடாமல் வாங்குவார்!

✱ பதினைந்துக்கும் மேற்பட்ட நாய்களை வளர்த்தார். பிரெஞ்சு தொடங்கி இராஜபாளையம் வரை பல வகைகள் இருக்கும். வெளியூர் பயணத்தின்போதும் அவை வேனில் ஏறி வந்து மேடைக்குக் கீழே உட்கார்ந்திருக்கும்!

✱ தான் செய்யும் சிறு செலவுக்குக் கூட கணக்கு வழக்கு வைத்திருந்தார். அதைச் சின்ன டயரியில் குறித்துவைத்திருந்தார். வருமானவரி பிரச்சினை ஒன்று வந்தபோது, இந்த டயரிகளைப் பார்த்து நீதிபதிகளே ஆச்சரியப்பட்டார்கள்!

✱ வாரம் ஒருமுறை, பத்து நாளைக்கு ஒருமுறைதான் குளிப்பார். 'குளிக்க வேண்டும் என்கிற ஞாபகமே எனக்கு வாறதில்ல. அதை ஒரு தொந்தரவாக நினைக்கிறேன்' என்பார்!

✱ தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வந்தவர் பெரியார்தான். ணா, லை என்றெல்லாம் 75 ஆண்டுகளுக்கு முன்னால் முதன்முதலாக எழுத ஆரம்பித்தவர் அவர்தான்!

✱ இளமைக் காலத்தில் தான் செய்த சேஷ்டைகளைப் பகிரங்கமாகச் சொன்னவர். மைனர் வாழ்க்கை நடத்தியவன் தான். ஆனால், இதுநாள் வரை மது அருந்தியதே இல்லை. ஆனால், பலருக்கும்-வாங்கிக் கொடுத்திருக்கிறேன். நான் வியாபாரியாக இருந்தபோது பொய் பேசி இருப்பேன். பொதுவாழ்க்கைக்கு வந்த பிறகு ஒரு பொய்கூடச் சொன்னதில்லை. ஒழுக்கக் கேடான காரியத்தையும் செய்ததில்லை என்று அறிவித்தவர்!

✱ உங்களுடைய அரசியல் வாரிசு யார் என்று கேட்டபோது, எனக்கு அரசியல் வாரிசு என்று யாரும் கிடையாது. என்னுடைய கொள்கைகளும் கருத்தும் தான் வாரிசு என்றார்!

✱ தன்னுடைய மனைவி நாகம்மை, அம்மா சின்னத் தாய் ஆகியோர் இறந்த போது, தனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது என்று பகிரங்கமாக அறிவித்தார். 'எனக்கு இருந்த குடும்பத் தொல்லைகள் ஒழிந்தன' என்று காரணம் சொன்னார்!

✱ இன்றைக்குப் பிரபல்யமாக இருக்கும் செல்போன், கம்யூட்டர், வாக்மேன், வெப்கேமரா, டெஸ்ட்டியூப் பேபி, உணவு கேப்சூல்கள், குடும்பக் கட்டுப்பாடு அனைத்தைப் பற்றியும் 65 ஆண்டுகளுக்கு முன்னால் இனிவரும் உலகம் என்ற கட்டுரையில் எழுதி தன்னுடைய விஞ்ஞான அறிவை வெளிப்படுத்தியவர் பெரியார்!

✱ இரண்டு கவர்னர் ஜெனரல்கள் நேரில் வந்து சந்தித்து 1940, 42 ஆண்டுகளின் சென்னை மாகாணத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளச் சொன்னபோது மறுத்தார். நெருப்பு கூடக் குளிர்ச்சி ஆகலாம், வேப்பெண்ணெய் தேன் ஆகலாம். ஆனால், பதவியேற்றவன் யோக்கியனாக இருக்கவே முடியாது என்றார்!

✱ தனது மனதில் பட்டதைத் தயவு, தாட்சண்யம் பார்க்காமல் சொல்லிவிடுவார். வெற்றிலை, பாக்கு கடை வியாபாரிகள் சங்க ஆண்டு விழாவுக்கு பேசப் போனவர், உங்களால் இந்த நாட்டுக்கு எந்த நன்மையும் இல்லை, எனவே, கடைகளைக் மூடி விட்டு, மக்களுக்குப் பயன்படக்கூடிய வேலையைப் பாருங்கள் என்று சொல்லி விட்டு வந்தார்!

✱ தன்னுடைய குடும்பச் சொத்தை எடுத்து வந்து பொது வாழ்க்கையில் செலவு செய்தார். பொது வாழ்க்கையில் கிடைத்ததை அனைவருக்கும் பயன்படுவது மாதிரி பொது உடமையாக்கினார். அவரது சேகரிப்பில் ஒரு சதம் கூடத் தனது குடும்பத்தினர் யாருக்கும் தரப்படவில்லை!

✱ முக்கியமானவர்கள் யார் வந்தாலும் தள்ளாத வயதிலும் எழுந்து நிற்பார். இளைஞராக இருந்தாலும் வாங்க, போங்க என்பார். பொது நிகழ்ச்சியில் கடவுள் வாழ்த்து பாடினாலும் எழுந்து நிற்பார். யாராவது திருநீறு கொடுத்தாலும் வாங்கிக் கொள்வார்!

✱ உலகம் முழுவதும் பெண்ணியவாதிகள் தங்களது வேதப் புத்தகமாகச் சொல்லும் செகண்ட் செக்ஸ் வெளிவருவதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே இவர் எழுதிய பெண் ஏன் அடிமையானாள்? புத்தகம் வெளியாகிவிட்டது!

✱ நான் சொன்னதை அப்படியே நம்பாதீர்கள். உங்களுக்குச் சரி என்று பட்டால் ஏற்றுக்கொள்ளுங்கள். நான் கொள்கையை மாற்றிக்கொண்டே இருப்பேன். எப்போது மாறுவேன் என்று எனக்கே தெரியாது என்று எல்லாக் கூட்டத்திலும் மறக்காமல் சொல்வார்!

✱ அவருடைய நண்பர்களில் எட்டுப் பேர் 42 வயதில் இறந்துவிட்டார்களாம். தானும் 42 வயதில் இறந்து போவோம் என்று நினைத்தாராம். ஆனால், அதன்பிறகுதான் தீவிரப் பொது வாழ்க்கையில் இறங்கினார்!

✱ தோழர் என்று கூப்பிடுங்கள் என்று முதன் முதலாக தமிழ்நாட்டில் அறிவித்தவர் இவர்தான்!

✱ புத்துலக தீர்க்கதரிசி, தென் கிழக்கு ஆசியாவின் சோக்ரடீஸ் என்று யுனெஸ்கோ நிறுவனம் பாராட்டுப் பத்திரம் கொடுத்தபோது, இந்த வார்த்தைகளை ஏற்றுக் கொள்ள வெட்கப் படுகிறேன் என்றார்!

✱ பெரியார் அதிகமாக உச்சரித்த வார்த்தை - வெங்காயம். வெங்காயத்தை உரித்துக்கொண்டே போனால் கடைசியில் எதுவுமே மிஞ்சாது. ஒன்றும் இல்லாத பூஜ்யப் பேர்வழிகளைத்தாக்கவே அந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறேன் என்றார்!

✱ நேரடி விவாதங்களின்போது, சொல்லுவதற்க்காக என்னை மன்னிக்கணும் என்று சொல்லிவிட்டுத்தான் பதில் சொல்வார்!

✱ 95 ஆவது வயதில் மொத்தம் 98 நாட்கள் வாழ்ந்தார். அதில் 35 நாட்கள் வெளியூர் பயணம் சென்று 42 கூட்டங்களில் பேசினார். கடைசியாக அவர் பேசிய இடம் சென்னை தியாகராயர் நகர். அந்த இடத்தில்தான் பெரியார் சிலை கம்பீரமாக நிற்கிறது!

✱✱✱

# ராசி பலன்

01-03-2010 முதல் 07-03-2010 வரை




**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்**
காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் உண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்காது.




**கார்த்திகை 2, 3, 4-ம் பாதங்கள், ரோகிணி, மிருகசிரிடம் 1,2**
காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் வசுவாசமாக இருப்பர். தாய் நலம் தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் காணப்படும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர். மன அமைதி இருக்கும்.




**மிருக சீரிஷம் 3, 4-ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**
காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு காலதாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருக்க விரும்பவர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது. மன அமைதி இருக்காது.




**புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்**
காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு காலதாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய்நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




**மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்**
காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்புப் பாதிக்கலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர் பார்ப்புகள் நிறை வேறாது. மன அமைதி இருக்காது.




**உத்திரம் 2,3,4-ம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2-ம் பாதங்கள்**
காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.




**சித்திரை 3, 4-ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்கள்**
காரியதங தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நல மில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.




**விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை**
காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு காலதாமதமாகலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷடம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். மன அமைதி இருக்காது.




**மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்**
காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ள கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். மன அமைதி இருக்காது.




**உத்திராடம் 2,3,4-ம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதங்கள்**
காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புஉண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.




**அவிட்டம் 3,4-ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3-ம் பாதங்கள்**
காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது. நண்பர்களால் தொல்லையுண்டு. மன அமைதி இருக்காது.




**பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**
காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக எண்ணம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

# மேஹாலயாவில் கிறிஸ்தவர்கள் போர்க்கொடி!


இயேசு நாதர் பியர் குவளையை தாங்கியுள்ள படம் கொண்ட பாடப் புத்தகங்களை இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மேஹாலயா வாபஸ் பெறுகிறது. மேஹாலயா, கிறிஸ்தவர்கள் செறிந்து வாழும் இந்தியாவின் பின்தங்கிய மாநிலம். இங்கு இயேசு நாதர் ஒரு கையில் பியர் குவளையையும் மறுகையில் சிகரெட்டையும் வைத்திருக்கும் படத்தை வெளியிட்டுள்ள பாடசாலைப் புத்தகங்களை திரும்பப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.ஆரம்பப் பாடசாலைகளின் பாடப் புத்தகத்தில் எழுத்துப் பயிற்சிக்கான பக்கத்தில் 1 (IDOL)என்ற எழுத்தின் கீழ் இயேசு நாதர் ஒரு கையில் பியர் குவளையையும் மறுகையில் சிகரெட்டையும் கொண்டுள்ள படம் பிரசுரிக்கப் படுடிருந்தது. மேஹாலயாவின் கல்வியமைச்சர் திருமதி அம்பாரின் லிங்காடோ இந்தப் பிரசுரத்தை வன்மையாகக் கண்டித்ததுடன் இவ்வாறு இயேசுநாதரை மோசமான நிலையில் சித்திரித்துள்ள புத்தக வெளியீட்டாளர்களுக்கு தனது அதிருப்தியையும் தெரிவித்துள்ளார். இது பற்றி மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், இயேசு நாதர் பற்றிய இத்தகைய அவமதிப்பான படத்தை பிரசுரித்தது மூலம் மாணவர் மத்தியில் தப்பான அபிப்பிராயங்களைத் தோற்றுவிக்க புத்தக வெளியீட்டாளர்கள் மேற்கொண்ட கேவலமான முயற்சி முற்றிலும் நியாயமற்றது எனவும் அர்த்தமற்றது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். இந்தப் புத்தகத்தை பார்க்கும் எந்தக் குழந்தைக்கும் இயேசு நாதர் பற்றி தப்பப்பிப்பிராயம் நிச்சயயமாக ஏற்படுமெனவும் இந்தப் பிரசுரத்தைக் கண்ணுற்றதும் தான் அளவிட முடியாத அதிர்ச்சிக்கு உள்ளாகியதாகவும் அமைச்சர் தெரிவித்தள்ளார்.

கிறிஸ்தவ சமயத்தை பாரதூரமாக நிந்தனை செய்யும் இந்த சர்ச்சைக்குரிய படத்தைதாங்கிய சகல புத்தகங்களையும் பாடசாலைகளிலும் புத்தகக் கடைகளிலும் இருந்து உடனடியாக திரும்பப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். புது டெல்லியில் இயங்கும் பிரபலமான பாடசாலைப் புத்தக வெளியீட்டு நிறுவனத்தினாலேயே இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டது. இந்த நிறுவனத்தின் புத்தகங்கள் விஷேடமாக தனியார் பாடசாலைகளில் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. மேஹாலயாவில் வாழும் 23 லட்சம் மக்களில் 70 சதவீதமானோர் கிறிஸ்தவர்கள். சர்ச்சைக்குரிய இப்பாடப்புத்தகத்தின் பிரதிகள் மேலும் பத்து பாடசாலைகளுக்கு விநியோகம் செய்யப்படவிருந்த போதெ இவ்விடயம் கல்வியமைச்சின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீதிமன்றங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் தெரிவித்த போதும் அவை எவ்வாறான நடவடிக்கைகள் என அவர் தெளிவு படுத்தவில்லை.மேஹாலயா பிரதேசத்தில் வாழும் கத்தோலிக்கர்கள் இந்த புத்தகப் பிரசுரத்தால் மிகவும் கோபமுற்றுள்ளனர். புத்தக வெளியீட்டாளருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென வற்புறுத்துகின்றனர். இப்பிரதேசத்தின் கத்தோலிக்கத் தேவாலயங்களின் பேராயர், இத்தகையதொரு படத்தை பாடசாலைப் புத்தகத்தில் பதிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி அர்த்த மற்றது எனவும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். புதுடெல்லியில் உள்ள கத்தோலிக்க தேவாலயங்களின் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், நாடெங்கும் உள்ள கத்தோலிக்கப் பாடசாலைகளில் இப்புத்தகத்தின் பாவனையை உடனடியாக ரத்துச் செய்து அப்புத்தகங்களை சுவீகரிக்குமாறு பாடசாலை நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தல் கொடுக்கப்படுள்ளது எனத் தெரிவித்தார்.

*தமிழில்-சுப்பா*

# இனி எல்லாமே புதிதுதான்!

ஸ்கை ஸ்க்ராப்பர்ஸ் என்ற பெயரில் வானை உரசும் கட்டடங்கள்தான் ஹைடெக் நகரங்களின் அடையாளம். இந்த ஸ்டைல் ஆரம்பித்த கதை சுவாரஸ்யமானது. இரண்டாம் உலகப்போரின்போது ஐரோப்பாவில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிறைய கட்டடங்கள் அழிக்கப்பட்டு விட்டன. அவற்றை மறுசீரமைப்பதா, புதிய கட்டடங்கள் கட்டுவதா என்கிற குழப்பம் ஏற்பட்டது. பல வருடங்கள் கழித்து பொருளாதாரம் நிமிர்ந்து அரசாங்கங்களின் கையில் காசு தேறியபோது, நிலாவில் காலடி எடுத்துவைத்திருந்தார் நீல் ஆர்ம்ஸ்ட்ராங். அது மனித குலத்தின் மாபெரும் தாண்டுதலாகப் பார்க்கப்பட்டது. 'இனி எல்லாமே புதிதுதான்!' என்று முடிவுக்கு வந்தார்கள் மக்கள். புதிதாகவே கட்டடங்கள் கட்ட முடிவெடுத்தன ஐரோப்பிய நாடுகள். 'எந்த மாதிரி கட்டுவது?' என்கிற கேள்விக்கு விடையாக வந்தது ஜோன் க்ரோன் மற்றும் சூஸன் ஸ்லெசின் என்கிற இரண்டு டிசைன் ஊடகவியலாளர்கள் எழுதிய புத்தகம் 'ஹைடெக்: தி இண்டஸ்ட்ரியல் ஸ்டைல் அண்ட் சோர்ஸ்' என்கிற புத்தகம். மெட்டல் பளேட்வைத்துக் கட்டப்பட்ட கெமிக்கல் லேப்களின் படங்கள் அதில் நிறைய இருந்தன. கட்ட டங்களின் உள் கட்டமைப்பு தெரிகிற மாதிரி கண்ணாடிக் கட்டடம் கட்டுகிற ஐடியா அந்த புத்தகத்தில் இருந்தே உருவானது. இன்று ஸ்கை ஸ்க்ராப்பர்களுக்கு அந்த படங்கள்தான் முன்னோடி. அது மட்டுமல்ல; ஹைடெக் என்ற வார்த்தையும் இந்தப் புத்தகத்தின் தலைப்பில் இருந்து எடுக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது. இப்போது இந்தக் கட்டடங்களில் கண்ணாடிகளுக்குப் பதில் சோலார் பேனல்கள்வைத்து, மின்சாரத் தேவைகளுக்கு பயன்படுத்த ஆரம்பித்து இருக்கிறார்கள். விமானங்கள் வந்து மோதாதவரை ஸ்கை க்ரேப்பர்கள் ஒரு வரப்பரசாதமே!




# ICE CREAM MACHINE
# ஐஸ்கிறீம் மெஷின்

## கோன் ஐஸ்கிறீம்

- எல்லாவிதமான ஐஸ்கிறீம்களும் தயாரிக்கும் முறைகளும் இலவசமாக கற்பித்துக் கொடுக்கப்படும்.
- இந்த ஐஸ்கிறீம் இயந்திரத்தின் மூலம் ஒரே முறையில் மூன்று விதமான ஐஸ்கிறீம்கள் தயாரித்துக் கொள்ள முடியும்.
- சோயா ஐஸ்கிறீம் தயாரிப்பதற்கும் மிக வசதியானது.
- கோன் ஐஸ்கிறீம்கள் கூல்ஸ் பொட், ஸ்ஸ்நெக்பார், ஹோட்டல்கள், கொமினிகேசன், பார்மசி போன்றவற்றில் விற்பனைக்கு மிகவும் உகந்தது.



குணசிங்கம் 0714726220

## WORLDWIDE EXPORTS

201, காலி வீதி இரத்மலான. (පිරිවෙන සන්ධියට ආසන්නයේ)

**Tel: 2721259, 2721055, 2738143**

# SPEZIELLE ANGEBOTE!



Schlafzimmer Chantal
Lack beige

1490.- statt 1850.-



1595.- statt 1990.-

Polstergruppe Venus,
Textil-Leder schwarz

**Möbel Ferrari** Kleine Preise

Grosse Auswahl

www.moebel-ferrari.ch

HINWIL Wasseristrasse 28
Tel. 044 931 20 40

Täglich offen von 9.00 bis 20.00 Uhr

Direkt-Kedit
- 6 Monate ohne Zins